
கோகுலம்


GOKULAM
ஜூன் '92 விலை ரூ. 3.00





நீங்கள் கம்ப்யூட்டர் துறையில் நிபுணராக விரும்பினால்
எல்லாவிஷயங்களுமே கனகச்சிதமாக இருக்க வேண்டும்.

கம்ப்யூட்டர் துறையில் நிபுணராக வேண்டும் என்பதையே
மாபெரும் இலட்சியமாகக் கொண்டவன் இவன்.
தனது புகைக்கனை அமைப்பது, வரைவது, நிர்மா
ணிப்பது, உருவாக்குவது என அனைத்தையுமே செய்பவன்.
செய்யும் அனைத்து வேலைகளையுமே வெற்றிகரமாக
முடிக்க நினைப்பவன்
ஆகையால் இவன் தேர்ந்தெடுப்பது, மிகச் சிறந்த ஜியாமெட்ரி செட்.
கோரஸ் சக்ஸஸ்: ப்ரோட்ராக்டர், டிவைடர், காம்பஸ், ஸ்கேல் —
அனைத்துமே ஆண்டுக் கணக்கில் தொல்லையின்றி நுட்பமான செயல்
திறனை அளிக்கவென்றே கச்சிதமாக உருவாக்கப்பட்டவை.
நீடித்து உழைக்கும் சிவப்பு-வெளுப்பு மெட்டல் பாக்ஸில் வருகின்றன.
எந்தத் துறையிலும் சிறப்பாக செயலாற்ற உங்களுக்குத் தேவை உன்னதமானவை.
வெற்றிக்கு அடிகோலுபவை.



கோரஸ் சக்ஸஸ் ஜியாமெட்ரி செட்
வெற்றிக்கு கருவியாக திகழ்பவை


கோரஸ் (இந்தியா) லிட்., பம்பாய்-400018. இந்தியாவெங்கும் கிளைகள் உள்ளன.

AKA/4407/TM

கோகுலம்



1992 - ஜூன் மாத இதழ்
மலர் 10 இதழ் 5



அருமைச் சிறுவர் சிறுமியரே,

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும்போது பெரும்பாலான வர்கள் விடுமுறையைக் கழித்து விட்டுப் புதிய வகுப்புக்குச் செல்ல ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பீர்கள்.

விடுமுறை தொடங்கினாலும் தொடங்கியது. கதை, கட்டுரை, பாடல், துணுக்கு என்று எல்லோரும் ஏராளமாக எழுதியனுப்பி ஆசிரி யரைத் திக்கு முக்காட வைத்திருக்கிறீர்கள்! விடுமுறைப் போட்டிகள் வேறு! நூற்றுக் கணக்கில் கடிதங்கள் வருகின்றன!

உங்களுடைய எழுத்தார்வத்தை வளர்க்கக் கோகுலம் அதிக அள வுக்கு வாய்ப்பளித்து வருவதை நீங்கள் அறிவீர்கள். வாசகர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ளும் ஒரே சிறுவர் இதழ் கோகுலம்தான் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உங்களை சுயமாக சிந்திக்க வைத்து எழுத வைக்கிறது கோகுலம். இவ்வளவு வாய்ப்புகள் கொடுத்தும் ஒரு சிலர் குறுக்கு வழியில் புகழடைய எண்ணி, மற்றவர்கள் எழுதியதைத் தாங்கள் எழுதியதாக அனுப்பி விடுகிறார்கள். ஆசிரியரை ஏமாற்றி விடலாம். ஆனால் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை ஏமாற்ற முடியுமா? இப்படி ஒரு பாடல் போன இதழில் வெளி வந்துள்ளதை நூற்றுக் கணக்கான வாசகர்கள் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். இனி இத்தகைய ஒரு தவறை எந்தத் தம்பியும் மற்றவர்களும் செய்யாமல் இருப்பார்கள் என்று நம்புவோம்.

கோகுலத்திற்கு எழுதுகிறவர்கள் தங்கள் முழு முகவரியையும் எழுத வேண்டும். முகவரி இல்லாது வரும் எதுவுமே பரிசீலிக்கப் பட மாட் டாது. பிருந்தாவனம் பகுதிக்கு எழுதுபவர்கள், அதற்கான ஆதாரங் களைக் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். பாடல்களை எழுதும் தம்பி தங்கைகள் தங்கள் வயதைக் குறிப்பிட வேணடும்.

இந்த இதழில் புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது. பள்ளி மாணவ ராக இருக்கும் போதே குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கி, எத் தனையோ விருதுகளைப் பெற்ற அனுபவம்மிக்க டாக்டர் பூவண்ணன் இந்தக் கதைத் தொடரை எழுதுகிறார். பரதன் உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளப் போவது உறுதி.

அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

ரேவதி


(கௌரவ ஆசிரியர்)


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.



கோகுலம்

ஒளிபரப்பைத் தந்தவர்
- பக்கம் 8






நரி அறிவுடையதா? - பக்கம் 13

இந்த இதழில்...

ராஜாவானால் - பக்கம் 27





மந்திரவாதி எடிஸன் - பக்கம் 41



காற்றாடி ரெடி!

காற்றாடி விடுவது மகிழ்ச்சி தரும் ஒரு பொழுதுபோக்கு. அதிலும் சிறுவர்கள், அறுந்து போகும் காற்றாடியைப் பிடிக்க வானத்தைப் பார்த்தவாறே ஓடும் உற்சாகம் இருக்கிறதே, அது அபாயமானது என்றாலும், அளவிட முடியாத ஆர்வத்தைத் தூண்டுவது! இதனாலேயே சாலைகளிலும் பொது இடங்களிலும் காற்றாடி விடுவதைத் தடைசெய்திருக்கிறார்கள். சாலையில் போகும் வாகனங்களைப் பொருட்படுத்தாமல் சிறுவர்கள் காற்றாடி பிடிக்க ஓடும் ஆபத்து; காற்றாடி நூல், இரண்டு சக்கர வாகன ஓட்டிகளின் கழுத்தைப் பதம் பார்க்கும் ஆபத்து; மொட்டை மாடியில் காற்றாடி விடும் ஆர்வத்தில், தடுப்புச் சுவரையும் கவனிக்காமல் தாவிக் கீழே விழக்கூடிய ஆபத்து, என்று எத்தனையோ ஆபத்துக்களுக்கும் இதில் இடம் உண்டு.

◄ ஈர்க்கி ஒட்டியாயிவிட்டது!



பரந்தவெளிகளில் மைதானங்களில் பிறருக்கு ஆபத்து விளைவிக்காத வகையில் காற்றாடி விடுவது, பலரும் அமர்ந்து அல்லது நின்றபடி பார்த்துப் பரவசப்படுவதற்கு வாய்ப்பளிக்கிறது. சில மாதங்களுக்கு முன் சென்னை கடற்கரையில் அகில இந்திய அளவில் காற்றாடித் திருவிழா நடைபெற்றது. இதில் பல மாநிலங்களிலிருந்து வந்த காற்றாடி வீரர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் வானத்தில் செய்த காற்றாடி வேடிக்கைகளைக் கண்டு திகைக்க முடிந்தது. அடுத்தடுத்து சுமார் ஐம்பது காற்றாடிகளை நூலால் தொடுத்து நீலவானின் பின்னணியில் தோரணமாக்கிக் காட்டிய நிகழ்ச்சி வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதது.

காற்றாடி விடுவது இருக்கட்டும்; வண்ண வண்ணக் காற்றாடிகள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்ற விவரங்கள் உங்களுக்குத் தெரியுமா?

பாலாஜி, மாலினி, மஹேஸ்வரி ஆகிய மூன்று பேரும் இப்படி வண்ணக் காற்றாடிகள் தயாரிப்பதில் வல்லவர்கள். காற்றாடியைத் தொழில் முறையில் தயாரித்து விற்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கு அவர்கள் உதவியாகவும் இருக்கிறார்கள். அவர்களோடு பேசலாமா?

''காத்தாடிக்கு ஆதாரம் பேப்பர்தான். கலர் கலரா நிறைய பேப்பர் விக்குது. காத்தாடிக்குன்னே ஸ்பெஷலா, மேலே எழும்பிப் பறக்கற போது காத்து வேகத்தில கிழியாத மாதிரியான பேப்பர் கிடைக்குது. அதை வாங்கி, சாய்சதுர கோணத்திலே மாதிரி வெட்டி எடுத்துக்குவோம்'' - ஆரம்பித்தான் பாலாஜி.

''டிசைன் பண்ணுவோமே, அதைச் சொல்லு'' என்று குறுக்கிட்டாள் மாலினி.

''சொல்றேன்; அவசரப்படாதே. சில காத்தாடிங்களை ப்ளெயினா அதே கலர் பேப்பர்ல பண்ணிடலாம். நடுநடுவே



● வளைவுக் குச்சி வைக்கப்படுகிறது!

ஏதாவது டிசைன் ஒட்டிக்கூடப் பண்ணலாம். டிசைன் காத்தாடி பார்க்க ரொம்ப அழகா இருக்கும். நம்ம கற்பனைக்கு ஏத்தா மாதிரி எப்படி வேணா டிசைன் பண்ணிக்கலாம்'' - என்றான் பாலாஜி.

''அந்த டிசைனை எப்படிப் பண்ணுவே, அதைச் சொல்லலியே...?'' என்று கேட்ட மஹேஸ்வரி, தானே தொடர்ந்தாள். ''முதல்ல ஒரு கலர் பேப்பரை, காத்தாடி சைஸுக்கு வெட்டிடணும். அப்புறம் இன்னொரு கலர் பேப்பர்ல சந்திரன் மாதிரி, ஓ மாதிரி, மாங்காய் மாதிரி எப்படி வேண்ணா டிசைன் கட் பண்ணி எடுத்துக்கணும். இந்த டிசைனை அப்படியே ப்ளெயின் கலர் பேப்பர் மேல வெச்சு வஜ்ஜிரப் பசையால ஒட்டிடுவோம். இதுக்காகவே முன்கூட்டியே வஜ்ஜிரம் வாங்கிக் காய்ச்சி வெச்சுப்போம்.''



''அப்புறம் எந்தத் தாள்ல ஒட்டுவோமோ, அந்த பேப்பரை ஒட்டின டிசைன் ஓரமா நைஸா கட் பண்ணி எடுத்திடுவோம். இப்ப பேப்பர் ரெடி'' என்றாள் மாலினி.



● கணு கட்டப்படுகிறது!

''அப்புறமா குச்சி ஒட்டுவோம்'' - பாலாஜி தொடர்ந்தான். ''ஆனா குச்சியை பெரியவங்கதான் எங்களுக்காக வெட்டிக் குடுப்பாங்க. மூங்கில் கம்பிலே கணு இருக்குமில்ல அது தள்ளித் தள்ளி இருக்கற மாதிரி செலக்ட் பண்ணி வாங்குவாங்க. அதைப் பிளந்து சன்னமா சீவுவாங்க. அவங்க சீவி முடிச்சப்புறம் பார்த்தா மழமழன்னு ரொம்ப அழகா இருக்கும். அதைக் குறிப்பிட்ட நீளத்ல வெட்டிக் குடுப்பாங்க. வளைவுக் குச்சி, நேர் குச்சின்னு ரெண்டா பிரிச்சு கட்டா கட்டி வெச்சுக்குவோம்.''

''அப்புறமா மைதா மாவு, மயில் துத்தம் சேர்த்து கூழ் தயாரிக்கப்போம். இதைக் குச்சியில தடவி, பேப்பர் மேல வெச்சு ஒட்டுவோம். குச்சியை, பூச்சி அரிச்சிடாம இருக்கத்தான் மயில்துத்தம் சேர்க்கறோம். நீள்குச்சியைக் குறுக்கால ஒட்டினப்புறம், வளைவு குச்சி ஒட்டும் போது ஜாக்கிரதையா இருக்கணும். காகிதம் பிச்சிக்காம, கவனமா ஒட்டணும். குச்சியை இரண்டு முனைகள்லயும் மூடினாப்போல பேப்பரை மடிச்சு ஒட்டணும். காத்தாடி சைசுக்குத் தகுந்த மாதிரி குச்சி அளவும் மாறும்...'' - மாலினி மேலும் விளக்கினாள்.

''அப்புறம், பசை ஈரம் காயறதுக்கு விட்டிடுவோம். அப்புறமா, ஓரநூல் கட்டுவோம். அதாவது காத்தாடியின் நாலு பக்க ஓரத்திலேயும் நூல் வெச்சு, பேப்பரை மடிச்சு ஒட்டிடுவோம். இதனால காத்தாடி பறக்கும் போது, நாலு பக்கங்களில் எந்தப் பகுதியிலேயும் கிழியாது'' - மஹேஸ்வரி சொன்னாள்.

''கணு கட்டறது அடுத்த கட்டம். காத்தாடிக்கு அழகு சேர்க்கறது இந்த கணுதான்'' மாலினி விவரித்தாள்.

● ஓரநூல் கட்டப்படுகிறது!

''ஏன், தங்க ரேக்கு ஒட்டறது கூட அழகுதான்'' - பாலாஜி குறுக்கிட்டான்.

''நான்தான் சொல்லிக்கிட்டு வரே வில்ல; அவசரக் குடுக்கை'' என்று அவனை வேடிக்கைக்காகக் கடிந்து கொண்ட மாலினி தொடர்ந்தாள்!

''கங்கு தயாரிக்கறதும் ஒரு கலைதான். காத்தாடி தயாரிக்கும் போது கலர் பேப்பர்ல மிச்சம் விழுதில்லே... அதையெல்லாம் மடிக்க, ரொம்பவும் கூர்மையான கத்தரிக் கோலால சன்னமா பல்லு பல்லா கட் பண்ணுவோம். அப்புறம் கருட்டிகிட்டே போய் மேல் பகுதியைச் சுருக்கி, மேல நூலால கட்டிடுவோம். குஞ்சலம் மாதிரி அழகா இருக்கும். இந்த கங்கத்தை காத்தா டியின் வால் பக்கத்துல கட்டிடுவோம். மேல பறக்கற போது பார்க்க ரொம்ப அழகா இருக்கும்.''

''ரேக்கு, ரேக்கு....'' - பாலாஜி ஞாப கப்படுத்தினான்.

''ஆமாம். தங்கக் கலர் பேப்பர் வாங் கிக்குவோம். அதாவது பின்பக்கம் வெள் ளையும் முன்பக்கம் தங்கவண்ணமும் போட்டதாக இருக்குமே, அந்த பேப்பர். அதைச் சின்னச் சின்னதா அழகா கட் பண்ணிக்கிடணும். காத்தாடி ஓரங்கள்ல - முக்கியமா வளைவு குச்சியோட ரெண்டு முனையும் ஒட்டியிருக்கிற இடம், அதே மாதிரி நேர்க் குச்சியோட மேல், கீழ் முனை ஒட்டியிருக்கற இடம், வளைவு குச்சியும் நேர்க் குச்சியும் சந்திக்கற இடம், (இதுவே சூஸ்திரம் போடற தலைப்பகுதி), சூஸ்தி ரம் போடற கீழ்ப்பகுதி இப்படி நாலஞ்சு இடத்ல ரேக்கு ஒட்டுவோம். இந்த ரேக்கு ஒட்டறது வெறும் அழகுக்கு மட்டுமில்ல; காத்தாடிக்குப் பாதுகாப்பும் கூட'' என்றாள் மஹேஸ்வரி.

''அவ்வளோதான். காத்தாடி ரெடி'' என்றாள் மாலினி.


''சூஸ்திரம் போடணுமே, அதை விட் டிட்டியே?'' - என்று கேட்டான் பாலாஜி.

''அது காத்தாடி வாங்கிட்டுப் போற வங்க இஷ்டப்படி போட்டுக்கலாம்.''


''சரி, சரி, கம்மா பேசிக்கிட்டு இருக்கா தீங்க. நாம செஞ்ச காத்தாடியைப் பறக்க விடலாம் வாங்க'' என்று அழைத்தான் பாலாஜி.


இவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் தயாரிக்கும் காற்றாடிகள் சென்னை, தமிழ்நாட்டையும் கடந்து இந்தியாவின் பல மாநிலங்களிலும் கூடப் பறந்து கொண் டிருக்கின்றன என்றால் இவர்கள் தயாரிப் பின் திறமையை நீங்களே ஊகித்துக் கொள்ளலாமே.

படங்கள், கட்டுரை : பிரபுசங்கர்
அட்டையில் : ராகவ், அம்ரீதா
அட்டை வண்ணப்படம் : யோகா




DIAMOND COMICS PRESENTS
















Participate in Diamond Cartoon-Story-Title Contest! And Win th fabulous Prizes. Entry forms in new Diamond Comics

ZZLE PACK
COND SET OF
UR BOOKS
h the concept of 'knowledge',
ted with 'fun' to develop your brain and



to Sharpen the intelligence.)
Now available
Second Set (No. 5 to 8) of PUZZLE PACK
after success of First set.
Hurry! pick you favourite Second set from the nearest book shop.
Price : For each book Rs. 5/-

NEW DIAMOND COMICS (15th June 1992)

Pran's—Chacha Chaudhary & Clever Ghosha	8.00
Pran's—Raman & Lift	6.00
Fauladi Singh & Traitor Robot	6.00
Chacha Bhatija & Blazing Demon	6.00
Phantom-19 (Digest)	15.00

JOIN THE
DIAMOND BOOK CLUB
AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER.

ho all are There in the Club!
Chaudhary, Lambu-Motu, Zaab, Pinki, Billoo, Tauji, Fauladi Singh, Channi Dabu, Mahabali Shaka, Chacha Bhatija, Rajan-Iqbal, James Bond, Phantom, ke... and so many more such 'favourites' of yours.

em are brought to you by Diamond Comics, the largest selling comics in

r-raising and hilarious actions of these famous characters come to you in , Hindi, Bengali, Gujrati & Marathi.

nvenient to Meet Them All!
u join the club, you don't have to worry about your parents forgetting to bring t Diamond Comics home or your news agent/book seller finishing all the efore you got yours.

ecause as a member of the Diamond Book Club, you would get your set of 6 in time at your doorstep, every month. Moreover, as a special privilege, you nformed in advance about our forthcoming publications from time to time.

lore!
ance, 'The Children Jokes' with first V.P. and some other gifts on your

ere are many other 'surprises' in store for you on different occasion.

Postage Free!
To avoid delays, your parcel will be sent to you by V.P. every month. You just have to make your parents agree to pay the postman who brings the packet.

How Easy It Is to Become a Member!
Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/-

These ten rupees will bring you the benefit of saving Rs. 3/- on V.P.P. and Rs. 7/- on postage. Plus, a Digest worth Rs. 12/- is yours FREE, if you receive 12 V.P.'s continuously.

Tell your Friends Too about the Club!
If 4 of your friends become members, you will receive a Digest of your choice worth Rs. 12/- FREE of cost. You have to send their names and Rs. 10/- (membership fee) per member.

Yes! I would like to become a member of "DIAMOND BOOK CLUB" and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

POST OFFICE ____________ PIN CODE ____________


I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps with Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

BUTORS : Madras : • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. **Hyderabad :** • Neelkamal Book Distributors, Sultan Bazar. **re :** • Sapna Book Stall, Opp. Tribhuvan Theatre, Gandhi Nagar. • A.K. Agencies, 2094, 8 'A', Main Road, 'E' Block, Rajaji Nagar, 2nd stage.



ஒளிபரப்பைத் தந்தவர்

ஜானகி மணாளன்

லண்டன் நகரில் பிரபலமான ஒரு பத்திரிகை அலுவலகம். ஆசிரியர் தன் அறையில் ஏதோ வேலையாக இருந்தார்.

அப்போது ஒருவர். வயது கிட்டத்தட்ட நாற்பது இருக்கும். அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, ஆசிரியர் எதிரில் நின்றார்.

அவர் பார்ப்பதற்குப் பைத்தியம் போல் காணப்பட்டார். ஒழுங்காக வாராத பரட்டைத் தலை. ஷேவ் செய்யப்படாத முகம். தாறுமாறான உடை.

''என்ன வேண்டும் உங்களுக்கு? விரைந்து சொல்லி விட்டு, வேகமாக விடைபெற்றுச் செல்லுங்கள் இங்கிருந்து...'' என்றார் ஆசிரியர்.

''ஐயா... நான் ஒரு புதுவிதக் கருவி கண்டுபிடித்துள்ளேன். அது ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு... எங்கு என்று தெரியாத, ஏதோ ஒரு இடத்தில் நடக்கும் நிகழ்ச்சியை, நாம் இங்கிருந்தவாறே, நான் கண்டுபிடித்துள்ள கருவியில் கண்டுகளிக்கலாம் ஐயா... அதைப் பார்த்து விட்டு அது பற்றிய கட்டுரை ஒன்றை உங்கள் பத்திரிகையில் எழுதி வெளியிட வேண்டும்'' என்றார் வந்தவர்.

ஆசிரியருக்கு அவர் வாக்கில் நம்பிக்கை இல்லை. எனவே, ''இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமே இல்லை... வீணில் உளறாதே... என்னுடைய காலம் பொன்னானது. அதை உன்னுடன் பேசி வீணடிக்க விரும்பவில்லை. உடனே போ இங்கிருந்து...'' என்று விரட்டியடித்தார்.

ஆனால் அந்த நபர் உண்மையில் ஒரு பைத்தியம் இல்லை. மாபெரும் விஞ்ஞானி.

அவருடைய கண்டுபிடிப்பு என்ன தெரியுமா. டெலிவிஷன் எனப்படும் தொலைக்காட்சி! அதைக் கண்டுபிடித்த அந்த விஞ்ஞானியின் பெயர் ஜான் லோகி பெய்ர்டு என்பது. இந்த நிகழ்ச்சி நடந்தது 1926 ஆம் ஆண்டு.

இங்கிலாந்தை அடுத்த ஸ்காட்லாந்து நாட்டில் ஹேலன்பர்க் என்று ஓர் ஊர். அந்த ஊரின் தேவாலயத்தில் பணியாற்ற வந்தவருடைய மகன்தான் இந்த ஜான் லோகி பெய்ர்டு. அவருடைய பிறப்பு 1888 ஆகஸ்ட் 30 ஆம் நாள். சிறு வயது முதலே அவருக்கு இயந்திரங்களில் அதிக ஈடுபாடு.

உலகின் சிறந்த குழந்தைக் கதைகள் தமிழில்

மாதந்தோறும் ஒரு தொகுதி

தொகுதி-1



தொகுதி-2



சிறுவர் கதைத் தொகுதி



உங்கள் குழந்தைக்கு ஓர் அரிய பரிசு!

உங்கள் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு கதை சொல்ல —

பாவைசந்திரன் தொகுத்து எழுதித் தயாரித்த:

1. தினம் தினம் ஒரு கதை [தொகுதி — 1] விலை ரூ 18.00
2. தினம் தினம் ஒரு கதை [தொகுதி — 2] விலை ரூ 16.00
3. தினம் தினம் ஒரு கதை [தொகுதி — 3] விலை ரூ 20.00


செ. யோகநாதன் எழுதிய எல்லோரும் நண்பர்களே
சிறுவர் கதைகள் விலை ரூ 20.00

* ஒவ்வொரு கதைக்கும் படங்கள் நூலின் சிறப்பம்சம்
* ஆங்காங்கே பல வண்ணப்படங்கள்
* பள்ளிக்கூடங்கள், ஜேஸீஸ், லயன்ஸ், ரோட்டரி சங்கத்தினர் அன்பளிப்பு வழங்க விரும்பின் விலையில் 25%சிறப்புத் தள்ளுபடி.
* லாபநோக்கு கருதாமல் சேவை மனப்பான்மையுடன் ஒரு தயாரிப்பு. அதேபோல் விலை!
* வி.பி.பி. கிடையாது.
* தனிப்பிரதி வேண்டுவோர் உரிய விலைக்கு வேண்டும் பிரதிக்கு போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.

* முகவரி: **கண்மணி கிரியேடிவ் வேவ்ஸ்**
92, டி.எஸ்.வி. கோயில் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004

நூல் கிடைக்குமிடம்:-

சென்னை: காந்தளகம், இரேசா கட்டடம், சென்னை-2.
சவுத் ஏசியன் புக்ஸ்,
6, தாயார் சாகிப் இரண்டாவது சந்து, சென்னை-2.
கோவை: விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோவை-1.
மதுரை: அன்னம் புத்தக மையம்,
9, சவுராஷ்டிரா சந்து, மேல மாசி வீதி, மதுரை-1.





படிப்பு முடிந்ததும் ஜான் ஒரு கார் தொழிற்சாலையில் மோட்டார் மெக்கானிக்காகச் சேர்ந்தார். பின்னர் ஒரு மின்சார நிறுவனத்தில் எலெக்ட்ரீஷியன் வேலையில் சேர்ந்தார். அப்போதும் அவருடைய ஆராய்ச்சி ஊக்கம் குன்றவில்லை. இடையிடையே பலவிதச் சோதனைகளில் ஈடுபட்டார்.

சில சமயங்களில் அவரது சோதனைகள் ஆபத்தில் முடிந்ததும் உண்டு. அப்படி ஒரு சமயம் நடந்தது. நமக்கெல்லாம் தெரியும். அடர்ந்த காடுகள் நிலநடுக்கத்தால் பூமியில் புதைந்து போய், அழுத்தப்பட்டு நிலக்கரி ஆகிறது. அந்த நிலக்கரி மேலும் அழுத்தப்படும் போது காலப்போக்கில் வைரமாக மாறுகிறது. இதைப் பற்றி ஆய்வு செய்த ஜானுக்கு ஒரு புதுவித எண்ணம் உதித்தது. கரித் துண்டுக்கு மின்சக்தி மூலம் அளவுக்கு அதிகமான அழுத்தத்தைக் கொடுத்து நாமே ஏன் செயற்கை முறையில் வைரத்தைத் தயாரிக்கக் கூடாது என்று நினைத்தார். உடனே அதைச் செயலிலும் காட்டி விட்டார்.

ஒரு கரித் துண்டைக் 'காங்க்ரீட்' தரைக்குள் புதைத்து வைத்தார். அதனுடன் மின் கம்பியை இணைத்தார். அவ்வூரில் ஒரு மின்நிலையம் இருந்தது. அந்த நிலையத்தின் உயர் அழுத்த மின்சக்தியை அதற்குப் பயன்படுத்தினார். மின்கம்பி மூலம் திடீரென்று கரித்துண்டுக்கு மின்சாரத்தைப் பாய்ச்சினார். அவ்வளவுதான். அவர் அமைத்த சாதனம் தூள் தூளாகச் சிதறி விட்டது. அது மட்டுமல்ல. மின்நிலையத்திலும் பழுது ஏற்பட்டு விட்டது. அன்று இரவு ஊர் விளக்குகள் எதுவுமே எரியவில்லை. நகரமே இருளில் மூழ்கி விட்டது. அவர் பயந்து போனார். தனது ஆய்வு எந்த அளவுக்கு வெற்றி பெற்றது என்பதைக் கூட அவர் அறிய முயலவில்லை!

பல புதிய தொழில் முயற்சிகளைத் தொடங்கி தோல்வி கண்டு இறுதியில் ஹேஸ்டிங்ஸ் பகுதியில் ஒரு சிறிய அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். ஒரு சிறிய சோதனைச்

சாலையை அமைத்துக் கொண்டார். ஒலியை ஒயர்கள் மூலம் அனுப்பும் போது, ஏன் ஒளியையும் அவ்வாறு அனுப்ப முடியாது என்று சிந்தித்தார். அதன் விளைவுதான் தொலைக்காட்சி.

மாலை நேரத்தில் பழம்பொருள் விற்பனைக் கடைகளுக்குச் செல்வார். தனது ஆராய்ச்சிக்குத் தேவையான பொருள்களைத் தேடி அலைந்து வாங்குவார்.

அப்படி அவர் தேடி அலைந்து வாங்கியவை என்ன தெரியுமா? ஒரு பழைய தேயிலைப் பெட்டி. சிறிய பிஸ்கட்டின், சிறிய லென்ஸ். ஒரு மிகச் சிறிய மின்சார மோட்டார் ஆகியவை தான்! இவற்றுடன் இன்றும் பல லென்சுகளையும் சேர்த்துக் கொண்டார். அவற்றை 'நிப்கௌ'தட்டு என்ற சாதனத்தில் பொருத்தினார். அது 'நிப்கௌ' என்பவரால் 1884லேயே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு சாதனம். குறுகிய நேர் கோடுகளில் படங்களைத் திரையில் விழச் செய்யும் சாதனம் அது. இந்த அமைப்புடன் ஒளியைக் கிரகிக்கும் சாதனங்களையும் உருவாக்கினார். இரண்டையும் ஒருங்கிணைத்து சிற்றலை வரிசையில் ஒளிபரப்புச் செய்து 1923 ஆம் ஆண்டு வெற்றி கண்டார்.

அப்போது கறுப்பு வெள்ளை சிலுவைப் படம் ஒன்றை ஒளிபரபரப்பி திரையில் விழச் செய்தார். 1926 ஆம் ஆண்டு ஒரு அறையிலிருந்து செலுத்தப்படும் வெளிச்சம் நிழல் இரண்டையும் அடுத்த அறையில் இருந்த திரையில் விழச் செய்தார்.

அவருடைய இந்தச் சோதனையின் வெற்றி அவரை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்தது. மிக வேகமாக வீதிக்கு ஓடினார். சாலையில் ஒரு பையன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனிடம் ஓடினார்.

''தம்பி... கொஞ்ச நேரம் என் னுடன் வாயேன்...'' என்று கெஞ்சி அழைத்துச் சென்றார்.

அந்தச் சிறுவனின் உருவம் ஒளிக் கிரகிப்புத் திரையில் தத்ரூபமாக விழுந்தது. அவர் டெலிவிஷன் கண்டு பிடிக்கும் முயற்சியில் வெற்றி பெற்று விட்டார்!



''நம்ப பல குரல் மன்னன் பாஸ்கரோட ஜிம்மி ஏன் அவனையே விரட்டி அடிக்குது?''

''ஜிம்மியோட குரலை ரொம்ப மோசமா இமிடேட் பண்ணிட்டா னாம்!''

அவர் அன்று விளக்கொளியில் அமர்த்திய அந்தச் சாலையோரக் குறும்புச் சிறுவன்தான் உலகத்தின் முதல் டி. வி. ஸ்டார்!

பிறகு ஜான் லண்டன், ராயல் கழகத்தினர் முன் தன் டெலிவிஷனை இயக்கிக் காட்டி, கண்டுபிடிப்பை விளக்கிப் புரிய வைத்தார். அவர் புகழ் பரவத் தொடங்கியது. 'காயல்சன்' என்ற இடத்தில் டெலிவிஷன் கம்பெனி ஒன்றை அமைத்தார். அதற்கு 'த பெய்ர்டு டெலிவிஷன் கம்பெனி' என்று பெயர். அதன் மூலம் லண்டனுக்கும் கிளாஸ்கோவுக்கும் இடையே முதல் ஒளிபரப்பை 1927 ஆம் ஆண்டு தொடங்கினார்.

பிற்பாடு 1939 ல் அவர் வண்ணப் பட ஒளிபரப்பிலும் வெற்றி கண்டார்.

இப்படியாக வளர்ந்த இந்தத் தொலைக்காட்சி இன்று எந்த அளவு பயனுள்ள ஒரு சாதனமாக விளங்கி வருகிறது என்பதை நீங்களே அறிவீர்கள். வருங்காலத்தில் இத் துறையில் இன்னும் என்னென்ன புதுமைகள் வரும் என்பதையும் நாம் இப்போது கணிக்க முடியாது. எனினும், எல்லாவற்றுக்கும் அடிப்படை ஜான் லோகி பெய்ர்டின் கண்டுபிடிப்புத்தான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ஜான் லோகி பெய்ர்டு 1946 ஜூன் 14 ஆம் நாள் மறைந்தார்.

எத்தனை வித்தியாசங்கள் - போட்டி முடிவு

முன் எந்தப் போட்டியிலும் இல்லாத அளவுக்கு இப் போட்டியில் இரண்டாயிரத்து இருநூற்று அறுபது பேர்களுக்கு மேல் கலந்து கொண்டு ஆசிரியரை உண்டு இல்லை என்று ஆக்கி விட முயன்றிருக்கிறார்கள். ஒருசிலரைத் தவிர அனைவருமே சரியான விடை எழுதியிருக்கிறார்கள். பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.


ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. செ. மகேஷ் குமார், சென்னை - 4.
2. வி. சுதர்சன், உறையூர்.
3. ஏ. எச். அமிருதீன், பூதமங்கலம்.
4. ஏ. மனுவேல் சுந்தர் சிங், மேலவாலை.
5. ஜி. மலர்க்கொடி, அஹமதாபாத்.
6. கே. சித்தார்த்தி, பம்பாய்.
7. எல். தமிழ்ச் செல்வி, சென்னை - 12.
8. வீணா, திருவாரூர்.
9. சங்கர நாராயண ஹேமந்த், உத்தர பிரதேசம்.
10. டி. பன்னீர் தாஸ், நாகலாபுரம்.
11. கே. வி. வி. பாலாஜி, வேலூர் - 1.
12. டி. எம். ருக்மணி, நவல்பூர்.
13. பி. செந்தில்குமார், வேட்டைக்காரன் புதூர்.
14. சத்திய பாரதி, ஆனைமலை.
15. ஏ. கையத் மீரான், ஸ்ரீவைகுண்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு, பல்லாயிரக்கணக்கான வாசகர் சார்பில் பாராட்டுக்கள். கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் நன்றி.

வித்தியாசங்கள் :

1. பக்கக் கண்ணாடி
2. கைப்பை
3. பெண்ணின் தலைப் பூ
4. அறிவிப்புப் பலகை
5. செய்தித்தாள்
6. கொடுக்கும் ரூபாய் நோட்டு
7. பெண்ணின் காதில் கம்மல்
8. தொப்பி உள்ள கையில் கைப்பட்டை
9. மடியில் உள்ள புத்தகம்
10. பெல்ட்
11. மூக்குக் கண்ணாடி
12. பிடித்திருக்கும் கம்பி
13. வளையல்
14. சட்டைக் காலர்
15. வளைந்த பிடியில் உள்ள குறுக்குக் கம்பிகள்.



"டேய், வாண்டுகளா! நீங்க கோலம் வரையக் கத்துக்கறதுல எனக்கு சந்தோஷம்தான் அதுக்காக என் உடம்பிலுள்ள புள்ளிகளைத்தான் பயன்படுத்தணுமா...?"



நரி அறிவுடையதா?

ரேவதி

இருட்டி விட்டது. சில் வண்டுகளின் சத்தம் அந்தக் காட்டுப் பகுதியெங்கும் கேட்டது.

சோளக் கொல்லையில் வரப்புகள் கூடிய இடத்தில் இரண்டொரு மரங்களுடன் உயர்ந்த மேடு ஒன்று இருந்தது. அதில் உள்ளடங்கியிருந்த ஒரு வளையில், அப்பா நரி தன் இரு குட்டிகளுடன் உட்கார்ந்திருந்தது. ஒன்று ஆண் குட்டி. இன்னொன்று பெண் குட்டி.

''எனக்கு ரொம்பப் பசிக்கிறது அப்பா'' என்றது பெண் குட்டி.

''இருட்டினதுமே ஏதாவது சாப்பிடத் தரேன்னியே?'' என்று கேட்டது ஆண் குட்டி.

''இப்பக் கூட வெளியே கிளம்பினா ஏதாவது இரை கொண்டு வருவேன். ஆனால், உங்களைத் தனியா விட்டுட்டுப் போகப் பயமா இருக்கு. உங்கம்மா இருந்தா இந்தக் கவலையே இல்லை. நான் இரை கொண்டு வரும் வரை உங்களை கவனமா பார்த்துப்பா,'' என்று பெரு மூச்சு விட்டது அப்பா நரி.

''அம்மாவுக்கு என்ன ஆச்சப்பா?'' என்று ஆவலுடன் கேட்டது பெண் குட்டி.

''போன மாதம் தானே நீங்க பிறந்தீங்க? உங்கம்மாதான் வளைக்குள் இருந்து உங்களைப் பார்த்துப்பா. நான் வெளியே போய் இரை கொண்டு வருவேன். ஒருநாள் எனக்கு இரை கிடைக்க நேரமாச்சு. திரும்பி வரும் போது வேட்டைக்காரங்க வேறே. அவங்களுக்குப் போக்குக் காட்டி, டிமிக்கி கொடுத்து விட்டுத் திரும்பி வர ரொம்ப நேரமாகி விட்டது. அதற்குள் நீங்கள் இருவரும் பசி பசி என்று கத்தவே, உங்கம்மா வளையை விட்டு வெளியே வந்து இரை தேடியிருக்கா. கரும்புத் தோட்டத்துல வேட்டைக்காரங்க ஒரு கோழிக் குஞ்சைக் கட்டி, பொறி வைச்சிருந்தாங்க. உங்கம்மா அதில் போய் சிக்கிக் கொண்டாள். படுபாவிங்க உயிருடன்



கொண்டு போயிட்டாங்க'' என்று மனைவிக்காகக் கண்ணீர் விட்டது அப்பா நரி.

''நாங்க எங்கேயும் போக மாட்டோம் அப்பா,'' என்று அப்பா நரிக்கு வாக்குக் கொடுத்தன குட்டி நரிகள் இரண்டும்.

வளைக்கு வெளியே வந்த அப்பா நரி, காதுகளை உயர்த்திக் கவனித்தது. அதன் முகம் மலர்ந்தது.

''இரை நம்மையே தேடிக்கிட்டு வருது! முயல்கள் வருகின்றன. ஒன்றோ இரண்டோ என் பங்குக்கு நான் புடிக்கறேன். நீங்களும் புடிக்கப் பாருங்க. கழுத்தைத்தான் முதல்ல புடிக்கணும்'' என்று அறிவுறுத்தித் தயாரானது அப்பா நரி.

அது கூறியது உண்மைதான். நான்கு முயல்கள் ஓடி வந்து கொண்டிருந்தன. அப்பா நரி முதலில் பாய, இரண்டு குட்டிகளும் பின்னாலேயே பாய, மூன்று முயல்கள் அங்கே தங்கள் முடிவைத் தேடிக் கொண்டன.

''முயலைத் தின்னு அலுத்துப் போச்சப்பா. எனக்கு நண்டு வேணும்'' என்றது பெண் குட்டி.

''கொஞ்சம் பொறு. கருவேல மரத்தடி வளைக்குள், ஒரு கொழுத்த நண்டைப் பார்த்தேன்,'' என்று வெளியே சென்றது அப்பா நரி.

கருவேல மரத்தடி நண்டு, வளைக்கு வெளியே வந்து கொடுக்குகளை விரித்து இரை தேடிக் கொண்டிருந்தது. அப்பா நரி மிகவும் மெதுவாகத்தான் வந்தது. ஆனாலும், வழியில் கிடந்த காய்ந்த சருகில் கால் பட்டுவிட்டதால் ஏற்பட்ட ஓசை நண்டை உஷார்ப்படுத்தி வளைக்குள் ஓட வைத்து விட்டது!

ஏமாற்றத்துடன் வளை வாயிலைப் பார்த்த அப்பா நரி, மயிர் அடர்ந்த தன் வாலை வளைக்குள் விட்டு அசைத்தது. ஏதோ பூச்சி என்று எண்ணி விட்ட நண்டு, தன் கொடுக்குகளால் வால் நுனியை இறுகப் பிடிக்க, அப்பா நரி கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வாலை வெளியே இழுத்து உதறி, நண்டைக் கௌவிக் கொண்டு வளைக்கு வந்தது!

நன்றாக இருட்டி விட்டது. அப்பா நரி வளைக்கு வெளியே வந்து 'உக்கு' 'உக்கு' என்று குரல் எழுப்பி ஊளையிட்டது. சிறிது நிறுத்தி விட்டு மறுபடி ஊளையிட்டது. இப்பொழுது எதிரொலி போல் இன்னொரு 'உக்கு' சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பல 'உக்கு' ஊளை சத்தம் அந்தப் பகுதியில் தொடர்ந்து கேட்டபடி இருந்தது.

"எதுக்கு அப்பா இப்படி ஊளை விடறே?" என்று கேட்டது ஆண் குட்டி.

"நாம் நரி இனம். ஊளை இடுவது நமக்குள்ள தனிக் குணம். இப்படி நாம ஊளையிட்டால், இந்தப் பகுதியில் இருக்கும் நம்ம இனத்தாருங்க பதிலுக்கு ஊளையிட்டாகணும். இல்லைன்னா அவங்களுக்கு ஏதோ ஆபிடிச்சுன்னு அர்த்தம். பாரேன், நமக்குப் பக்கத்துல கரும்புத் தோட்டத்துல, சோளக் கொல்லையில, கடலைக் காட்டுல, வாழைத் தோட்டத்துல இருக்கற நம்ம ஆளுங்க எல்லாம் பதில் குரல் கொடுத்திருக்காங்களே? இன்னும் இந்தப் பனங்காட்டு அண்ணனிடம் இருந்துதான் பதில் ஊளை கேட்கலே. ஒரு வாரமாகவே அவனுடைய குரல் கேட்கலே... அவனுக்கும் உங்கம்மா மாதிரி ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என்னவோ தெரியலே" என்று வருந்தியது அப்பா நரி.

கூண்டை அறைக்குள் தள்ளிக் கொண்டு வந்தனர் பணியாட்கள். கூண்டுக்குள் விழித்தபடி அமர்ந்திருந்த பனங்காட்டு ஆண் நரி, அங்கு ஏற்கெனவே பெண் நரி அடைக்கப்பட்ட ஒரு கூண்டு இருப்பதைக் கண்டு திகைத்தது. இரண்டையும் ஒரே கூண்டில் அடைத்தனர்.

"பனங்காட்டு அண்ணனா!" என்று வியப்புடன் கேட்டது பெண் நரி.


"சோளக் கொல்லைத் தங்கச்சியா! நீ இங்கதான் இருக்கியா?" என்று கேட்டது ஆண் நரி.

இரண்டு கூண்டுகளும் இருந்த இடத்திற்கு எதிரில் ஓர் அழகான கட்டிலைக் கொண்டு வந்து போட்டார்கள். பின்னாலேயே பட்டு மெத்தை, தலையணை அடுக்குகள் எல்லாம் வந்தன.

இரண்டு நரிகளும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்க, பணக்காரத் தோற்றமுடைய ஒருவர் கட்டிலில் வந்து அமர்ந்தார். மகிழ்ச்சியுடன் கூண்டில் இருந்த நரிகளைப் பார்த்தார்.

"நரிகளுக்கு எந்தக் குறையும் இருக்கக் கூடாது. கவனமா பார்த்து இரை கொடுங்க. என்ன செலவானாலும் சரி" என்று உத்தரவு இட்டார். எழுந்து அருகே வந்து நரிகளைப் பரிவோடு பார்த்து விட்டுப் போனார்.

முற்றத்தில் காகம் ஒன்று கரைந்தது. கூண்டுக்கு அருகே வந்து உட்கார்ந்தது.



அறிவியல் உண்மைகள்

* நரி நீரில் நீந்திக் குளிந்துத் தன்னை உற்சாகப்படுத்திக் கொள்ளும்.

* ஊளையிடுவது, அக்கம் பக்கத்தில் உள்ள மற்ற நரிகளின் நலனை அறிந்து கொள்ளும் சமிக்ஞை. இது தவிர்க்க முடியாத செயல்.

* வலைக்குள் இருக்கும் நண்டை நரி தந்திரமாகப் பிடித்து வெளியே இழுக்கும். இதற்குப் பெரிதும் உதவுவது வால்தான்!

* ஆண் நரிக்குக் குடும்பப் பொறுப்பு அதிகம். குட்டிகளைக் கவனமாகப் பாது காத்து வளர்க்கும்.

* நரிக்குப் பகைவன் சிறுத்தை.

* நரியின் முகத்தில் விழித்தால் நல்லது என்பதற்கு அறிவியல் அடிப்படையில் காரணம் இல்லை. ஆனால் இதன் உண்மைப் பொருள் வேறு.

* நரியின் தந்திரம் தனது இரையைப் பிடிக்கவும், பகைவர்களிடமிருந்து தப்பவும்தான்.

* கதைகளில் வருவது போல் மற்ற மிருகங்களை விட நரி அதிகமான அறிவுடையது அல்ல. அப்படி இருந்தால் ஊளையிட்டுத் தன் இருப்பிடத்தைப் பகைவர்களுக்கு வெளிப்படுத்தி ஆபத்தைத் தேடிக் கொள்ளாது. இரை தேடுவது, பகைவர்களிடமிருந்து தப்புவது இரண்டையும் நரி புத்திசாலித்தனமாகச் செய்வது போல் மற்ற பல மிருகங்களும் கூடச் செய்கின்றன. அதனால், நரி மற்ற விலங்குகளை விட அறிவுள்ளதாகி விடாது.

* நரியின் வால் அதன் உணர்ச்சிகளுக்கு ஏற்ப நிற்கும், தொங்கும், சுருளும்!

* வேட்டை நாய்கள் துரத்தும் போது நரி ஒருவித துர்நாற்றத்தை வெளியிடும் என்றும், அதை சகிக்காது வேட்டை நாய்கள் பின்வாங்கி விடும் என்றும் உள்ள கருத்தைக் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

* நரி தின்னாத பொருள்களே கிடையாது. எதையும் தின்னும்!

* நாய்க்கு வெறி பிடிப்பது போல் நரிக்கும் வெறி பிடிக்கும்!

''காக்கா அண்ணே, எங்களை எதுக்காகக் கொண்டு வந்திருக்காங்க? சொல்லுங்களேன்?'' என்று கேட்டது பெண் நரி.

''உங்களுக்குத்தான் புத்திசாலிங்கன்னு பட்டம் இருக்கு. என்னை ஏமாத்தி பாட்டுப் பாட வைச்சு, ஏமாளியாக்கி, என் வாயில் வைத்திருந்த வடையை தந்திரமா வாங்கிக்கிட்டுப் போனதா ஈசாப் கதையே இருக்கே? சிங்கராஜாவுக்கு நீங்கதானே மந்திரி அமைச்சர்? உங்களுக்குத் தெரியாததும் உண்டா?'' என்று பரிகாசமாகக் கேட்டது காகம்.

''இதெல்லாம் இந்தப் பொல்லாத மனிதங்க எழுதி வைச்ச கட்டுக் கதைங்க. எங்க புத்திசாலித்தனம் எல்லாம் பகைவர்களிடம் இருந்து தப்புவதற்கும், இரையைத் தந்திரமா புடிக்கவும்தான். அப்படிப் பார்த்தா, இந்தத் திறமை எல்லா விலங்கு பறவைகளுக்கும்தான் இருக்கு.'' என்று காகத்திற்கு இதமாகப் பதிலளித்தது ஆண் நரி.

''இந்த மாளிகையின் பணக்காரரை 'தினமும் நரி முகத்தில் விழி'ன்னு ஒரு சாமியார் சொல்லிட்டாராம். அது ஆண் நரியா பெண் நரியான்னு இவர் கேட்டுக்கலே. அதனால, எதுக்கும் இருக்கட்டும்னு இரண்டையுமே புடிச்சுக் கொண்டு வந்திட்டாங்க. இந்தப் படுக்கை அவருக்காகப் போட்டிருப்பது தான். உங்களுக்கு ராஜ உபசாரம் நடக்கும்'' என்றது காகம்.

''இந்தப் பணக்காரன் சுத்த மடையனா இருக்கணும். எங்க முகத்தைப் பார்க்கணும்னா, சூரியன் உதிப்பதற்கு முன், அதிகாலையில் எழுந்து வயல் வெளியில் நடக்கணும். இந்த மனிதரைச் சீக்கிரம் எழுப்பிக் காலார நடக்க வைக்கச் சாமியார் இதைச் சொல்லியிருக்கிறார். இந்த அசட்டு மனிதர், தன் படுக்கைக்கு எதிரில் எங்களைச் சிறை வைத்து, ஒன்பது மணிக்கு மேல் எழுந்து எங்கள் முகத்தில் விழிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்! சாமியார் சொன்னதன் சரியான அர்த்தத்தைத் தப்பாகப் புரிந்து கொண்டிருந்தாரே இந்த மடசாம்பிராணி மனிதர்!'' என்று வருந்தியது ஆண் நரி.

பொய்மையும் வாய்மை ஆகலாம்

நாகரத்தினம்



முத்து படித்துக் கொண்டிருந் தான்.

அவன் வீட்டில் வேலை செய்கின்ற பொன்னம்மா பக்கத்து அறையில் குப்பைகளைப் பெருக்கிக் கொண் டிருந்தாள்.

முத்துவின் அறைக்குள் வந்த அவ னுடைய அப்பா எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

''என்னப்பா தேடுறீங்க?''_ முத்து கேட்டான்.

''சட்டைப் பையில் இருபது ரூபாய் வெச்சிருந்தேன். அதை எடுத்து எங்கே வைத்தேன் என்று தெரிய வில்லை'' என்றவாறு அலமாரியைச் சுத்தமாகத் தேடிக் கொண்டிருந்தார்.

அப்பா இப்படித்தான்.

மறதி அதிகம்.

அப்பா தேடுவதையே பார்த்துக் கொண்டிருந்த முத்து, ''அப்பா! நேற்று என் மேஜை மீது இருபது ரூபாய் இருந் ததே. அதை எனக்காக நீங்கள்தான் வைத்தீர்கள் என்று நான் எடுத்துக் கொண்டேன்'' என்றான் முத்து.

''உனக்காக வைத்தேனா?''_அப்பா புரியாமல் கேட்டார்.

''என்னப்பா நீங்க? தமிழ் நோட்ஸ் வாங்கணும்னு போன வாரமே கேட் டேனே''

''ஆமாம்.''

''அதற்காகத்தான் வைத்தீர்கள் என்று நான் எடுத்து நோட்ஸ் வாங்கி விட்டேன்'' என்றான் முத்து.

அப்படிச் சொல்லும் போது அவன் தலை குனிந்திருந்தது.

''வாங்கியாச்சா?'' என்று கேட்டுக் கொண்டே அப்பா அருகில் வந்ததும்,

''நேற்றே வாங்கி விட்டேன். ஆனா நடராஜன் வாங்கிட்டுப் போயிருக் கிறான். இன்று பள்ளி லீவுதானே? எழுதிக் கொண்டு மாலை தருவதாகச் சொன்னான்'' என்று முத்து மறுபடியும் ஒரு பொய்யைச் சொன்னான்.

அப்பா நம்பி விட்டார்.

அப்பாவின் ஞாபக மறதியைப் பயன்படுத்தி இப்படி ஒரு பொய்யைச் சொன்னதற்காக முத்து வருந்தவில்லை. ஆனால், உண்மையைச் சொல்லியிருந் தால் நடப்பதே வேறு.

அப்பா கோபக்காரர்.


நடந்த உண்மை என்ன?

அந்த இருபது ரூபாயை அவன் எடுக்கவில்லை. வீட்டில் வேலை செய் கின்ற பொன்னம்மா, நேற்று துணி களைத் துவைப்பதற்காக அப்பாவின் சட்டையையும் எடுத்துச் சென்றாள். கிணற்றடியில் சட்டையை நனைக்கும் முன், அச் சட்டைப் பையிலிருந்து அந்த இருபது ரூபாய் நோட்டுக் கீழே விழுந்தது. சற்றுத் தயங்கிய பொன் னம்மா எடுத்து வைத்துக் கொண்டாள்.

பொன்னம்மா முத்து வீட்டில் வெகு காலமாக வேலை செய்கின் றாள். திருட்டு என்பது அவளைப் பொறுத்தவரை இல்லை. ஆனால்,அந்த இருபது ரூபாயைப் பார்த்ததும்... ஏதோ ஓர் ஆசையில் எடுத்தவள்... வைத்துக் கொண்டாள்.

அவள் வீட்டில் என்ன கஷ்டமோ?

பொன்னம்மா பணத்தை எடுத்துச் சேலையில் மு டி ந் து கொண்டதை முத்து பார்த்து விட்டான். அவன் பார்த்ததை பொன்னம்மாள் உணர வில்லை.



இதையெல்லாம் அவன் அப்பா விடம் சொல்லி இருந்தால் பொன்னம் மாவை வேலையை விட்டு நீக்கியிருப் பார். ஏழ்மையான அவள் குடும்பம் இன்னும் ஏன் கஷ்டப்பட வேண்டும்?

பொய் சொல்லி பொன்னம்மா வைக் காப்பாற்றி விட்டான்.

'நன்மை பயக்குமெனில் பொய் யும் வாய்மையாகக் கருதப்படும்' என்ற திருக்குறளின் கருத்தை நேற்று ஆசிரியர் விளக்கியது நினைவில் வந்தது.

மாலை...

வீட்டு வாசலில் இருந்த ரோஜா செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண் டிருந்தான் முத்து.

பொன்னம்மா தன் வீட்டிலிருந்து வந்தவள் நேராக முத்துவிடம் வந்தாள்.

அவள் கையில்...

''தம்பி.. இந்தாப்பா நடராஜன் நேற்று வாங்கிக்கிட்டுப் போன தமிழ் நோட்ஸ்...'' என்று புது நோட்ஸை முத்துவிடம் நீட்டினாள்.

முத்து திகைத்து விட்டான்.

''பொன்னம்மா... நீங்க என்ன சொல்லுறீங்க? இது...?''- ஒன்றும் புரி யாமல் கேட்டான்.

''ஆமாம் தம்பி! நேற்று உங்க அப்பாவிடம், நடராஜனிடம் நோட்ஸ் கொடுத்ததாகச் சொன்னதை நானும்

கேட்டேன். அவன்தான் கொடுத்தான்'' என்றாள் குரல் தழுதழுக்க.

''நீங்க பொய் சொல்லுறீங்க பொன்னம்மா''

''நீ மட்டும் சொல்லலையா தம்பி! அந்தப் பணத்தை நான்தானே எடுத்தேன்? தம்பி, நீ எடுத்ததாய் சொன்ன போதே உன் மனசு புரிஞ்சுது.. நோட்ஸ் வாங்கியதாகவும், என் மகன் நடராஜ னிடம் கொடுத்ததாகவும் பொய் சொல்லித் தப்பித்த போது, என் மனசு பொறுக்கலை. அந்தப் பொய்க்கும் காரணம் நான்தானே தம்பி! அந்தப் பொய் நிஜமாகணும்னு நானே நடராஜ னிடம் விவரமாக் கேட்டுட்டு அந்தப் பணத்திற்கு தமிழ் நோட்ஸ் வாங்கிட்டு வந்தேன். ஒரு தலைமுறையா உங்க வீட்டுல வேலை செய்து எடுத்திருந்த நல்ல பெயரை, ஒரே நிமிஷத்தில் போக்கிக்கிட இருந்தேன். நீ வந்து காப்பாத்தினே'' என்றாள் பொன் னம்மா.

''பொன்னம்மா!'' என்ற முத்து ஒன்றும் பேசாமல் நின்றான்.

''பாடங்களை எல்லாம் நல்லா படிங்க தம்பி! எனக்கும் இது ஒரு பாடம்தான்'' என்ற பொன்னம்மா வீட்டுக்குள் சென்றாள்.



பாட்டி அவிழ்த்த முடிச்சு!



ஜப்பானில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த கதை இது. தாரோ ஓர் இளம் விவசாயி. அவனுக்கு இருந்த ஒரே உறவு அவனது பாட்டிதான். பாட்டி மீது அவனுக்கு இருந்த அன்பை அளவிட முடியாது. பாட்டிதான் அவனுக்கு எல்லாம்.

அந்த ஆண்டு எங்கேயும் மழை பெய்யவில்லை. நல்ல மழை இராததால் தாரோவின் கிராமத்தில் விளைச்சல் இல்லை. குளங்களிலும், ஏரிகளிலும் தண்ணீர் இல்லை. கிராமத்தாருக்கு வயிறார உணவு கிடைக்கவில்லை.

அந்தக் கிராமத் தலையாரி ஒரு தனி ஆள். குடும்பம் என்று அவனுக்கு யாரும் இல்லை. ஊரிலே உணவுப் பற்றாக்குறை என்றதும் அவன் சிந்தனை இப்படிப் போனது; 'உழைத்துப் பாடுபட்டாலே உணவு கிடைக்கவில்லை. உழைக்காமல் பாடுபடாமல் இருக்கும் வயசான கிழங்கள் ஒவ்வொரு வீட்டிலும் சுமைதானே! விரட்டி விடலாமே இவர்களை' என்று யோசித்தான்.

அறுபது வயதுக்கு மேலே உள்ளவர்கள் எல்லாம் கிராமத்தை விட்டு வெளியேறி பக்கத்து மலை மீது ஏறிக் காட்டிலே வாழ வேண்டும் என்று கடுமையான உத்தரவு போட்டு விட்டான்.

தலையாரி சொன்னதுதான் சட்டம். எல்லா வீட்டிலிருந்தும் வயதான கிழவர்கள், கிழவிகள் வெளியே வந்து மெதுவாக நடந்து மலைக்காட்டுக்குப் போனார்கள்.

தாரோ மட்டும் தனது பாட்டியை அனுப்பவில்லை. அவனுக்குத்தான் பாட்டி மீது கொள்ளை ஆசையாயிற்றே. அவளைத் தனியே விட அவன் ஒப்பவில்லை. யாருக்கும் தெரியாமல் அவளைத் தன் வீட்டிலே பரணிலே வைத்துக் காப்பாற்றினான். அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ரகசியமாக உணவு கொடுத்து வந்தான்.

சில நாள் ஆயிற்று. அந்தப் பக்கங்களிலேயே பயங்கரமான ஒரு முரட்டுச் சண்டைக்கார ரௌடி இந்தக் கிராமத்துத் தலையாரியை வம்புக்கு இழுத்தான். கிராமத்து விளைச்சலைப் பறித்துக் கொண்டு போய் விடுவதாகப் பயமுறுத்தினான். அந்தச் சண்டைக்காரன் தலையாரிக்கு ஒரு சீட்டு அனுப்

ஜப்பான் நாட்டுக் கதை:
தமிழில்:
தம்பி சீனிவாசன்

பினான். அதிலே மூன்று புதிர்கள் இருந்தன. மூன்று புதிர்க் கேள்விகளுக்கும் சரியாகப் பதில் கிடைத்து விட்டால், கிராமத்தை ஒன்றும் செய்யாமல் திரும்பிப் போய் விடுவதாகச் செய்தி அனுப்பினான்.

இந்தச் செய்தியை கிராமத்துத் தலையாரி எல்லாருக்கும் தெரியப் படுத்தினார்.

விஷயத்தைப் பாட்டியிடம் சொல்லி விட்டு, ''பாட்டி, பாட்டி, இதுதான் முதல் கேள்வி. இதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒரு மரக் கட்டை இருக்கிறது. நீண்ட மரத்திலிருந்து வெட்டிய தண்டு. அதிலே மேல்பகுதி எது, அடிப்பகுதி எது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று கேட்டான் தாரோ.

சற்றே யோசித்த பாட்டி சொன்னாள் : ''அந்த மரக்கட்டையை நீரிலே அமிழ்த்து. வேரை ஒட்டிய பகுதி கனமானதால் நீரிலே அமிழும். இலைகளை ஒட்டிய பகுதி இலேசானதால் மிதக்கும்.''

தாரோவுக்கு ஒரே சந்தோஷம்.

சண்டைக்காரன் விட்ட சவாலில் இரண்டாவது புதிரைச் சொன்னான். ''சாம்பல் கயிறு செய்வது எப்படி?''

பாட்டி மறுபடி சிந்தித்தாள். பிறகு சொன்னாள் : ''பேராண்டி, ஒரு நீண்ட கயிறை எடுத்துக் கொள். அதிலே நன்றாக உப்பைத் தடவு. ஒரு நுனியில் நெருப்பு வைத்து விடு. மெல்ல மெல்ல கயிறு முழுதும் எரிந்து சாம்பலாய் விடும். கயிறு வடிவம் மாறாது அப்படியே இருக்கும். இதுவே சாம்பல் கயிறு.''

தாரோ மறுபடி துள்ளிக் குதித்தான். ''பாட்டி பாட்டி. அந்த சண்டைக்காரன் இன்னொரு புதிர் போட்டிருக்கிறான் பாட்டி. கோணல்மாணலாய் வளைந்து காணும் ஒரு நீண்ட குழாயுள்ளே பட்டு நூலை எப்படிக் கோர்ப்பது?''

பாட்டி சிரித்தாள். ''ரொம்ப கலபமாச்சே. ஒரு எறும்பின் காலிலே பட்டு நூலைக் கட்டி விடு. அதைக் குழாயின் ஒரு முனையிலே விட்டு, எதிர் முனையிலே வெல்லத்தை வை. எறும்பு விடு





விடு என்று வெல்ல வாசனைக்கு விரைந்து எதிர்முனைக்கு வரும். வரும் போது பட்டு நூலையும் இழுத்துக் கொண்டு வரும். அவ்வளவுதான். கோணல்மாணலான குழாய்க்குள்ளே யும் பட்டு நூலைக் கோக்க முடியும். போடா.''

தாரோவுக்கு ஒரே சந்தோஷம். வீட்டிலே வயதானவர் இருப்பதால் அனுபவ அறிவு கிடைக்கிறது. இது ஒரு அதிர்ஷ்டம்தான்.

நேரே தலையாரியிடம் ஓடினான். சண்டைக்காரன் விட்ட சவாலுக்கு ஏற்ற பதில் அனுப்பும்படி தூண்டி னான்.

புதிர்க் கேள்விகளுக்கு தாரோவின் பதில்களைக் கேட்டு த லை யா ரி அவனைப் பாராட்டினான்.

தாரோ அடக்கமாக, ''இல்லை ஐயா. என் பாட்டியின் யோசனைகள் இவை'' என்று நடந்ததை விவரித்தான்.

தலையாரி தலைகுனிந்தான். வய தானவர் என்றால் அறிவு மங்கிப் போனவர்கள், ஒன்றுக்கும் உதவாத வர்கள் என்றே அவன் இதுவரை எண்ணி வந்தான். வயதானவர்களின் புத்திசாலித்தனத்தை இப்போது அனு பவபூர்வமாக உணர்ந்தான்.

''நமது கிராமத்துக்கே முரட்டுச் சண்டைக்காரனால் ஆபத்து வர இருந்த போது பாட்டியின் அறிவால் நாம் தப்பி விட்டோம். இனிமேல் வயதான பெரியவர்களும் நமது கிராமத்தில் இருக்க வேண்டும். மலைக் காட்டுக் குப் போய் விட்டவர்களைத் திரும்ப அழைத்து வாருங்கள்'' என்றான் தலை யாரி.

எல்லாக் கிழவர்களும் கிழவிகளும் கொஞ்ச நாளில் ஒவ்வொருவராகத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அடுத்த ஆண்டு மழை பெய்யோ பெய் என்று பெய்தது. ஏரியும், குள மும் நிரம்பி, விளைச்சல் ஓகோ என்று இருந்தது. சண்டைக்காரனும் வர வில்லை. புதிர் முடிச்சு அவிழ்த்த தாரோவின் பாட்டியை எல்லாரும் பாராட்டிப் போற்றினார்கள்.

கணித மேதை கந்தசாமி



''மணி, எனது நோட்டைப் பாருடா; எல்லாக் கணக்கும் ரைட். இதுவரை என் 'ஹோம் ஒர்க்' நோட்டில் தப்பு விழுந்ததே இல்லை,'' என்றான் கந்தசாமி.

மணி அவனது நோட்டை வாங்கிப் பக்கங்களைப் புரட்டினான். எல்லாப் பக்கங்களிலும் சரிக்குறிகளே காணப்பட்டன. தவறுக்குறி எப்பக்கத்திலும் இல்லை. மணிக்கு ஒரே வியப்பு. ''கந்தசாமி, நீ எல்லாக் கணக்குகளையும் கஷ்டமான கணக்குகளையும் கூடச் சரியாகச் செய்து விடுகிறாயே எப்படி? அந்த இரகசியத்தை எனக்கும் சொல்லிக் கொடு,'' என்று கேட்டான் மணி.

''ரகசியம் ஒன்றும் இல்லை. ஆசிரியர் வகுப்பில் மாதிரிக் கணக்குகளைப் போடும்போது கவனமாய் இருப்பேன். அதே மாதிரியே வீட்டுக் கணக்குகளையும் போட்டுவிடுகிறேன்,'' என்றான் கந்தசாமி.

''நீல் விடாதே; நீ கைடைப் பார்த்து எழுதி வருகிறாய்.''

''எங்கப்பா மிகவும் கண்டிப்பு; இதுவரை எந்தப் பாடத்துக்கும் எங்கப்பா கைடு வாங்கித் தந்ததே கிடையாது.''

'அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அவன் கைடைப் பயன்படுத்தியதை, நான் இதுவரை பார்த்ததில்லையே', என்று எண்ணினான் மணி. ''கந்தசாமி, நீ கணிதத்தில் மேதைதான். இதில் சந்தேகமே இல்லை,'' என்றான் பெரும் வியப்புடன்

கந்தசாமியின் திறமையை அந்த வகுப்பிலுள்ள நாற்பது மாணவர்களும் தெரிந்து கொண்டனர். 'கணித மேதை கந்தசாமி' என்று மணி அவனை அழைத்தான். மற்ற மாணவர்களும் அப்படியே அழைக்கத் தொடங்கினர்.

'கணித மேதை' என்று மற்றவர்கள் அழைத்தபோது கந்தசாமி மிகவும் மகிழ்ச்சியடைந்தான். நாளாக நாளாக அதுவே அவனைச் செருக்கடைய வைத்தது. அவன் கர்வம் தலைக்கேறியது.

குற்றாலம் கல்விப் பயணத்தை மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக அனுபவித்தனர். பெரிய அருவி, சிற்றருவி, ஐந்தருவிகளில் குளித்துப் பேரானந்தம் அடைந்தனர். பின்னர் பாவநாசம் புறப்பட்டனர். அங்கு செயல்படும் நீர்மின் நிலையத்தைப் பார்வை இட்டனர்.

மின்நிலைய அலுவர் ஒருவர் அது செயல்படும் முறையை விளக்கினார். அவர் கூறியதில், புரியாத சில பகுதிகளை ஆசிரியர் அவ்வப்போது விளக்கிச் சொன்னார்.

கணிதமேதை கந்தசாமி, ம ணி மற்றும் அவர்கள் வகுப்பு மாணவர்கள் அனைவரும் கவனமாய்க் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

''மின் விசை தயாரிக்கப் பயன்பட்ட நீர் இக்குழாயின் வழியாக எவ்வளவு வேகமாக வெளிவருகிறது என்பதைப் பாருங்கள்'' என்றார் அலுவலர்.

குழாய்களையும் மிகுந்த விசையோடு வெளியே பாய்ந்து வரும் நீரையும் பார்த்து மாணவர்கள் வியந்தனர்.

இப்போது ஆசிரியர் மாணவர்

ஜோர்ஜ் எஸ். ராஜா

களிடம் பேசினார்; ''இக்குழாயின் விட்டம் 2 மீ. இதில் மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் நீர் பாய்ந்து வருகிறது. இப்படி மூன்று குழாய்கள் இருக்கின்றன. அப்படியானால் ஒரு மணி நேரத்தில் எவ்வளவு நீர் வெளியே வரும்? தெரிந்தவர்கள் கூறுங்கள் பார்க்கலாம்?''

எல்லா மாணவர்களும் கணித மேதை கந்தசாமியையே நோக்கின. ர். அவன் தனது பையைத் திறந்து தாளையும் பேனாவையும் எடுத்து ஏதேதோ எழுதிக் கணக்கு போடத் தொடங்கினான். எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவனால் விடைகாண முடியவில்லை!

நேரம் ஓடியது. கணித மேதையால் விடை காண முடியவில்லை. ஆனால் மனதால் கணக்கிட்டுக் கொண்டிருந்த மணி, ''சார், 66,000 கியூபிக் மீட்டர் நீர் வெளியேறும்,'' என்றான் சரியாக. மாணவர்கள் மணியின் திறமையை மெச்சினர். அதே சமயம் கந்தசாமி இப்படித் தடுமாறியது அவர்களுக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது. வியப்பாகவும் இருந்தது.

மின் நிலைய அலுவலரும் அங்கு தயாரிக்கப்படும் நீர்மின் விசை குறித்து ஒரு சிறிய கணக்கைத் தந்தார். அதற்கும் விடை கண்டுபிடிக்க இயலாமல் கந்தசாமி திரு திருவென விழித்தான். ஆனால், மணியோ மனத்தில் கணக்குப் போட்டு ஒரு சில விநாடிகளிலேயே சரியான விடையைக் கூறினான். இப்போது ஆசிரியரும் அலுவலரும் அவனைப் பாராட்டினர்.

எல்லா மாணவர்களும் இப்போது



கந்தசாமியை நோக்கினர். அவர்கள் பார்வையில் ஏளனம் நிறைந்திருந்தது. அவன் வெட்கித் தலை குனிந்தான். மாணவர்களின் கேலிப் பார்வையும் சைகைப் பேச்சும் அவனைத் துளைத் தெடுத்தென.

'கணித மேதை' என்று பெயர் வாங்கியிருந்த கந்தசாமி, எப்படித் திடீரென்று இப்படி முட்டாளானான்? அதற்குக் காரணம் இருந்தது.


கந்தசாமியின் தந்தை சோமநாதன் ஒரு பெரிய வியாபாரி.

ஒரு நாள் அப்பாவின் மேசையில் இருந்த ஒரு சிறிய கால்குலேட்டரை கந்தசாமி எடுத்துப் பார்த்தான். அதை எவ்வாறு பயன்படுத்துவது என்று அப் போது அவனுக்குத் தெரியாது. ஆனால் நாளடைவில் கற்றுக் கொண்டான். கணிதத்தின் அடிப்படைச் செயல் களான கூட்டல், கழித்தல் பெருக்கல், வகுத்தல் ஆகியவைகளை அது எளிதில் போட்டுத் துல்லியமாக விடை கண்டு பிடிப்பதைப் பார்த்து அவன் அதிசய மும் ஆனந்தமும் அடைந்தான்.

கால்குலேட்டரைப் பயன்படுத்தும் ஆர்வம் அவனிடம் அதிகமாகியது. அதே சமயத்தில் பள்ளியில் மனப் பாடமாகப் படிக்கும் கூட்டல் பெருக்கல் வாய்ப்பாடுகளில் அவனது ஈடுபாடு குறைந்தது. கால்குலேட்டர் இருக்கும் போது எதற்காக வாய்ப் பாடை மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் ஏற்பட்டது.

தனக்கு என்று தனியாகக் கால்கு லேட்டர் தேவை என்பதைத் தந்தை யிடம் பவ்வியமாக எடுத்துக் கூறினான் கந்தசாமி. அதன் விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்காத தந்தை அவனுக் கொரு சிறிய கால்குலேட்டர் வாங்கிக் கொடுத்தார். தந்தையார், கந்தசாமிக்கு ஒரே ஒரு எச்சரிக்கை மட்டும் செய் திருந்தார், ''பள்ளிக்குப் போகும்போது கால்குலேட்டரைக் கொண்டு போகக் கூடாது.'' என்பதுதான் அது. தந்தை யின் ஆணையைத் தலைமேல் கொண்டு செயல்பட்டான் அவன்.

கால்குலேட்டரை கந்தசாமி எப் போதும் தன் சட்டைப் பையில் வைத் துக் கொண்டான். கடைக்குச் சென்று காய்கறி வாங்கும்போது கால்கு லேட்டரில் கணக்கு போட்டுப் பணத் தைக் கொடுத்தான். வாசலில் வரும் தள்ளு வண்டிக் காரரிடம் பொருட்



களை வாங்கினாலும் கால்குலேட்டரில் போட்டுப் பணம் கொடுத்தான். இவ்வாறு கந்தசாமியும் கால்குலேட்டரும் இணைபிரியாத தோழர்கள் ஆயினர்.

எல்லா மாணவர்களும் பெருக்கல் வாய்ப்பாடை மனப்பாடம் செய்திருந்தனர். ஒவ்வொரு பெருக்கல் வாய்ப்பாடிலும் இருபது வரை அவர்களுக்கு அத்துப்படி. ஆனால் கந்தசாமிக்கோ அது தெரியாது.

பள்ளியில் கணக்குப் போடும் போது பக்கத்தில் இருப்பவனைப் பார்த்து எழுதி ஓரளவு சமாளித்தான். வீட்டுக் கணக்குகளை எவ்வாறு செய்வது? அதற்கு கால்குலேட்டர் உதவி செய்தது. எல்லாக் கணக்குகளையும் கால்குலேட்டரின் உதவியால் சரியாகப் போட்டு வைத்துக் கொண்டான்.

இப்படி ஏற்பட்ட கால்குலேட்டர் பழக்கத்தால்தான், அவன் மின் நியை அதிகாரியும் ஆசிரியரும் போட்ட கணக்குகளை மனத்தில் போட்டு விடை காண முடியாது. தலை கவிழ்ந்து அவமானமடைந்தான்!

பாவ நாசம் கல்விப் பயணத்திலே கணித மேதை கந்தசாமி என்ற பெயருக்கு பங்கம் வந்துவிட்டது. இனி என்ன செய்வது? இந்தவரை அவன் பெருமைக்குக் காரணம் கால்குலேட்டரே என்ற உண்மயை யாரும் அறியவில்லை.

பாவநாசத்திலிருந்து திரும்பி வந்தபின் கந்தசாமி கால்குலேட்டரைத் தந்தையிடம் கொடுத்தான். "இனி மேல் இது தேவையில்லை. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்," என்றான்.

நாட்கள் சென்றன. கந்தசாமி மிகுந்த கவனத்துடன் பெருக்கல் வாய்ப்பாடுகளை மிக விரைவில் மனப்பாடம் செய்து கொண்டான். கால்குலேட்டரால் துருப்பிடித்துக் கிடந்த மூளை துடைக்கப்பட்டதும் வேகமாகச் செயல் படத் தொடங்கியது! மனதிலேயே சிறிய சிறிய கணக்குகளைப் போடும் திறமையை வளர்த்துக் கொண்டான். மனப் பயிற்சியைச் தொடர்ந்தான். இப்பொழுது உண்மையாகவே ஒரு கால்குலேட்டர் செய்யும் அளவுக்கு சரியாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் அவன் கணக்குப் போட்டான். நண்பர்கள் பல வழிகளில் அவனைப் பரிசோதித்தனர்! ஆசிரியரும் கஷ்டமான கணக்குகளைப் போட்டு அவன் திறமையைப் பரிசோதித்தார். கந்தசாமி மனக்கணக்குப் போட்டே உடனுக்குடன் அவர்களுக்கு விடை தந்து அசத்தினான். மறுபடி 'கணித மேதை கந்தசாமி' பட்டம் ஒட்டிக்கொண்டது! எல்லாம் பயிற்சி தந்த பரிசு! இத்தனை புத்திசாலியான கந்தசாமி அன்றைக்கு மட்டும் ஏன் அப்படி மக்கு மாதிரி நடந்து கொண்டான் என்ற இரகசியம் யாருக்கும் புரியவில்லை!



★ இங்கிலாந்திலிருந்து நியூசிலாந்துக்கு 1874 ஆம் ஆண்டில் ஒரு கப்பல் புறப்பட்டுச் சென்றது. அதன் பெயர் 'க்ருசேடர்'. அந்தக் கப்பலில் 214 பேர் பயணம் செய்தனர். திடீரென்று கப்பலில் ஓர் ஓட்டை ஏற்பட்டு 'குபுகுபு' என்று கடல் நீர் உள்ளே வரத் தொடங்கியது. நீர் இறைக்கும் பம்பு உடைந்து விட்டது. தப்ப வழியில்லை! இனி கப்பல் மூழ்கி விடும் இறப்பு நெருங்கி விட்டது என்று அனைவரும் முடிவு செய்த வேளையில், திடீரென ஓர் அற்புதம் நிகழ்ந்தது. கப்பலுக்குள் கடல் நீர் வருவது தானாகவே திடீரென்று நின்று விட்டது! அது எவ்வாறு என்று குழம்பிக் கொள்ளாது எல்லோரும் இறைவனை வணங்கினர். நன்றி செலுத்தினார்!

கப்பல், சால்மாரஸ் என்ற துறைமுகத்தை அடைந்தவுடன் பயணிகள் கீழே இறங்கிப் பார்த்த போது ஓட்டை இருந்த இடத்தை ஒரு மீன் அடைத்துக் கொண்டு இருந்ததைக் கண்டு வியப்பு அடைந்தனர்.


- ஏ. ஹரிகிருஷ்ணன்,
மேலப்பாளையம்.


ராஜாவானால்...
சந்திரன் விஷ்ணுவிடம் -
மூலம் : உ. பி. நாடோடிக் கதை
அமைப்பு ரே.,
படம் : புஷ்பம்
விளையாட யாருமில்லே... தனியா இருக்கேன்.
நல்ல சினேகிதனைத் தேடிக்கோ.
சந்திரன் பூமிக்கு வந்து -
புலியே! ராஜாவானால், என்ன பண்ணுவே...?
எதுவுமே கொம்பு வச்சுக்கக் கூடாதுன்னு சட்டம் போடுவேன்!


கொம்பு இருந்தாத்தானே எதிர்க்கும்?
நீ நல்ல சினேகிதன் இல்லே!
நரியிடம் வந்து -
உன்னை ராஜாவாக்கினால்... என்ன பண்ணுவே...?
நண்டெல்லாம் வெளில வசிக்கணும்னு! உத்தரவு போடுவேன்!
அப்பத்தானே சுலபமாப் புடிச்சு சாப்பிடலாம்!
நீ நல்ல சினேகிதன் இல்லே...!


பூனையிடம் வந்து -
நீ ராஜாவானால் என்ன செய்வே...?
மீன்களைத் தரைல வசிக்க ஆணையிடுவேன்.
நினைச்சப்போ பிடிச்சு சாப் பிடலாமே...!
நீ நல்ல சினேகிதன் இல்லே!
முயலிடம் வந்து -
உன்னை ராஜாவாக்கினால், என்ன நீ பண்ணுவே...?


யாரும் யாரையும் கொல்லாம, இயற்கையா இறப்பதையே, சாப்பிடலாம்! எல்லோரும் அன்புடனும் நட்புடனும் பழகணும்னு உத்தரவு ஒன்ணு போடுவேன்...!
முயலே! எனக்கு நண்பன் நீதான்!
எனக்கு நண்பனாக உனக்குத்தான் தகுதி இருக்கு! வா, போகலாம்.
சந்திரன் தன்னுடன் விளையாட முயலைக் கொண்டு போனார்.



மத்தியப் பிரதேச மனுநீதிச் சோழன்!

மத்தியப் பிரதேசத்தில் ஓர்சா என்ற பகுதி இருக்கிறது. அதை வெகு காலத்திற்கு முன்பு 'வீரசிங்க தேவ்' என்ற அரசர் ஆண்டு வந்தார். மன்னர் நீதிநெறி தவறாதவர். குடிமக்களின் நலன்களைக் காப்பதிலும், நீதி வழங்குவதிலும் அவர் நெருப்பாக இருந்தார். அரசர் எப்படியோ அப்படித்தானே அதிகாரிகள்? அதிகாரிகளும் அரசரது நோக்கத்திற்கு ஏற்றபடி நீதி தவறாதும், குடிமக்களுக்கு நன்மை புரிந்தும் வந்தார்கள்.

நீதி - தவறா மன்னர் வீரசிங்க தேவ்க்கு ஒரே ஓர் மகன், இளவரசன் ப்ரவீர்ராய். மன்னருக்கு நேர்மாறான குணமுடையவன்! அரசர் எப்படிக் குடிமக்களின் நலனுக்காக எதையும் செய்யத் துணிந்தாரோ அதற்கு நேர் எதிராக, நடக்கக்கூடியவன். தன்னுடைய விருப்பத்திற்கு எதிராக யார் இருந்தாலும் அவர்களைத் தீர்த்துக் கட்டத் தயங்காதவன். கடைந்தெடுத்த சுயநலவாதி.

இளவரசனை மாற்ற மன்னர் எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. மன்னர் நம்பிக்கை இழந்த நிலையில் இருந்தார்.

ஒரு நாள் இளவரசன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அங்கே தவம் செய்து கொண்டிருந்த ஒரு துறவியை அவன் தனது அம்பால் கொன்றுவிட்டான். செய்தி மன்னருக்கு எட்டியது.

''இளவரசன் என்று தயங்க வேண்டாம். உடனே ப்ரவீர்ராயைக் கைது செய்து என் முன் விசாரணைக்கு கொண்டு வாருங்கள்'' என்று மன்னர் கடுமையாக உத்தரவிட்டார்.

மன்னர் உத்தரவுப்படி பட்டத்து



''அந்த எழுத்தாளர் வித்தியாச மானவர். சொந்தப் பெயரில் கதை எழுது வார். கதை பத்திரிகையில வெளி வந்ததும் புனைபெயரில் பாராட்டுக் கடிதம் போடுவார்!''

- ந. நவமணி



''அதோ போறாரே, அவரின்றி ஓரணுவும் அசையாது...''

''அவர் என்ன கடவுளா?''

''இல்லே.. டிராஃபிக் கான்ஸ்ட பிள்!''

- கல்லிடை. கே. எல். குமணன்



''உங்க கிளாசிலே எத்தனை பேர் படிக்கிறாங்க?''

''நாற்பது பேர் வர்றாங்க. இருபத் தேழு பேர்தான் படிக்கறாங்க.''

- மொரப்பூர். சி. அருள்மணி

இளவரசனைக் கைது செய்து அவர்முன் விசாரணைக்காகக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

''எதற்காக அந்தத் துறவியைக் கொன்றாய்?'' என்று கேட்டார் மன்னர்.

''அவர் எனது செயல்களுக்கு இடைஞ்சலாக இருந்தார். அதனால் கொன்றேன்'' என்று திமிராகப் பதில் கூறினான் இளவரசன்.

மன்னரின் குணத்தை அறிந்த மந்திரி பிரதானிகள், இளவரசனை மன் னித்து விடும்படியும், தண்டித்து விட வேண்டாம் என்றும் மன்னரை மன் றாடி வேண்டினர்.

''குற்றமற்ற ஒரு துறவியைக் கொலை செய்து விட்டு, அதற்காக வருத்தம் கூடத் தெரிவிக்காது திமி ரோடு பேசும் இவனை மன்னிப்பது நடக்கவே நடக்காது. நீதி என்பது இந்த நாட்டில் எல்லோருக்கும் சமமானது. அதில் பாகுபாடு இருந்தால் அது நீதி யாகாது. இவன் செய்த கொலைக்கு மரண தண்டனைதான் சரியான தீர்ப்பு. உடனே இவன் தலையை வாங் குங்கள்,'' என்று உத்தரவிட்டார் மன்னர்.

யாரும் அரசரின் கட்டளையை நிறைவேற்றத் துணியவில்லை!

''கருணை காட்டுங்கள். உங்க ளுக்குப் பிறகு நாட்டை ஆள வேண் டியவர்!'' என்று கோரினார் அமைச்சர்.

''இந்த ஒரே காரணத்திற்காக, இவன் செய்யும் அநீதிகளைப் பொறுத் துக் கொண்டு போக முடியாது. அரச னுக்கும் ஆண்டிக்கும் ஒரே மாதிரியான நீதிதான்'' என்று எழுந்த அரசர், தனது கொடுமை நிறைந்த மகனைத் தானே தனது வாளால் கொன்று, நீதியை நிலைநாட்டினார்.

ஒரு பசுவுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைய தன் ஒரே மகனைத் தேர்க்காலில் இட்டு நீதியை நிமிர வைத்த மனுநீதிச் சோழனைப் போல், ஓர்சாவின் ''வீரசிங் தேவ்''வின் நீதி நெறி வழுவா ஆட்சியை நாட்டுப் பாட லில் மக்கள் நினைவுகூர்கிறார்கள்!

- எஸ். கண்ணகி, குருமப்பட்டி.



நம்ம பையன் ஏன் அழறான்?
திருவிழா ஊஞ்சலில இவனை மட்டும் ஏத்திக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்களாம்!
பத்தாம் நம்பர் வீட்டின் மேல் போய் அடிக்கடி உட்காராதே! அந்த வீட்டு மனிதன் பூனைப் படையில் இருக்காராம்!
பெரியவன் ஆனதும் என்ன செய்வாய்?
பூனைப்படையில சேர்ந்து பெரிய, பெரிய தலைவர்களுக்கு பாதுகாப்பாய் இருப்பேன்!
எங்கப்பா வருஷத்துக்கு ஒரு ஜோடி செருப்பு எடுத்து வருவார்!
எங்கப்பா ஒரு கல்யாணத்துக்கு ஒரு ஜோடி வீதம் செருப்பு எடுத்து வருவார்!
சிரிப்...
கருத்து: கே.சோமசேகர்
நாய் கடிச்சா நீ உடனடியா என்ன செய்வே?
ஐயோ... அம்மா... ...ன்னு கத்துவேன்!

ஒட்டகமும் நரியும்

ஓர் ஒட்டகமும் நரியும் நெருங்கிய நண்பர்களாக இருந்தன. இரண்டும் காட்டில் வசித்தன. ஒட்டகம் அறிவுக் கூர்மையுடன் இருந்தாலும் நரி மிகுந்த தந்திரசாலியாகத் தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொள்ள ஒட்டகத்தை நன்கு பயன்படுத்தி வந்தது. அது ஒட்டகத்தின் முதுகிலமர்ந்து எல்லா இடத்திற்கும் போயிற்று. ஒட்டகம் மிகுந்த நல்லியல்புடன் நரியோடு பெரிதும் இணங்கிப் போயிற்று.

ஒரு நாள் நரி ஒட்டகத்திடம், ஆற்றுக்கப்பால் மறுகரையில் கரும்புத் தோட்டம் இருப்பதாகக் கூறிற்று. ஆற்றைக் கடந்து சென்று கரும்பு தின்னலாம் என்று விருப்பம் தெரிவித்தது. ஒட்டகம் அதற்கிசைந்து நரியை முதுகில் அமர்த்திக் கொண்டு ஆற்றைக் கடந்து சென்றது. நரிக்குக் குறுகிய வயிறானதால் விரைவில் அதற்கு வயிறு நிரம்பி விட்டது. ஆனால், ஒட்டகத்திற்கோ இன்னும் பசியாறவில்லை. நரி விஷம எண்ணத்துடன் ஊளையிட்டது. ஒட்டகம், தான் தின்று முடிக்கும் வரை ஊளையிடாமல் இருக்க வேண்டிற்று. ஆனால் நரி, தனக்கு ஊளையிட்டுப் பழக்கமாகி விட்டதால் நிறுத்த முடியாது என்று சொல்லி ஊளையிடத் தொடங்கியது. நரியின் ஊளையைச் செவியுற்ற தோட்டக்காரன் பெரிய தடியும் கம்புமாக ஓடிவந்தான். நரி எங்கோ கண்ணில் படாது ஒளிந்து கொண்டது. ஒட்டகத்தின் உருவம் பெரிதாகையால் ஒளிந்து கொள்ள முடியாமல் போயிற்று. அதைக் கடுமையாக அடித்துத் துரத்தினான் தோட்டக்காரன்.



தோட்டக்காரன் சென்ற பிறகு நரி வெளியே வந்தது அறிவாளியான ஒட்டகம் நரியிடம் எதுவும் பேசவில்லை. மாறாக அதை வழக்கம் போல் முதுகில் சுமந்து ஆற்றைக் கடக்க முற்பட்டது. நடு ஆற்றுக்கு வந்ததும் ஒட்டகம் நின்று விட்டது. அது தனக்கு உருள வேண்டும் போலிருப்பதாக நரியிடம் கூறிற்று. நரி ''வேண்டாம் நான் நீரில் மூழ்கி இறந்து விடுவேன்'' என்று கெஞ்சியது. ஆனால், ஒட்டகம் தனக்கு உருண்டு பழக்கமானதால் தன்னால் உருளாமல் இருக்க முடியாது என்று சொல்லி உருண்டது. நரி ஆற்றில் மூழ்கி இறந்தது. தந்திரக் கார நரி அதன் வழியிலேயே பழி வாங்கப் பெற்றது.

– சிவரஞ்சன், ஆற்காடு.

வெறுமையின் காரணம்



கொ.மா.கோதண்டம்

"என்னப்பா இது எத்தனாவது மரம்....?"

"எம் பத்தி மூனுங்க."

கேள்வி கேட்டவன் டைரியில் குறித்துக் கொண்டு மரத்தில் அடையாளமிட்டான்.

பதில் கூறியவன் உருட்டுளியால் அடிமரத்தில் சின்ன துவாரம் செய்து பெரிய சிரிஞ்சர் ஊசியால் மரத்தில் மருந்தை ஏற்றினான்.

இரண்டு குரங்குகள் அந்த அடர்ந்த மலையடிவார மரங்களிலிருந்து குதித்து கீழே சண்டையிட்டுப் புரண்டன. ஒருவன் கல்லையெடுத்து ஓங்கவும் சண்டையை நிறுத்தி முறைத்தன. மற்றவனும் கல்லெடுக்கக் குனிய இரண்டும் மரத்தில் தாவி ஏறி ஓடி விட்டன.

"ஏம்ப்பா, போனவாரம் ஆஸிட் அடிச்ச மரங்கள்ள, எத்தனை பட்டுப் போயிருக்கு பாத்தியா?"

"எல்லாமே பட்டுப் போச்சிங்க."

"மரங்கள வெட்டுற வேல எப்படி நடக்காம்?"

"போன மாசம் பட்டுப் போன மரங்களயெல்லாம் வெட்டியாச்சி. செகரிச்ச கட்டைகள ஒரு பாற கடவுள ஒளிச்சி வச்சிட்டு வெறகுகளை மட்டும் லாரியில கொண்டு போயிட்டு இருக்காங்கய்யா."

மேற்கு மலை அடர் வனங்களில் அவர்கள் பெரிய பெரிய பச்சை மரங்களில் ஊசியின் மூலம் ஆஸிட் ஏற்றி பட்டுப் போகவைத்து மரங்களை வெட்டி வனங்களை அழித்துக் கொண்டிருந்தனர்.

காய்ந்த மரங்களை விறகுக்காக எடுத்துச் செல்லலாம் என்ற விதியை பயன் படுத்தி, வன அலுவலர்களை கைக்குள் போட்டுக் கொண்டு, ஒரு குழுவே இப்படிச் செய்து கொண்டிருக்கிறது.

மிக அடர்ந்த வனமாக இருந்த அந்த இடம் ஓரளவு வெட்ட வெளியாகவும் மொட்டை மலையாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.

"ஏம்ப்பா கையில கேமிராவச்சிகிட்டு திரியிராங்க? எனக்கென்னமோ அவங்களைப் பார்த்தா சந்தேகமா இருக்கு."

"அட நீங்க ஒன்று, எதுக்கெடுத்தாலும் சந்தேகமா? அப்படியே இருந்தாலும் நம்மை யாரு என்ன செய்திட முடியும்.

"நம்ம பாஸு என்ன லேசுப்பட்ட ஆளா! அப்படியே போலீசு நம்மை புடிச்சிட்டுப் போயிட்டாலும், ஒரே நாள்ள கேஸே இல்லாமே செஞ்சிர மாட்டாரா? நமக்கு எதுக்கு இந்த பயம்?"

"இருந்தாலும், இப்ப சர்க்காருல மரங்கள வெட்டக் கூடாதுன்னு கண்டிசனா இருக்காகளாமுல்லே? இந்த சமயத்துல அம்புட்டா ஆபத்தாச் சேன்னு சொன்னேன்?"

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாதுங்க, நம்ம வேலையைப் பாப்பம்"

வானத்தில் மேகங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. சில்லென்று ஒரு சாரல் போட்டு மறுபடியும் வெயில் அடிக்கத் துவங்கியது . தூரத்தில் காட்டுப் பறவைகளின் 'ட்ரியக்க ட்ரியக்கா' எனும் ஓசை ஏதோ வாத்தியம் போல கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று தூரத்தில் ஏதோ வெடிச் சத்தம் கேட்டது. அவர்கள் வேலையை நிறுத்தி உற்றுக் கேட்டனர்.

''என்னப்பாது சத்தம்?''

''யாராச்சிம் வேட்டைக் காரங்களாயிருக்கும்.''

''எனக்கென்னமோ பயமா இருக்குப்பா. இன்னக்கி வேலை போதும். ஏறங்கிடுவமா?''

''அட ஒன்னும் பயமில்லங்க போசாமே வேலை நடக்கட்டும்.''

அருகிலே துப்பாக்கிச் சத்தம்!

அவர்கள் ஒளிவதற்கு முயன்றனர்.

''ஓடாதே சுட்டுடுவேன்'' மீண்டும் சுடும் ஓசை.

இவர்களை நோக்கிப் போலீசார் வந்து கொண்டிருந்தனர்.

பின்னால் நான்கைந்து பேர் கைகளில் விலங்கிடப்பட்டு வந்து கொண்டிருந்தனர். கடைசியில் இரண்டு



சிறுவர்களும் ஒரு மலைவாசிப் பைய னும் வந்தனர்.

நின்று விட்ட இவர்களைப் பிடித்து கைகளில் விலங்கை மாட்டினர்.

ஒருவன் கையிலிருந்த டைரியை அதிகாரி பறித்துக் கொண்டார்.


''நீங்க மரங்கள்ள போட்டிருந்த அடையாளங்களைப் பாத்துக் கிட்டே ஓங்க கிட்ட வந்துட்டோம். நீங்க தவிர, ஓங்க குரூப்புல வேற யாரு இருக்கா? வேல எங்கே நடைக்குது சொல்லுங்க..?''

அதட்டினார் அதிகாரி, பின் கழுத் தில் ஓங்கி அறைந்தார்.

''இப்ப இங்க ஒருத்தரும் இல் லிங்க. கட்டைகளை எடுத்துட்டுப் போக நாளைக்குத்தான் லாரி வரும், மத்ததெல்லாம் எங்க பாலு''தாங்க.''

அவர்கள் அடிவாரம் நோக்கி இறங்கி வந்து கொண்டிருந்தனர். புல் திரட்டில் மேய்ந்து கொண்டிருந்த மான் குட்டி ஒன்று இவர்களைப் பார்த்ததும் ஓடத் துவங்கியது. அடிவாரம் வந்து விட்டனர்.

''தம்பிகளா! இவங்கள புடிக்கணு முன்னு இங்க உள்ள அதிகாரிங்க ரொம்ப நாளா முயற்சி செஞ்சும்





ஜோயி

★ கங்காருவின் வயிற்றுப் பையில் வசிக்கும் குட்டிக் கங்காருவுக்குத்தான் 'ஜோயி' என்று பெயர். இந்த ஜோயி பிறக்கும் போது ஒரு அவரைக் காய் போல இருக்கும்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 14.



கொடிக் கம்பம்

★ அமெரிக்காவில் ரஷ்ய தூதுவராய் வந்திருந்த ஒரு தூதுவரை லிங்கன் சந்தித்தார். லிங்கன் தூதுவரைப் பார்த்து, 'நான் அமெரிக்காவின் குடியரசுத் தலைவனாக இல்லாது இருந்திருந்தால், என்னை நீங்கள் எப்படி மதிப்பீர்கள்?' என்று கேட்டார். அதற்கு, கிண்டலுக்கு பெயர் போன அத்தூதுவர், 'உங்களை ஒரு கம்பமாக மதிப்பேன்' என்று லிங்கனின் குச்சி போன்ற உருவத்தை எள்ளி நகையாடினார். ஆனால், லிங்கனோ கொஞ்சம் கூட அதிர்ச்சியோ ஆத்திரமோ அடையாமல், ''அ தா வ து உங்களுடைய தேசியக் கொடி பறக்கும் வணக்கத்திற்கு உ ரி ய கொடிக் கம்பமாக மதிப்பீர்கள் இல்லையா?'' என்று கேட்டார்.

- எஸ். ரவி, ஆற்காடு.

முடியல்லே, உங்க தந்தியப் பாத்ததும் எங்க மேலதிகாரி ஸ்பெஷல் டூட்டியா போட்டு எங்களை உடனே அனுப்பி வச்சாங்க. நாங்களும் என்ன ஆகுமோன்னு தயக்கமாத்தான் வந்தோம். ஆனா, வந்த வேகத்திலேயே காரியம் எளிமையா முடிஞ்சி போச்சு! இது மேலதிகாரிக்கி காதுக்கு போயிட்ட விசயமாதலால், இவங்க இனி சாமான்யமா தப்பிக்கவும் முடியாது. நாங்களும் அவசரமா வந்ததுனாலே, உங்களோட பேசவும் முடியலே. இப்ப சொல்லுங்க நீங்க யாரு தம்பிகளா?"

அதிகாரி கேட்டதும் முதலாவதாக வந்த பையன் பேசினான்.

''என் பேரு கண்ணன். இவன் பேரு பாலகிருஷ்ணன். ரெண்டு பேரும் அடிக்கடி விடுமுறையில் இங்க அருவியில குளிக்க வருவோம். அப்ப இங்க பல இடங்கள்ள மரம் வெட்டுறதெல்லாம் பார்த்தோம்.

''கொஞ்ச காலமா டீவியிலே பத்திரிகைகள்ள 'மரம் வெட்டக் கூடாதுன்னும் மரங்கள வளர்க்கணும்னும்'' பேசுறத கேட்டதுனாலயும், ஏற்கெனவே நூலகத்துல புத்தகங்க படிக்கும் போது `மரங்க நம்ம வாழ்க்கைக்கு எவ்வளவெல்லாம் முக்கியமா பயன்படுதுன்னும்' தெரிஞ்சிகிட்டோம். வீட்டுக்கு வேண்டிய எல்லாமும் மரங்கள்ள இருந்துதானே கெடைக்கும்?''

கண்ணன் பேசும் போதே பாலசுப்பிரமணி,

''அது மட்டுமா? மரங்க கெட்ட காற்றை சுத்தப்படுத்தி நாம சுவாசிக்கிறதுக்கு நல்ல காத்தத் தருது. மழை பெய்ய மரங்கதான் கா ர ண மா இருக்கு?'' என்றான்.

உடனே கண்ணன் ''அ தே தா ட கோடைக் காலத்துல காற்றிலே இருக்கிற நீர்ச் சத்தை இலைகள் மூலமா வாங்கி தனக்கு வேண்டியது போக பூமிக்கும் அனுப்புதாம் மரங்கள். இது எங்க தாத்தா சொன்னாரு.''

அதிகாரி இருவரையும் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''அடேயப்பா தாவரங்களப் பத்தி இந்த சின்ன வயசுலேயே ரொம்ப விசயங்க தெரிஞ்சு வச்சிருக்கீங்களே!

ஒரு நாடு வளமா இருக்கனுமுன்னா மூனுல ஒரு பங்கு வனங்களா இருக்கனுமாம். ஆனா, நம்ப நாட்டுல ரொம்ப குறைவாதான் இருக்கு. அதை யும் சுயநலம் பிடிச்ச தேசத் துரோகிங்க வெட்டி நாசப்படுத்துறாங்க. நீங்க பொது அறிவுச் செய்திகளையும் படிக் கிறதாலே தேசிய உணர்வோடு வனங் களை அழிக்கிறவங்களைத் துணிஞ்சி புடிச்சி தந்துருக்கீங்க. அதுக்கு மொதல்ல உங்களுக்கு நன்றி தம்பி களா.''

''அதோட ஒரு எழுத்தாளர் சொன்னதையும் இப்பச் சொல்றேன் கேளுங்க!

'இப்ப உள்ள அணு ஆயுதங்களால உலகத்துல உள்ள மனித குலம் பூராவும் ஒரு சமயம் அழிஞ்சி கூட போகலாம், ஆனா, இந்த மரங்க மட்டும் மீண்டும் மீண்டும் இந்த மண்ணுலகம் இருக்கும் வரையிலும் தோன்றிக் கொண்டே இருக்குமாம்! இதனாலேயே மரங் களுக்கு இருக்கும் பெருமைய நாம தெரிஞ்சிகிடலாமே. சரி தம்பிகளா, இப்ப நாம இவங்களோட வேனுல போறோம். உங்களுக்கு மேல எழுதி நான் அரசாங்க பரிசு தர ஏற்பாடு செய்வேன். நீங்க மத்த மாணவர் களுக்கும் இது போன்ற தேசிய உணர் வுகளை ஊட்டப் பாடுபடணும். சரி தானே?''

''சார் ஒரு விஷயம்!''

''என்ன தம்பி சொல்லு.''

''நம்ப பின்னாலே வாறானே ஆதி வாசிச் சிறுவன் நீலவன், அவன்தான் சார் இந்தப் பெருமைக்குக் காரணம், நாங்க வரும் போதெல்லாம் எங் களுக்கு வனங்க உள்ளே அழைத்துச் சென்று காட்டுவான், மிருகங்களையும் காட்டுவான். மரங்கள தெய்வமா வணங்குவான் சார்! இங்க மரங்கள அழிக்க ஆஸிட் ஊத்தி பட்டுப் போகவச்சி வெட்டுறத எங்களுக்குக் காட்டி, இத எப்படியும் நிறுத்தணு முன்னு எங்களுக்கு அவன்தான் சார் உணர்த்தினான். அதனால், முறையா பரிசு அவனுக்குதான் சார் சேரணும்.''

''தம்பி கண்ணா! நீ அரசாங்கத் துக்கு உதவி செஞ்சதோட அந்தப் பெருமைக்கு உரியவன் ஒரு காட்டுச் சிறுவன்னு பெருந்தன்மையா சொல் வதைக் கேட்கும்போதே, எங்களுக்கு உன் உயர்ந்த குணம் தெரியுது. உன் பெரிய மனசுக்குப் பாராட்டு. பரிசு உங்க மூணு பேருக்குமே கிடைக்கும். அதற்கான ஏற்பாடுகளை நான் செய் வேன்.''

''சரி எல்லாரும் வண்டியில ஏறுங்க போகலாம்.''

தயாராக இருந்த வேனில் அவர்கள் ஏறிக் கொண்டார்கள்.

கண்ணனும் பாலசுப்பிரமணியும் நீலனின் கைகளைக் குலுக்கி விடை பெற்றுக் கொண்டனர். வேன் புறப் பட்டது.

நீலன் கைகளை ஆட்டி விடை தந்தான்.




குழந்தையின் தலை!


★ பேரறிஞர் பெர்னாட்ஷாவைப் பார்க்க ஒருவர் வந்தார். ஷாவின் அறையில் பூக்கிண்ணம் ஒன்று கூட இல்லாததைப் பார்த்து, ''உங்களுக்கு மலரென்றால் மிக வும் பிடிக்கும் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். இங்கே ஒன்றையும் காண வில்லையே!'' என்றார். ''மலர் மட்டும் அல்ல, குழந்தைகளைக் கூட எனக்கு மிகவும் பிடிக்கும். அதற்காக, அவர்கள் தலையை வெட்டிச் செருகி வைப்பது என் வழக்கமில்லை'' என்றார். வந்தவர் ஷாவின் பதிலால் வெட்கித் தலைகுனிந் தார்.


- தா. சிந்துகுமார், திருவட்டார் (குமரி).

மந்திரவாதி எடிஸன்


கதை : குமரன்
படம் : லலிதா—




எடிசன் முட்டையின் மீது அமர்ந்தான்...
குவாக்! குவாக்!
அடடா... முட்டையெல்லாம் உடைஞ்சு போச்சே...!
முட்டாள்! உன்னால குஞ்சு பொரிக்க முடியும்னு நினைச்சியா...?
எடிசனின் தாய் ஆறுதல் சொன்னாள்...
அம்மா... நான் முட்டாளா?
இல்லே தாமஸ்... ஒவ்வொரு தடவையும் பரிசோதனைமுயற்சி-கள் வெற்றி பெறுவதில்லை... தோல்விகள் தான் வெற்றியை அடையும் படிகள்...!
எடிசனின் யோசனைகளும் பரி-சோதனைகளும் பல சமயம் ஆபத்தில் முடிந்தன...
இந்தக் கால்வாயில் நீரின் நிறம் மாறியிருக்கே, ஏன்? குதிச்சுப் பார்க்கிறேன்!
கால்வாயிலிருந்து மீட்கப் பட்டவன், கோதுமைக் குதிரில்...
இதற்குள் கோது-மை எப்படிக் கொட்டுது, சரியுது...?


ஐயோ...! ஐயோ...!
நல்ல வேளை, குதிருக்குள் விழுந்த எடிஸன் காப்பாற்றப் பட்டான்...
எடிஸன் வீட்டுத் தோட்டத்தில் நிறையப் பழங்கள், காய்கறிகள் விளைந்தன...
அம்மா, நம் தேவைக்கு அதிகமா இருக்கே, விற்று வரவா...?
சரி...!
விற்று வந்த பணத்தில் அம்மா எடிஸனுக்கு ஒரு பங்கு தந்தாள்.
இந்தா, சேமித்து வை...!
சேமித்த பணத்தைக் கொண்டு எடிஸன் வீட்டிலேயே ரஸாயனச் சோதனைக் கூடம் அமைத்தான்...
உன் நண்பர்கள் வந்து விஷமம் பண்ணினா ஆபத்து...!
எல்லா பாட்டில்களிலும் 'விஷம்'னு லேபிள் ஒட்டிடறேன்...!
ஒரு நாள் நண்பன் மைக்கேல்...
என்னடா, மறுபடி குருட்டு யோசனையா...?
காற்றைவிட லேசான வாயு என்ன பண்ணும்னு யோசிக்கறேன்!


எடிஸன், மைக்கேல் மீதே பரிசோதனை நடத்தினான்...
ஐ, ஐடியா! இதைச் சாப்பிடடா!
என்ன பண்ணும்?
வயிற்றில் நிறைய வாயு உற்பத்தியாகும். அது காற்றை விட லேசானதால், நீ வானில் மிதக்கலாம்! பறக்கலாம்!
அட ஜாலி!
மைக்கேல் ஆசையுடன் ஸிட்லிஸ் பவுடரை விழுங்க...
ஐயோ.. அம்மா! வயிற்றை வலிக்குதே!
எடிஸனின் அம்மா ஓடி வந்து...
மைக்கேல்! பயப்படாதே! சரியாயிடும் ஒத்தடம் தரேன்!
தாமஸ்! இந்த மாதிரி ஆபத்தில் இறங்குறதா இருந்தா, உன் பரிசோதனைகளை மூட்டை கட்டு...!
எடிஸன் பள்ளிப் பரீட்சைகளில் ரொம்பக் குறைவாக மார்க் வாங்கினான்.
உங்க பையனைக் கண்டிச்சு வையுங்க... கிளாஸ்ல கவனிக்கறதில்லை சதா ஏதோ திருட்டு யோசனையா இருக்கான்...!


மகனுக்குத் தாயாரே பாடங்கள் கற்றுத் தரத் தீர்மானித்தாள்...
பள்ளிப் புத்தகங்கள் படிச்சால் போதாது; பொது அறிவு வளர, நிறைய படிக்கணும்...!
நூலகத்தில்...
இதை வாங்கிட்டுப் போவோம்...!
அடிசன் ஒரு பழைய கடிகாரத்தை அக்கு வேறு . ஆணி வேறாகப் பிரித்து..
இந்தப் புத்தகத்தின் உதவி-யுடன் மறுபடி இணைப்பேன்..!
மின்சாரம் தயாரிக்கும் குட்டி இயந்திரம் உருவாக்கினான்...
இந்தக் காகிதப் பொம்மைகள், மின்சாரத்தால் டான்ஸ் ஆடுது!
மின்சாரம் தயாரிக்கும் கருவியை வேறு மாதிரி இணைத்துப் பார்க்கிறேன்...
பிற்காலத்தில் இதுவே டைனமோ ஆயிற்று...



தொடர்ச்சி 51 ஆம் பக்கம்

சோம்பேறி ராஜா!

பர்வதபுரத்தை ஆண்ட ராஜா படு சோம்பேறி. அரச சபைக்குப் போக மாட்டார். எப்பொழுது பார்த்தாலும் உறங்குவார். தூங்கி எழுந்ததும் சாப் பிடுவார். சாப்பிட்டதும் மறுபடி தூங்கு வார்.

மன்னர் இப்படி இருந்தால் அரசாட்சி எப்படி நடக்கும்? அதிகாரி களும் தங்கள் கடமைகளைச் செய்யாது ஏனோ தானோ என்று அசட்டையாக இருந்தனர். அமைச்சருக்குக் கவலை பிடித்துக் கொண்டது. ஒரு திட்டம் போட்டார்.

தூங்கி எழுந்த மன்னர், வழக்கப் படி சாப்பிட வந்தார்.

''அரசே, என் வீட்டுக்குப் போக லாம். அங்கே சாப்பிடலாம்'' என்றார் அமைச்சர். அமைச்சர் வேண்டிக் கொண்டபடி ராஜா ஒரு வணிகனாக மாறுவேடம் போட்டுக் கொண்டார். இருவரும் மாறுவேடத்தில் கிளம்பி னார்.

வழியில் ஆற்றங்கரை. ஒரு சல வைத் தொழிலாளி தன் கழுதையை அடித்துக் கொண்டிருந்தான். அமைச்சர் விசாரித்தார்.

''இது தன் வேலையைச் செய்வ தில்லீங்க. சதா தூங்குது. அழுக்கு மூட்டையைச் சுமக்க சண்டித்தனம் பண்ணுது. ராஜா எப்படி இருக்காரோ அப்படித்தானே இதுங்களும் இருக் கும்?''

அமைச்சர் ராஜாவை அழைத்துக் கொண்டு கிளம்பினார். வழியில் ஒரு பெரிய குளத்தை அரசாங்க செலவில் வெட்டும் பணி நடந்து கொண்டிருந் தது. ஆனால், பணியாளர்கள் யாருமே வேலை செய்யாது, மரத்தடியில் கட்டம் போட்டு விளையாடிக் கொண் டிருந்தனர்.

அமைச்சர் அதிகாரியை வரவழைத் தக் கேட்டார்.


''யாருங்க இதுக்கெல்லாம் கவலைப்படறாங்க. ராஜாவே தூக்கப் பிரியரா இருந்து நிர்வாகத்தைக் கவனிக்காததால், எல்லோருமே ஏனோ தானோ என்றுதான் இருக்கிறார்கள்'' என்று பதிலளித்தார் அதிகாரி.




''அமைச்சரே... எனக்கு விழிப்பு வந்து விட்டது. வாருங்கள் அரண் மனைக்குப் போகலாம்'' என்றார் அரசர்.

அமைச்சர் போட்ட திட்டம் வெற்றி பெற்றது!

– எம். கே. முத்து அண்ணன்,
பொடரன்காடு.


1
2
3
4



விடுமுறைப் போட்டி - 2

இங்கே முதல் நான்கு தொகுதிகளில் ஒவ்வொன்றிலும் நான்கு படங்கள் இருக்கின்றன. இவற்றில் மூன்றில் உள்ள ஒரே ஓர் எழுத்தை மட்டும் எடுத்துச் சேர்த்தால் மூன்று எழுத்துக்களைக் கொண்ட நான்காவது படத்தின் பெயர் கிடைக்கும். ஐந்தாவது தொகுதியில் ஐந்து படங்கள் இருக்கின்றன. இவற்றுள் நான்கு படங்களில் இருந்து ஒரே ஓர் எழுத்தை மட்டும் எடுத்துச் சேர்த்தால் ஐந்தாவது படத்தின் பெயர் கிடைக்கும். கண்டுபிடிக்கும் ஐந்து படங்களின் பெயர்களையும் குறிப்பிட்டு, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு.

பார்த்தால் திகைப்பூட்டுவதாகத் தோன்றினாலும் சிறிது முயன்று பார்த்தால் கண்டிப்பாக உங்களால் விடை காண முடியும். கோகுலம் வாசகர்களால் முடியாததும் உண்டா?

விடுமுறைப் போட்டி - 2

பெயர்: ....

வயது: ....

முகவரி: ....

....

....


பின்கோடு: ....


முடிவு தேதி : 15.6.92


விடைகள்


1. ....
2. ....
3. ....
4. ....
5. ....


மறைந்திருப்பவரைக் கண்டுபிடிக்க, புள்ளியுள்ள கட்டங்களுக்கு வண்ணம் தீட்டிப் பாருங்கள்





எட்டு மணி நேரத்தை எடிஸன் வீணாக்க வில்லை...
அடேயப்பா! எத்தனை நூல்கள்! ஒன்று விடாமல் படிப்பேன்!
முதல் ஷெல்ஃபில் ஆரம்பித்து ஒவ்வொரு புத்தகமாகப் படித்தான் எடிஸன்... நூலக நிர்வாகி...
தம்பி! நூல்களைத் தேர்ந்தெடுத்து படிப்பதே நல்லது. உனக்கு என்ன பிடிக்கும்?
விஞ்ஞானப் பரிசோதனைகள்.
உன் வயதுக்கேற்ற விஞ்ஞான நூல்கள் எடுத்துத் தரேன்... அத்துடன் விக்டர் ஹியூகோ நாவல்களும் படி...
தன் வேலையிலும் முனைப்புடன் ஈடுபட்டான் எடிஸன்
ஸார்! நான்தான்! சாக்லேட்.... பெப்பர் மின்ட்...!
பணம் சம்பாதிக்கப் புது வழிகள் கையாண்டான். பத்திரிகைக் கடை திறந்து...
கடையை உன் பொறுப்பில் விடறேன்... லாபத்தில் பாதி உனக்கு; பாதி எனக்கு...!



அப்படியும் பணம் போதாமல்... சுற்றுலாப் பயணிகளிடம்...
குன்று உச்சியில் குடிசை போட்டிருக்கோம்! சோடா கிடைக்கும்! அங்கிருந்து பார்த்தா இயற்கைக் காட்சி பிரமாதம்!
நாலு டிக்கெட் கொடு!
ஒரு நாள் ஏராளமான சாக்லேட், பெப்பர்மிண்ட்களுடன் ரயில் ஏறினான்...
புது மாதிரி சாக்லேட்கள் வாங்கியிருக்கேன்; விற்பனையில் நல்ல லாபம் வரும்.
துரதிர்ஷ்டவசமாக அன்று ரயில் தடம் புரள...
ஐயோ! ஒரு மாச சம்பாத்தியம் முதலீடு செய்தேனே! எல்லாம் சிதறிப் போச்சே!
முதலீட்டை நஷ்டமாக்க விரும்பாத எடிஸன்...
மண்ணில் விழுந்த சாக்லேட்டுகளை யாரும் வாங்க மாட்டாங்க! நானே பொறுக்கி சாப்பிட்டுடறேன்!
அன்று இரவு எடிஸனின் தாய் டாக்டரை அழைக்க வேண்டியதாயிற்று...
சாக்லேட் இனிப்பு! மருந்து கசப்பு!
சாக்லேட் ஏராளம்! மருந்து வேளைக்கு ஒரு ஸ்பூன் தானே!
போக்கிரி!!


அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் மூண்ட போது...
பயணிகள் செய்தி அறியத் துடிக்கிறாங்க. ரயிலிலேயே பார்சல் வேன் டு வைப்பிலேயே குட்டி அச்சகம் அமைக்-கிறேன்...
வீக்லி ஹெரால்ட் ஸார்! சூடான செய்தி ஸார்!
ஓடும் ரயிலில் அச்சான முதல் பத்திரிகை என உலகப் புகழ் பெற்றது அது...
எடிஸன் தன் பரிசோதனைச்-சாலையை-யும் ரயிலில் அமைக்க அனுமதிக்கப்-பட்டான்... ஒரு நாள் ரயில் குலுங்கி நிற்க...
ஐயோ! பாஸ்ஃபரஸ் பாட்டில் கவிழ்ந்துடுச்சே!
பாஸ்ஃபரஸ் எரிய, ரயில் பெட்டியில் திகு திகுவென்று தீப்பிடிக்க...
தண்ணீர்! தண்ணீர் கொண்டாங்க!
இதோ வரேன்!
அடுத்த ஸ்டேஷனில்...
உன்னாலே ரயிலுக்கு ரொம்ப ஆபத்து... இறங்கிக்க... ஓடப்பா!



எடிஸன் வருத்தத்தோடு அலைந்தான்... ஒரு நாள்...
ரயில் வருது... ஐயோ! குழந்தைக்கு ஆபத்து!
உயிருக்கு அஞ்சாமல் பாய்ந்து சென்று...
காப்பாத்திட்டேன்!
ஸ்டேஷன் மாஸ்டரின் குழந்தை அது!
என் செல்வத்தைக் காப்பாத்தினே! ஆனா... உனக்குப் பரிசு தரப் பணமில்லை...!
தந்தி அனுப்பக் கத்துத் தாங்க போதும்!
ஸ்டேஷன் மாஸ்டரால் மறுக்க முடியவில்லை...
மூன்றே மாசத்தில் தந்தி அடிக்கிறதிலே நிபுணனாயிட்டியே!
ஒரு ஸ்டேஷனில் தந்தி அனுப்பும் பணியில் வேலைக்குச் சேர்ந்தான் எடிஸன்...
கனடாவில் இதே வேலைக்குக் கூப்பிடுகிறார்கள்... சம்பளம் அதிகம்...


எடிஸனுக்கு எங்கு போனாலும் வரவேற்பு...
வேகமாகத் தந்தி அனுப்பிப் பெறுவேன்... கருவிகளைப் பழுது பார்க்கவும் தெரியும்...
பேஷ்... உன்னை மாதிரி ஆள் தான் வேணும்!
திறமை இருந்தும் எடிஸனுக்குச் சம்பளம் போதவில்லை...
அப்பா - அம்மாவுக்குப் பணம் அனுப்பணும்... கிழக்கே போனா இன்னும் நிறையச் சம்பாதிக்கலாம்.
நியூயார்க்கில்...
தங்கம் கிடைச்சது பற்றி இங்கே நாடெங்கிலு-மிருந்து தந்திகள் வரும். உடனுக்குடன் பட்டுவாடா ஆகணும்...
பொறுப்பை என்னிடம் விடுங்க!
எடிஸன் மறுபடி பரிசோதனைக்-கூடம் அமைத்தான்...
முந்நூறு டாலர் சம்பளத்தில் பெற்றோருக்கும் அனுப்பி இன்னும் மிச்சமிருக்கு...
பரிசோதனைக் கூடத்தில் பங்கு மார்க்கெட்டுக்கு உதவும் ஸ்டாக் டிக்கரை எடிஸன் அபிவிருத்தி செய்ய...
வெற்றி! வெற்றி!



உன் புதிய தயாரிப்பை நான் வாங்கிக்கறேன்; என்ன விலை?
மூவாயிரம் டாலர்னு சொல்வோமா? அதிகமா? இவரையே கேட்போம்...
நீங்க எவ்வளவு தரத் தயாராயிருக்கீங்க; அதைச் சொல்லுங்க!
நாற்பதாயிரம் டாலர்!
எடிஸன் ஒரு மின் கடை திறந்தான்...
முன்புறம் கடை; பின்பக்கம் பரிசோதனைக் கூட உப-கரணங்கள்...
பணம் சேரச் சேர 1876ல் ஒரு முழுமையான சோதனைக் கூடம் திறந்தான்...
முதல்ல ஒளிக்கு மின்பல்பு; பிறகு பாட்டுக் கேட்க கிராமஃபோன்; அப்புறம் பார்க்க சினிமாக் காட்சி உருவாக்கணும்...
எடிஸனின் ஆயிரத்துக்கு மேற்பட்ட தயாரிப்புகள் காரணமாக...
எடிஸன் மின்சார மந்திரவாதி என்று அழைக்கப்பட்டார்...
வெறும் மந்திரவாதியில்லே... மனித சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தையே உயர்த்தியவர்!



நூறு ரூபாய் இரகசியம்!

1. அச்சாணி

''அந்தோணி சாமி...
ஆறுமுகம்...
ஈஸ்வரமூர்த்தி....''

ஆசிரியர் வருகைப் பதிவேட்டிலிருந்து பெயர்களை நிதானமாகப் படித்தார். ஒரு பெயரை ஆசிரியர் கூப்பிட்டதும், அந்தப் பெயருக்குரிய மாணவன் எழுந்து நின்று 'யெஸ் சார்' என்று கூறிவிட்டு உட்கார்ந்தான். அடுத்த பெயர் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவன் எழுந்து தன் வருகையைத் தெரிவித்தான். ஆசிரியர் தொடர்ந்து பெயர்களைப் படித்துக் கொண்டே வந்தார்.

அது ஒன்பதாம் வகுப்பு. அதுதான் முதல் பீரியட். மாணவர் வருகையைப் பதிவுசெய்து கொண்டிருந்தவர் வகுப்பாசிரியர் குப்புசாமி. அவர்தான் கணக்காசிரியர். அதனால், அவர் வகுப்பில் எப்போதும் அமைதியிருக்கும். வருகைப் பதிவின் போது வகுப்பில் ஆசிரியர் குரலையும், மாணவர் பதிலையும் தவிர வேறு ஒலியே இல்லை.

ஆசிரியர், பெயர் பட்டியலின் இறுதிக்கு வந்து விட்டார். அகர வரிசைக்குப் பொருந்தாமல், மேலே இருக்க வேண்டிய ஒரு பெயர், கீழே கடைசிப் பெயராக இருந்தது.

''ஓ, நம்ம வகுப்பிலே புதுசா ஒருத்தனைச் சேர்த்திருக்கறதா சொன்னாங்களே, அவன் பெயரா இது. உம்... அடுத்த மாதம் இந்தப் பெயர் இறுதிப் பெயராயிருக்காம உரிய இடத்துக்குப் போயிடும்.''

குப்புசாமி நினைத்துக் கொண்டே, 'பரதன்' என்று அழைத்தார். அழைத்ததுடன் அந்தப் பரதனைப் பார்க்கும் ஆவலில், பதிவேட்டில் பதிந்திருந்த கண்களைப் பெயர்த்து வகுப்பின் மீது படர விட்டார்.

மற்ற மாணவர்கள் அவருக்கு அறிமுகமானவர்கள். பெயர், உருவத்தோடு குரலும் அவருக்குத் தெரியும். அதனால் விடைசொல்லும் ஒவ்வொருவனையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. இப்போது பரதன் என்னும் புதிய மாணவனைப் பார்க்க விரும்பினார்.

குப்புசாமி 'பரதன்' என்று படித்ததும், அடுத்த நொடியே 'யெஸ் சார்' என்னும் குரல் கேட்டது. குரல் கேட்ட போது ஆசிரியர் வகுப்பைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். யாரும் எழுந்து நிற்பது போலத் தெரியவில்லை. அதனால், மீண்டும் 'பரதன்' என்று கூப்பிட்டார். இப்

டாக்டர் பூவண்ணன்



முதல் வீராங்கனை

★ 15-ஆம் நூற்றாண்டில் விஜயநகரத்தில் வாழ்ந்த ஹரியக்கா என்ற பெண்தான் முதன் முதல் மல்யுத்தம் செய்த பெண் ஆவாள். மல்யுத்தம் செய்யும் போதே அவள் இறந்து போனது குறிப்பிடத்தக்கது.
- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.

போதும் 'யெஸ் சார்' குரல் எழுந்தது. ஆனால் யாரும் எழுந்து நிற்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை புதிய மாணவனுக்கு எழுந்து நின்று 'யெஸ் சார்' சொல்ல வேண்டும் என்பது தெரியாதா? அல்லது, புதிய மாணவன் வராமல் அவனுக்குப் பதில் யாராவது 'பிராக்ஸி' கொடுக்கிறார்களா? குப்புசாமியின் வகுப்பில் பிராக்ஸி தரும் துணிச்சல் யாருக்காவது வருமா?

குப்புசாமி பொறுமை இழந்தவராக, ''யாரது பரதன்? எழுந்து நில்லு'' என்று கொஞ்சம் உரக்கவே கூறினார். குரலில் கோபமும் கொஞ்சம் கலந்திருந்தது.

''சார், அவன் எழுந்து நின்றுதான் பதில் சொல்றான். நீங்கதான் சார் அவனைப் பார்க்கலே'' - முதல் பெஞ்சியிலிருந்த நாகேந்திரன் கேலிக்குரலில் கூறினான்.

குப்புசாமியின் கோபம் நாகேந்திரன் பக்கம் திரும்பியது. ''நாகா, முதலில் நீ எழுந்து நில்லு. அப்புறம் நீ சொல்ல விரும்புறதைச் சொல்லு'' என்றார்.

ஆசிரியரின் குரலில் சூடு இருந்ததை, உணர்ந்த நாகேந்திரன் எழுந்து நின்றான். ''சார், புதுப்பையன் பரதன் எழுந்து நின்றுதான் பதில் சொல்றான்னு சொல்ல வந்தேன் சார்'' என்றான்.

''பரதன் எழுந்து நிற்கிறானா? எங்கே?'' — குப்புசாமி கேட்டுக் கொண்டே வகுப்பைப் பார்வையால் அலசினார். கடைசி பெஞ்சியில் ஒரு கை உயர்ந்திருப்பது தெரிந்தது. முழு உருவம் தெரியவில்லை. குப்புசாமி தாமே நாற்காலியிலிருந்து எழுந்து நின்று பார்த்தார்.

கடைசி பெஞ்சியில் ஒருவன் எழுந்து நிற்பது தெரிந்தது. அவன் நின்ற நிலையிலும், உட்கார்ந்திருக்கும் மாணவர்களின் உயரத்துக்கும் குறைவாகவே இருந்தான்! அதனால் ஆசிரியர் கண்ணுக்கு அவன் புலப்படவில்லை.

''சார், அவன் சித்திரக்குள்ளன் சார். பூதக் கண்ணாடி வைச்சுப் பார்த்தாதான் தெரிவான் சார்.''

மீண்டும் நாகேந்திரனே பேசினான். பேசி முடித்த பிறகு திடீரென்று எழுந்து நின்று, ''சார், சார் உட்கார்ந்தே பேசிட்டேன்'' என்று சொல்லி விட்டு, உட்கார்ந்தான்.

''நாகேந்திரா,'' - ஆசிரியர் அழைத்தார்.

நாகேந்திரன் எழுந்தான்.

''நீ ஏதோ சொன்னே... அதை விளக்கமா கேக்கணும். புதுப் பையனைப் பாத்துட்டு நீ சொல்றதைக் கேக்கறேன். அதுவரைக்கும் நில்லு.''

நாகேந்திரன் அசடு வழிய நின்றான். மற்ற மாணவர்கள் முகத்தில் புன்னகை அரும்பியது.

ஆசிரியர், ''பரதா, கொஞ்சம் முன்னே வா'' என்றார்.

பரதன் பெஞ்சைக் கொஞ்சம் நகர்த்தி விட்டு வெளியே வந்தான். பிறகு ஆசிரியரை நோக்கி நடந்தான். அவன் நடந்து வருவதே கத்தரிக்காய்க்குக் கால் முளைத்து நடந்து வருவது போலத் தோன்றியது.

பெஞ்சின் உயரமே இருந்த பரதன், குண்டாகவும் இல்லை, நீளமாகச் சில கத்தரிக்காய்கள் இருக்குமே... அது போன்ற உருவம். மாநிறம். ஆனால்

பளிச்சென்று பிறர் கவனத்தைக் கவரும் ஒளிவீசும் கண்கள்.... பாரதியார், இவனைப் பார்த்துத்தான், 'ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா' என்று பாடினாரோ!

குப்புசாமி ஏதோ ஒரு சோகம் தன்னைச் சூழ்ந்து கொள்ளப் பரத னைப் பார்த்தார்.

''சார், நான் குள்ளன்தான் சார். ஒரு மாணவன் சொன்னது போல சித்திரக் குள்ளன்! விசித்திரக் குள்ளன்னு சொன் னாலும் தப்பில்லை. என் உருவம் குள்ளம்; ஆனால் என் உள்ளம் இமயம் சார்!''


பரதனின் தன்னம்பிக்கை குப்புசாமியை மகிழ்வித்தது.

''பரதா, உன் உருவத்தை இப்போ பாக்கறேன். உள்ளத்தைக் கூடிய விரை வில் பார்ப்பேன்னு நம்பறேன். நீ கடைசி பெஞ்சிலே இருந்தா கரும்பல கையைப் பார்க்கக் கஷ்டப்படுவே. அத னாலே முதல் பெஞ்சிலே வந்து உட்கார்.''

ஆசிரியர் சொன்னார்.

காலையில் பரதன் வகுப்புக்குள் நுழைந்ததும் முதல் பெஞ்சியில் உட் காரப் போனான். நாகேந்திரன்தான் அவனை விரட்டினான். அடுத்த பெஞ்சு களில் உட்கார முயன்ற போது, மாண வர்கள் அனுமதிக்கவில்லை. ''புதுப். பையன்தானே, போய்க் கடைசி பெஞ் சிலே உட்கார்'' என்று நாகேந்திரனே கட்டளையிட்டான். பரதன் மறுவார்த் தைப் பேசாமல் கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்தான். இப்போது ஆசிரியர் அவனை முதல் பெஞ்சில் உட்காரச் சொல்கிறார்.

''சார், கடைசி பெஞ்சில் உட்கார்ந் தால் கரும் பலகையைப் பார்க்கிறது கொஞ்சம் கஷ்டம்தான். ஆனாலும் நான் எழுந்து நின்னு பார்த்துப்பேன்



சார். நான் நின்னா யாருக்கும் மறைக் காது.''

பரதன் கூறியதைக் கேட்ட குப்பு சாமி வியப்படைந்தார். ''இந்தப் பையன் சாதாரண மாணவன் அல்ல... தனிச் சிறப்புப் பெற்றவன். உள்ளம் இமயம் என்றானே, அதன் உயரத்தை இப்போதே காட்டுகிறான்'' என்று நினைத்தார் குப்புசாமி.

''பரதா, நீ எழுந்து நின்னு, கஷ்டத் தைப் பொருட்படுத்தாம கரும்பலகை யைப் பார்பபே. ஆனால், உன்னைப் பார்க்க நினைக்கற ஒவ்வொரு முறை யும் என்னால் எழுந்து நின்று பார்க்க முடியாது. என் வசதிக்காக நீ முன் பெஞ்சில் வந்து உட்கார்.''

பரதன் ஆசிரியரை சில நொடிகள் உற்றுப் பார்த்தான். 'நான் குள்ளன் என் பதற்காக எந்தச் சலுகையை யார் கொடுத்தாலும் எனக்குப் பிடிக்காது என்பதை இவர் எப்படியோ தெரிந்து கொண்டார்' என்று நினைத்து, மனத் துக்குள்ளேயே அவருக்கு நன்றி சொன் னான். அதனால், அவனது முகத்தில் புன்னகை தோன்றியது. ஆசிரியர் முகத் தையும் அது தொத்திக் கொண்டது.

பரதன் தன் இடத்துக்குத் திரும்பிச் சென்றான். புத்தகப் பையை எடுத்துக்



★ கேட்கும் சக்தி குறைவானவர் களின் கவலையைக் காது கேட்கும் கருவி நிவர்த்தி செய்கிறது என்பதை யாவரும் அறிவோம். இந்தக் காது கேட்கும் கருவியை (Hearing Aid) அமெரிக்காவைச் சார்ந்த இருபத்தாறு வயதான இளைஞன் மில்லர் ரீஸ் ஹட்ச்சின்சன் (Miller Rease Hutchinson) என்பவரே வடிவமைத்தார். இது கண்டுபிடிக்கப்பட்டது, 1901-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் தேதி. •

- எஸ். ரவி, ஆற்காடு.

கொண்டு முன்னே வந்தான். அந்த வகுப்பறையில் இருபுறமும் பெஞ்சு கள் வரிசையாகப் போடப்பட்டிருந் தன. வலப்புறம் உள்ள முதல் பெஞ் சில் உட்காருவதா? இடப்புறம் உள்ள முதல் பெஞ்சில் உட்காருவதா?

வாயிலுக்கு அருகே இருப்பது வலப்புறம். அந்த பெஞ்சின் முதலிடம் நாகேந்திரனுடையது. இப்போது அவன் நின்று கொண்டிருந்தான். அவன் நின்றபடியே, ''குள்ளா, இங்கே வராதே'' என்று குரலை அடக்கிக் கிசுகிசுத்தான். என்றாலும் அது பரத னுக்கும் கேட்டது. ஆசிரியர்க்கும் கேட் டது.

குப்புசாமி நாகனைக் கண்டிக்க நினைத்தார். அதற்குள் இடப்புறம் முதல் பெஞ்சில் முதலிடத்தில் உட் கார்ந்திருந்த ஞானசம்பந்தன் என்னும் மாணவன் நகர்ந்து, ''பரதா, இங்கே உட்கார்'' என்றான். பரதன் ஞான சம்பந்தைப் பாசத்துடன் பார்த்து, ''தேங்க்ஸ் பிரண்ட்'' என்று கூறியபடி அவன் காட்டிய இடத்தில் உட்கார்ந் தான்.

''சார், உட்காரலாமா?''

நாகேந்திரன் கேட்டான்.

நாகேந்திரன் அந்தப் பள்ளிக் கூடத்துக்கு ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கில் நன்கொடை தரும் ஒரு மில் முதலாளியின் செல்லப் பிள்ளை. அதனால் ஆசிரியர்களில் பலர் அவ னுக்குச் சலுகை தர, அவன் வகுப்பிலே மோசமான மாணவனாக உருவாகி வந்தான். குப்புசாமி பணத்துக்குப் பயப்படாதவர். அதனால், அவரிடம் நாகனுக்குக் கொஞ்சம் பயம் உண்டு. என்றாலும் அவ்வப்போது வாலாட்டு வான். ஆசிரியர் அந்த வாலை அவ்வப் போது நறுக்கி விடுவார். என்றாலும் அது வளர்ந்து தொடர்ந்தது.

குப்புசாமி நாகனைப் பார்த்துப் பேசினார்.

''நாகா, உருவு கண்டு எள்ளாமை வேண்டும். ஏன் தெரியுமா? உருள் பெரும் தேர்க்கு அச்சாணி அன்னார்



உடைத்து என்கிறார் வள்ளுவர். அதனால் பரதனைக் குள்ளன் என்று கேலி செய்யாதே.''

ஆசிரியர் பேசிக் கொண்டிருக்கும் போதே நாகேந்திரன் குறுக்கிட்டான்.

''சார், வள்ளுவர் நல்லாவே சொல்லியிருக்கிறார் சார். குள்ள உருவம் படைத்தவன் அச்சாணி போல. தேர் உயரத்தைப் பார்த்தா அச்சாணி எப்படிச் சின்னதோ, அது போல ஆள் உயரத்தைப் பாத்தா பரதன் அச்சாணி உயரம்தான் சார். உருவமும் பருமனில்லே... அதே அச்சாணி மாதிரி சார்.''

''ஸ்டாப் இட்'' என்று கத்தினார் குப்புசாமி.

வகுப்பே அதைக் கேட்டுப் பயந்தது. நாகனும் நடுங்கி விட்டான்.

''திமிர்! பணத் திமிர்! பள்ளிக் கூடத்தையே விலைக்கு வாங்கிடலாம் என்கிற பணத் திமிர்!'' என்று நினைத்த குப்புசாமியின் கண்கள் சிவந்தன. அவர், ''நாகா, யாரையும் நான் கேலி செய்ய மாட்டேன். வகுப்பில் அனாவசியமாக வாயைத் திறக்க மாட்டேன்'' என்று நூறு முறை எழுதி நாளைக்குக் காட்ட வேண்டும். இனி வகுப்பில் பரதனைக் கிண்டல் செய்தால், உன்னை வெளியே விரட்டி விடுவேன். ஜாக்ரதை சிட் டவுன்.''

நாகன் உட்கார்ந்தான்.

குப்புசாமி கோபம் தணிந்து, பாடம் நடத்த ஐந்து நிமிடங்கள் பிடித்தன.

அன்று மாலை.

பள்ளிக்கூடத்தின் விளையாட்டுத் திடல். ஞானசம்பந்தனும், பரதனும் ஒருபுறம் நின்று கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அதை இன்னொரு புறம் நின்று நாகேந்திரனும், அந்தோணிசாமியும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தோணி சாமி, வகுப்பில் நாகனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவன். நாகனுக்குப் பணபலம் என்றால், அந்தோணிக்கு உடல்பலம். நன்றாகக் கொழுத்து ஒரு குட்டி பீமன் போல வளர்ந்திருந்தான். அந்தோணிசாமி நாகனுக்கு நெருங்கிய நண்பன். எப்போதும் இருவரும் ஒன்றாகத்தான் இருப்பார்கள். அப்போதும் ஒன்றாக நின்று கொண்டிருந்தார்கள்.

''அந்தோணி, அதோ பாரு, அந்தச் சித்திரக் குள்ளன் நிக்கறான். முதல் நாளே அவன் ஹீரோவாயிட்டதா நினைக்கறான். அவனை விடக்கூடாது. போய் அவனை வம்புக்கிழுத்து, நாலு அறை கொடுத்துட்டு வா'' என்றான் நாகன்.

அந்தோணி சாமி நாகனின் உத்தரவை நிறைவேற்றப் புறப்பட்டான். வேகமாக நடந்து சென்று, பரதன் மீது மோதி, அவனை உருட்டித் தள்ளினான்.

பரதன் உருண்டு புரண்டு எழுந்து நின்றான்.

''டேய் குள்ளா, என் வழியிலே நின்று என் மேலே மோதிட்டையா? உன்னை என்ன செய்யறேன் பார்'' என்று முழங்கியபடி நாகன், குட்டி யானை போல அவனை நோக்கி முன்னேறினான். பரதனோ, பூனை போலப் பின்வாங்கினான்.

''ஐயோ, இந்தத் தடியன் பரதனை சட்னி ஆக்கிடுவானே'' என்று ஞானசம்பந்தம் பயந்தான்.

நாகன், ''உம்.... காட்டு உன் கை வரிசையை'' என்று ஜாடை செய்ய, அந்தோணி சாமி பரதன் மீது பாய அவனை நோக்கி வேகமாக நகர்ந்தான்.

(தொடரும்)



★ இராமகிருஷ்ண பரமஹம்சர் தன் சீடன் விவேகானந்தரை நோக்கி, ''நீ ஓர் ஈ உருவம் பெற்றதாக வைத்துக் கொள்வோம். அப்போது, உன் எதிரே அமிர்தம் நிறைந்து ததும்பும் கோப்பையைக் கண்டால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

''கவனமாக அக் கோப்பை விளிம்பில் அமர்ந்து அந்த அமிர்தத்தைச் சுவைப்பேன். உள்ளே இறங்கி மூழ்கிச் சாக மாட்டேன்'' என்றார் விவேகானந்தர். ''அது சரியல்ல. அமிர்தம்தான் அமரத்துவம் அளிப்பதாயிற்றே? அதில் நீ மூழ்கினாலும் சாவு உனக்கு ஏது?'' என்றார் பரமஹம்ஸர்.

- இராம. சிவகுமார், நல்லாலம்.



விநாயகர் அகவல் - உரையாசிரியர் புலவர். வே. பிரபாகரன் - பக். 64, ரூ. 3/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, சென்னை - 17.

விநாயகர் அகவல் அறியாத தமிழ்க் குழந்தைகள் உண்டா? ஆனால் எத்தனை பேருக்கு அதன் பொருள் தெரியும்? இக் குறையை இந்த நூல் போக்கி வைக்கிறது. விநுவின் அட்டைப் படம் கைகூப்பிக் கும்பிட வைக்கிறது. குழந்தைகளிடம் அவசியம் இருக்க வேண்டிய கையடக்க நூல்.

இரத்தினக் குவியல் - மாணிக்கப் பாண்டியன், பக். 108 - ரூ. 12/- வானதி பதிப்பகம், தீனதயாளன் தெரு, சென்னை - 600 017.

மாணவர்களின் ஒவ்வொரு தவறான செயலுக்கும், அவர்களைக் கண்டிக்காது, தவறுகள் மனதில் பதியும் வண்ணம் ஆசிரியர் ஒவ்வொரு கதை கூறுகிறார். கதையில் அறிவியலும் கலந்து வருகிறது. பதினோரு கதைகளுக்கும் அழகான படங்கள் வேறு! சிறப்பக்கு வேறு என்ன வேண்டும்?

முட்டாள் கதைகள் IV, பேராசிரியர் ஜோதி, பக். 80 - ரூ. 10/- நன்மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச்சேரி - 605 001.

முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளும் எந்த ஒரு குழந்தையையாவது சிரிக்க வைக்க வேண்டுமா? பேராசிரியர் ஜோதியின் புத்தகத்தை வாங்கிக் கொடுக்கலாம்! கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான ஆசிரியரின் தரமான படைப்பு. குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துச் சிரித்து மகிழலாம்!

கண்மணி பூங்கா, எல். திருமலை, பக். 112, ரூ 12/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, சென்னை - 600 017.

கோகுலம் வாசகர்களுக்கு அறிமுகமான ஆசிரியரின் பதினைந்து மணியான சிறுகதைகள், அருமையான படங்களுடன் இதில் வெளியாகியுள்ளன. கல்வியறிவு இயக்கத்திற்குப் புதிய கதவுகளைத் திறந்து விடும் 'நீயே போதும்' கோகுலத்தில் வெளியாகிப் பலரது பாராட்டையும் பெற்றது. குழந்தைகளுக்கு ஆக்கபூர்வமாகப் புதிய சிந்தனைகளுக்கு வழிவகுத்துத் தரும் கதைகள்!

பாபுஜியின் பாபு, பூவை. எஸ். ஆறுமுகம், பக். 58 - ரூ. 9.90, பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.

காந்திநெறிகளில் பற்றுக் கொண்டு, பல சோதனைகளைக் கடக்கும் சிறுவன் பாபு தனக்கு அடைக்கலம் அளிக்கும் அனாதை இல்லத்திற்கு, தனக்குப் பரிசாகக் கிடைக்கும் இலட்சம் ரூபாயையும் நன்கொடை தந்து விட்டுப் பிரிகிறான். இது தான் கதைச் சுருக்கம். படிக்கச் சுவை குன்றாது நாவல் எழுதப்பட்டுள்ளது. ஏற்கெனவே இது 'உமா' பத்திரிகையின் சிறுவர் பகுதியில் தொடராக வந்து இளம் வாசகர்களின் பாராட்டைப் பெற்றது. இப்பொழுது நூல் வடிவில் வெளிவந்திருக்கிறது. பரிசளிக்க ஏற்ற தரமான படைப்பு.

சிறுவர் நூல்கள் பொது நூல்கள் மட்டுமே இப் பகுதியில் இடம்பெறும். இரண்டு பிரதிகளை அனுப்பி வைத்தால் போதுமானது கட்டணம் இல்லை. அனுப்ப வேண்டிய முகவரி ஆசிரியர், கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32.

1 2 3

4

சின்னங்கள் சொல்வது என்ன? - போட்டி

அன்றாடம் உங்கள் கண்களில் படுகின்ற பத்து சின்னங்கள் இங்கே உள்ளன. சில தமிழ் நாட்டுடன் மட்டும் தொடர்புடையவை. சில இந்திய அளவில். சில உலக அளவில். இவை என்ன என்பதை எண்களுக்கு நேரே எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு.

5

6

7

8

சின்னங்கள் சொல்வது என்ன? - போட்டி

பெயர்...

வயது...

முகவரி...

....

....

பின்கோடு :...

முடிவு தேதி : 15.6.92

9 10



பிருந்தாவனக் கதையரங்கம்

விடச் செய்த விருந்து!

முருகானந்தத்திற்கு ஒரு பழக்கம். சாப்பிடும் போது யாருடனும் பேச மாட்டார். இலையில் எதையும் மிச்சம் மீதி வைக்கமாட்டார். அதற்காக அவரது மனைவி, முருங்கைக்காய் சமைத்திருந்தால், அதன் வெந்து கனிந்த பாகத்தை மட்டும் எடுத்துப் போடுவாள். அதே போல் மாம்பழமோ, மலைப்பழமோ போடுவதென்றால் தோலை உரித்து விட்டுப் போடுவாள்.

ஒருமுறை முருகானந்தம் வெளியூர் போனார். திரும்பி வரும்போது நேரமாகிவிட்டது. பஸ் வேறு பிரேக் டௌன். அவருடன் பஸ்ஸில் பேசிக்கொண்டு வந்த பயணி ஒருவர், 'இங்கே அருகே குருவிப்பட்டி கிராமத்தில் என் நண்பர் இருக்கிறார். அங்கே போய் இரவு தங்கிவிட்டுக் காலையில் ஊர் போகலாம்' என்று அழைத்தார். வேறு வழியில்லாததால் முருகானந்தம் இணங்கினார்.

நல்ல வரவேற்பு. இருவரும் சாப்பிடவில்லை என்பதை அறிந்ததும், அந்த வீட்டுப் பெண்மணி புதிதாகச் சமைத்துச் சாப்பிட அழைத்தாள். பஸ் நண்பரும் முருகானந்தமும் சாப்பிட அமர்ந்தனர். பறிமாறினார்கள்.

முருங்கக்காய் குழம்பு. பேச்சு மும்முரத்தில் தன்னுடைய மௌன விரதத்தைப் பற்றி முருகானந்தம் கூறினாரே தவிர, இலையைக் காலி செய்வதைக் கூறவில்லை! அவர் முருங்கக்காய் தானை தோலுடன் சாப்பிட்டதைக் கவனித்ததும், அவருக்கு முருங்கைக்காய் என்றால் ரொம்பப் பிடிக்கும் போல் இருக்கிறது என்று எண்ணிய வீட்டுக்காரப் பெண்மணி, அவர் எத்தனை மறுத்தும் கேளாது இலை நிறைய முருங்கைக்காய்த் தானைக்



கொண்டு வந்து போட்டான்!

விரதத்தை விட்டுவிட முடியாமல் முருகானந்தம் படாதபாடு பட்டு அத்தனை முருங்கைக்காய்த் தானையும் தோலுடன் கஷ்டப்பட்டு முழுங்கினார்.

''முருங்கைக்காயை விரும்பிச் சாப்பிடும் எத்தனையோ பேரை நான் பார்த்திருக்கேன். ஆனால், தோலையும் கூட விடாது விழுங்கும் உங்களைப் போன்ற ஒருவரை நான் இதுவரை பார்த்ததே கிடையாது. நம்ம வீட்டுல ஏழு மரம் இருக்கு. வேண்டியதைச் சாப்பிடுங்க'' என்று பரிவுடன் உபசாரம் செய்த வீட்டுக்காரர், உள்ளே திரும்பி, ''ஐயாவுக்கு இன்னும் கொஞ்சம் முருங்கைக்காய் கொண்டா'' என்றார்.

இலையைச் சுருட்டிக் கொண்டு எழுந்த முருகானந்தம், ''சாப்பிடும் போது மௌன விரதத்தையும், இலையைக் காலி செய்யும் விரதத்தையும் இன்றோடு விட்டேன்!'' என்று எழுந்து ஓடினார். மூவரும் எதுவும் புரியாது திகைத்தனர்!

– என். சுந்தரராஜன், பரவை.

எதிர்பார்ப்பு!

ராமுவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் அப்பா. ''இப்படி பெயிலாகியிருக்கியேடா! எந்த முகத்தை வைச்சுக்கிட்டு நான் எல்லோரையும் பார்ப்பேன்?'' என்று இரைந்தார் கோபத்துடன்.

ரோஷம் பொத்துக் கொள்ள ராமு வீட்டை விட்டு வெளியேறி விட்டான். 'இனி வீட்டுக்குத் திரும்பக்கூடாது' என்ற வைராக்கியத்துடன் டிக்கெட் எடுக்காது ரயிலேறினான்.

அது பாசஞ்சர் ரயில் வண்டி. அதிகக் கூட்டம் இல்லை. அவன் இருந்த பெட்டியில் இரண்டு சிறுவர், அம்மா, அப்பா அடங்கிய கிராமத்துக் குடும்பம். சிறுவர்களுக்கு பாலுவின்



வயதுதான் இருவரும். நட்புறவோடு பழகினர். திருத்தணிக்குப் பிரார்த்தனை போகிறார்களாம். அவர்கள் தாங்கள் சாப்பிடும்போது கொடுத்ததை மறுக்காது வாங்கி உண்டான் ராமு. மகிழ்ச்சியாக இருந்தது. எல்லாம் டிக்கெட் பரிசோதகர் வரும் வரை. அவர் வந்ததும் பாலு விழித்தான்.

''பார்த்தா பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன் மாதிரி டிரஸ்! படிச்ச தோற்றம்! செய்யறது சட்ட விரோதமான காரியம்! இறங்குடா!'' என்று அவன் கன்னத்தில் அறைந்து சட்டைக் காலரை இழுத்தார் பரிசோதகர்.

பாலுவுக்கு அழுகை வந்து விட்டது. இடுக்கிட்டவர் அந்தக் குடும்பத்துத் தலைவர்தான். டிக்கெட் பணம், அபராதத் தொகையைக் கட்டி பாலுவை மீட்டார் அவர். பாலு எல்லாவற்றையும் கூறினான்.

''உனக்குத் துணி மணி வாங்கிக் கொடுத்து, சுவையான சாப்பாடு போட்டு, உடம்புக்கு வந்தால் கவனித்துக் கண்ணைப் போலப் போற்றும் பெற்றோர், நீ படிப்பில் அக்கறை கொள்ளவில்லை என்பதற்காக உன்னைக் கடிந்தால் அதைத் தாங்கிக் கொண்டு உன் தவறைத் திருத்திக்

கொள்ள நீ தயாராக இல்லை! ஆனால், ரயிலில் டிக்கெட் இல்லாது வந்து, யார் யாரிடமோ, அடிபட்டு திட்டுக் கேட்கத் தயார். அப்படித்தானே? '' என்று கேட்டார் அந்தக் குடும்பத் தலைவர்.

பாலு தலையைக் குனிந்து கொண்டான். ''எதுவானாலும் சரி, அப்பா என்னை அப்படி அடித்திருக்கக் கூடாது. அப்படி அடிப்பார் என்பதை நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றான் அந்த நிலையிலும் வீம்புடன்.

''நீ எதிர்பார்த்தபடி இல்லாது அவர் உன்னை அடித்தார் என்றதும் ரோஷத்துடன் கிளம்பி விட்டாயே... நீ அவர் எதிர்பார்த்தபடிதான் இருந்திருக்கிறாயா? அவருக்கு எத்தனை ஏமாற்றமாக இருந்திருக்க வேண்டும்?''

திருத்தணி முருகனைத் தரிசித்து விட்டு வீடு திரும்பிய பாலு முற்றிலும் புதிய பாலுவாக இருந்தான்!

- எம். செந்தில் குமார்,
கல்பாக்கம்.

எத்தன்

பாலனிடம் ஒரு கிழிந்த ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது. ஒரு ரூபாய் கமிஷன் தந்தால் மாற்றித் தருவதாகப் பலர் கூறினர். ஆனால் ஒரு ரூபாயை இழக்க பாலு தயாராக இல்லை. அதை யாரிடமாவது அப்படியே ஏமாற்றித் தள்ளிவிட சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இரவு ஊர் முழுக்க மின்சாரத்தடை. ஊரே இருண்டு கிடந்தது. இதுவே மாற்ற ஏல்ல சமயம் என்று கிளம்பினான் பாலு.

ஸ்டேஷனுக்கு அருகே கடை வீதியில் காடா விளக்கை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஒரு ஆப்பிள் பழக்கடையில் நல்ல கூட்டம். விளக்கும் கூட அழுது வடிந்து கொண்டிருந்தது.

''ஆப்பிள் என்ன விலை?'' என்று கேட்டான் பாலு.

''ஒரு ரூபாய். ஆறு எடுத்தால் ஐந்து ரூபாய்'' என்றார் கடைக்காரர். பாலு ''ஆறு கொடுங்க'' என்றான். கடைக்காரர் கட்டிக் கொடுத்த பொட்டலத்தை வாங்கிக் கொண்டு கிழிந்த ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு விரைந்தான்.

வீட்டுக்கு வந்ததும் தனது திறமையைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டு, அம்மாவிடம் பொட்டலத்தைத் தந்தான். அம்மா பிரித்துப் பார்த்தாள். அதில் இருந்த ஆறு ஆப்பிள்களும் அழுகல்!

எத்தன் பாலுவை மிஞ்சிவிட்டான் பழ எத்தன்!

- என் மகேசுவரி, மன்னார்குடி.



யார் பகைவன்!

குண்டா முண்டா சாமான்கள் இருந்த அறை ஒன்றில் ஏராளமான எலிகள் வசித்து வந்தன. எங்கிருந்தோ வந்த பூனை ஒன்று அங்கே எலிகள் நிறைய இருப்பதைப் பார்த்து, தினமும் வந்து, எலி பிடித்துத் தின்று கொழுத்தது. எலிகளின் நடமாட்டமும் குறைந்தது.

அந்த அறையில் இருந்த எறும்புக் கூட்டம், எத்தனையோ ஆண்டுகளாக



வசித்து வரும் எலிகளை இந்தப் பூனை அழிக்கிறதே என்று பூனையைப் பார்த்துப் பொறாமைப்பட்டது. எல்லாம் ஒன்று கூடி அந்தப் பூனையை மொய்த்துக் கொண்டு கடித்தன! பூனை அரண்டு விட்டது. ''இனி இங்கே வரவில்லை. என்னை விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சி விடுதலை பெற்று ஓடி விட்டது.

பூனை பயம் ஒழிந்ததும் எலிகள் பெருகின. எறும்புகள் மழைக் காலத்திற்காக அரும்பாடு பட்டு சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களையெல்லாம் அவை தின்று தீர்த்தன. அதோடு எறும்பின் புற்றுகளையெல்லாம் கலைத்து, சிதைத்து ஓடியாடின. எறும்புகளால் எதுவுமே செய்ய முடியவில்லை.

''அனாவசியமாகப் பூனை மீது பொறாமைப் பட்டு அதை விரட்டினோமே அதுவல்லவோ நமது நண்பன்'' என்று வருந்தின எறும்புகள்!

- ஆர்.எஸ். மாதவன், மன்னார்குடி.

பலே திருடர்கள்!

பலே திருடன் பாபு, படே திருடன் கோபுவின் வீட்டுக்கு ஒரு நாள் இரவு வந்து தங்கினான். கோபுவின் வீட்டில் ஒரு தங்க வட்டில் இருந்தது. அதைத் திருடி கொண்டு போவதே பாபுவின் நோக்கம். இது கோபுவுக்கும் தெரியும்.

கணவன் கூறியபடியே சமைத்து சாதம் போட்டாள் கோபுவின் மனைவி கோமதி. பித்தளை வட்டிலைக் கணவனுக்கு வைத்தாள். தங்க வட்டிலை பாபுவுக்கு வைத்தாள். சாப்பிட்டு விட்டு இருவரும் படுத்துக் கொண்டனர். இருவர் கட்டிலுக்கும் மேல் உறிகள் இருந்தன. கணவனின் ஏற்பாட்டின் படி, பொன் வட்டில் நிறைய நீரைவிட்டு, கோபுவின் தலைக்கு மேல் உள்ள உறியில் வைத்தாள் கோமதி. வட்டிலைக் கொஞ்சம் அசைத்தாலும் போதும், நீர் சிந்தி கீழே உறங்கும்



கோபுவை எழுப்பிவிடும்! எப்படிப் பட்ட பாதுகாப்பு!

கோபுவின் தந்திரத்தை மனதிற்குள் புகழ்ந்து கொண்ட பாபு, நடு இரவில் எழுந்தான். வெளியே வந்து அருகில் இருந்த பாப்பாளி மரத்தின் செடித் தண்டை உடைத்து, அந்தக் குழலைக் கொண்டு, பொன் வட்டிலில் இருந்த அத்தனை நீரையும் குடித்தான். பிறகு வட்டிலை எடுத்துக் கொண்டு எதிரே

இருந்த குட்டையில் புதைத்து வைத்து, அதற்கு அடையாளமாக அந்தப் பப்பாளித் தண்டையே நட்டு வைத்தான்.

இரவில் எழுந்த கோபு, உறியில் வட்டில் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டான். பாபுவின் கால்களில் இருந்த ஈர சேற்றின் அடையாளத்தையும், பப்பாளி இலைகள் சிதறிக் கிடந்ததையும் பார்த்து என்ன நடந்திருக்கும் என்பதை அறிந்து கொண்டான். குட்டைக்குச் சென்று வட்டிலை எடுத்து வந்து விட்டான்!

பொழுது விடிந்தது.

''வட்டில் நீரைக் காலி செய்ய, பப்பாளித் தண்டை உபயோகித்த தந்திரம் பிரமாதம் பாபு!'' என்றான் கோபு.

''காலில் ஒட்டியிருந்த சேற்றையும் சிதறியிருந்த பப்பாளிச் செடியின் இலைகளையும், வைத்தே அதை எடுத்து வந்தாயே.... அதற்கு முன்னால் இது எம்மாத்திரம்!'' என்றான் பாபு.

- சி. அன்பரசு, செம்மனூர்.

விபரீத ஆசை



ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அதை வாசலிலேயே கட்டிப் போட்டு விடுவான். தன் வீட்டின் பாதுகாப்புக்கென ஒரு நாயை வளர்த்து வந்தான். ஆனால் நாயோ வீட்டுக்குள்ளெல்லாம் தாராளமாக நடமாடும். குழந்தைகளிடமும் சலவைத் தொழிலாளியிடமும் நாய் விழுந்து புரண்டு விளையாடும். சில சமயம் நாய் சலவைத் தொழிலாளியின் மடியிலேயே உட்கார்ந்து கொள்ளும். அவனும் அதனுடன் கொஞ்சி விளையாடுவான். நாய்க்கு அந்த வீட்டில் இருக்கும் மதிப்பைக் கண்டு கழுதை பொறாமைப்பட்டது. தான் அடக்கமாக தெருவே கதி எனக் கிடப்பதால் தான் தன்னை யாரும் கண்டு கொள்ளவில்லை என்று கழுதை எண்ணியது. நாயைப் போலவே தானும் குழந்தைகளுடன் விளையாடி சலவைத் தொழிலாளியின் மடியில் படுத்துப் புரண்டு விளையாடினால் அவர்கள் தன்னையும் கொஞ்சி மகிழ்வார்கள் என அது எண்ணியது.

ஒரு நாள் கழுதை வீட்டிற்குள் திடீரெனப் புகுந்து குழந்தைகளிடம் துள்ளிக் குதித்து விளையாடத் தொடங்கியது. அதைக் கண்டு குழந்தைகள் பயந்து அலறியடித்துக் கொண்டு ஓடினர்! வழியில் ஓரிடத்தில் சலவைத் தொழிலாளி உட்கார்ந்திருந்தார். கழுதை அவர் மடியில் ஏறி உட்கார முயற்சி செய்தது. கழுதையின் வினோதமான நடவடிக்கைகளைக் கண்டு சலவைத் தொழிலாளி திகைத்தான்! அதற்குத் திடீரென பைத்தியம் பிடித்து விட்டது என்று தீர்மானத்துக்கு அவன் வந்தான். கழுதையை இழுத்துச் சென்று ஒரு மரத்தில் கட்டிப் போட்டு குண்டாந்தடியால் அடித்து விளாசினான். கழுதை மயக்கம் போட்டு விழுந்து விட்டது. இதையெல்லாம் நாய் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது. கழுதைக்குத் திடீரென என்ன வந்து விட்டது என்று அதற்கு புரியவே இல்லை.

- இந்திரா கோபாலன், திருச்சி.

சரியான தீர்ப்பு



வருடா வருடம் நடக்கும் மாறு வேடப் போட்டி அது. சிறுவர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடைய அறிவுத் திறனை மேம்படுத்தவும் விளையாட்டுப் போட்டிகள், கலை, இலக்கியப் போட்டிகளை நடத்துவது பொன்னகர கிராம வழக்கம். அப்போட்டிகளில் மிக முக்கியமானது மாறு வேடப் போட்டி. கிராமத்து மக்கள் எல்லாம் பெரிதும் ரசித்துப் பாராட்டி மகிழும் போட்டி அது.

பார்த்திபனும் விக்கரமனும் அந்த மாறுவேடப் போட்டியில் தவறாமல் கலந்து கொள்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் குரல் மாற்றிப் பேசும் திறனையும், அவர்களுடைய மாறு வேடத்தையும் பார்க்கும் போது யாருக்கு முதல் பரிசு கொடுப்பது, யாருக்கு இரண்டாவது பரிசு கொடுப்பது என்று தீர்மானிக்க முடியாமல் நடுவர்கள் திகைத்துப் போவார்கள்.

முடிவு செய்ய இயலாது ஒவ்வொரு வருடமும் இருவருக்குமே தனித்தனியாக முதல் பரிசு கொடுத்து விடுவார்கள்.

இந்தக் குழப்பத்துக்கு முக்கியமான காரணம் பார்த்திபன், விக்கிரமன் இருவருடைய போட்டி முறைதான். இருவருமே ஒரே மாதிரியான வேடத்தைப் புனைந்து கொண்டு தத்தமது திறமையை நிரூபிக்க முயல்வார்கள்.

இந்த வருடமும் அதே பிரச்னை தலைதூக்கியது. நடுவர், இந்த வருடமாவது இருவரில் ஒருவரை மட்டுமே சிறந்தவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். பார்த்திபன், விக்கிரமன் இருவருமே மாடு வேடம் போட்டுக் கொள்ளப் போவதாகத் தெரிவித்திருந்தார்கள்!

''இருவரும் மனித வேடம் போட்டாலே முடிவு செய்வது கடினம். மாடு வேடம் போட்டால் எப்படி முடிவு செய்வது?'' என்று யோசித்தவாறு தனது வயல் வரப்பில் நடந்து கொண்டிருந்தார் தலைமை நடுவர்!

அறுவடையான பக்கத்து வயல் வெளியில் சில மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. தங்கள் மீது அமர்ந்த ஈக்களையும், வண்டுகளையும் வாலாலும், உடல் சிலிர்ப்பாலும் விரட்டியபடி அவை மேய்ந்து கொண்டிருந்தன. வரப்பைக் கடந்து வந்த மாடு மேய்க்கும் சிறுவன், ''என்ன ஐயா, வாட்டமா இருக்கீங்க?'' என்று கேட்டான் நடுவரை.

சிறுவன்தானே என்று அலட்சியமாக ஒதுக்காமல், மாறுவேடப் போட்டியில் முடிவு செய்வதில் தனக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை அவனிடம் விளக்கிச் சொன்னார் அவர்.

''இதென்ன பிரமாதம். நான் ஒரு யோசனை சொல்றேன். அதைப் பண்ணிப்பாருங்க'' என்று காதைக் கடித்தான் சிறுவன்.

போட்டி நாள். மக்கள் திரளாகக் கூடிவிட்டனர். அழகிய சிறு மேடை. அதன் ஓரத்தில் நடுவர்கள் அமர்ந்திருந்தார்கள். மாறுவேடப் போட்டி ஆரம்பமாகியது. ஒவ்வொருவராகத் தம் திறமையைக் காட்ட முயன்று தோற்றுப் போனார்கள்.

இறுதிக் கட்டத்தில், பரபரப்பு சூழ, பார்த்திபன் மேடை ஏறினான். அசல் மாடு கெட்டது! அத்தனை அழ

சுப ஜோலா

காகத் துள்ளி, தலையை ஆட்டி, முட்டுவது போலப் பாய்ந்து, 'ம்ம்..... மா' என்று குரல் கொடுத்து அற்புதமாக நடித்துக் காட்டினான். கூட்டத்தினர் கை தட்டியபோது, அதனால் மிரள்வது போலப் பாசாங்கு வேறு செய்தான்!

அடுத்து வந்த விக்கிரமன், பார்த்திபனைப் போலவே எல்லாப் பாவங்களையும் அழகாகச் செய்து காட்டினான். ஓடிவந்து சரேலென்று கால்களைத் தரையில் தேய்த்தபடி நடுவர்கள் முன்னே நின்றான்!

இருவரில் யார் சிறப்பானவர்? முதல் பரிசு பெறும் தகுதி யாருக்கு உண்டு?

அனைவரும் திகைத்தனர். நடுவர்கள் வழக்கப்படி குழம்பினர். தலைமை நடுவர் எழுந்தார். ''நம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய பார்த்திபன், விக்கிரமன் இருவரில் யார் முதல் பரிசு பெறத் தகுதியுள்ளவர் என்பதில் வருடா வருடம் நமக்குக் குழப்பம் இருந்து கொண்டுதான் வருகிறது. ஆனால், இந்த முறை அந்தக் குழப்பம் இல்லை. ஆமாம்; இருவரில் சிறந்தவன் விக்கிரமன்தான்!'' என்றார்.

''எப்படி, எப்படி, எப்படி?''

''இருவரும் நமக்குத் தம் திறமைகளைக் காட்டிக் கொண்டிருந்த போது, நான் ஓர் ஏற்பாடு செய்தேன். முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு சிறுவனை, இருவர்மீதும் தனித்தனியாக, மிகச் சிறு கற்களை வீசச் சொன்னேன். அப்போது மாட்டின் இயல்புப்படி கல்பட்ட உடற்பகுதியை மட்டும் சிலிர்த்துக் கொண்டவன் விக்கிரமன் மட்டும்தான். பார்த்திபனோ எந்தவித இயக்கமும் காட்டாமல் இருந்தான். ஆகவே, விக்கிரமன்தான் மாறுவேடப் போட்டியில் முதல் பரிசுக்கு உரியவன்'' என்றார் நடுவர்.

''சரியான தீர்ப்பு!'' என்று பார்த்திபன் உட்பட அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

'இதன் பெருமை உண்மையில் இந்த யோசனையைக் கூறிய மாடு மேய்க்கும் ரங்கனுக்கே உரியது'' என்று ரங்கனை அழைத்துப் பாராட்டினார் தலைமை நடுவர்.



முதல் மாணவி

கே.ஜெயலக்ஷ்மி

பள்ளியிலிருந்து வந்ததும் சீருடையைக் களைந்து விட்டு மாற்றுடை அணிந்து கொண்டு டிபன் சாப்பிட சமையலறைக்கு வந்தாள் ரம்யா.

''உட்காரு... ரம்யா... உனக்கு ரொம்பப் பிடித்தமான சேமியா உப்புமா'' என்றாள் அம்மா.

அம்மா கொடுத்த டிபனை வாங்கிக் கொண்டு ரம்யா ஆசையாகச் சாப்பிடத் தொடங்கினாள்.

''ரம்யா! நாளைக்கு சுந்தாவுக்குப் பிறந்த நாளாம்'', என்றாள் அம்மா.

''தெரியுமே....''

''நாளைக்குச் சாயங்காலம் ஐந்து மணிக்கு உன்னை வரச் சொல்லி அழைத்து விட்டுப் போனாள் சுந்தா. ஒரு சின்ன விருந்தாம்.''

''நான் போகப் போவதில்லை.'' எரிச்சலாகச் சொன்னாள் ரம்யா.

''ஏன்! வருடா வருடம் நீ அவள் வீட்டுக்குப் போவது வழக்கம்தானே? அவளும் உன் பிறந்த நாளுக்கு நம் வீட்டுக்கு வருவாளே....!'' வியப்பாய் பேசினாள் அம்மா.

''அதெல்லாம் பழைய கதை. இனி மேல் நான் சுந்தாவின் வீட்டுக்குப் போகவே மாட்டேன்.'' அழுத்தமாகச் சொன்னாள் ரம்யா. அவள் குரலில் வெறுப்பும் எரிச்சலும் பொறாமையும் மண்டிக் கிடந்தது.

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்.....''

''சொல்ல மாட்டேன்!''

''சொல்லித்தான் ஆகவேண்டும். சுந்தா ரொம்ப நல்ல பெண். அவளுடைய நட்பை நீ விட்டு விடக்கூடாது ரம்யா.'' —அம்மா விடாப்பிடியாகச் சொன்னாள்.

''எனக்கு இஷ்டமில்லை என்றால் விட்டுவிட வேண்டியதுதானே? ஏம்மா என்னைக் கட்டாயப்படுத்துகிறாய்...?'' ரம்யாவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

''ஏன் இஷ்டமில்லை என்று எனக்குத் தெரிஞ்சே ஆகணும்.''

நீர் நிரம்பிய விழிகளால் அம்மாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் ரம்யா.

''சொல்லு ரம்யா!''

''எல்.கே.ஜி.லேயிருந்து நானும் சுந்தாவும் ஒரே ஸ்கூலில் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டு வருகிறோம். எல்.கே.ஜி.யிலிருந்து 9 -ம் வகுப்பு வரையில், வகுப்பில் நான் தான் முதல் ராங்க் வாங்குவேன்.''

''எனக்குத் தெரியாதா என்ன? நீயும் சுந்தாவும் போட்டி போட்டுக் கொண்டு படிப்பீர்களே....''

''மெட்ரிக்கில் மட்டும் மாநிலத்திலேயே சுந்தா முதல் மாணவி. எங்க ஸ்கூலில் கூட நான் இரண்டாவது மாணவிதான். எனக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்! நீயே சொல்லம்மா....?''

''ப்பூ... இதுக்குத்தானா இத்தனை ஆர்ப்பாட்டம்....? என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன்....''

''உனக்கு ஒன்னுமே தெரியாதும்மா!''- புலம்பினாள் ரம்யா.

''எனக்கு எல்லாம் புரிகிறது ரம்யா. போட்டியும் பொறாமையும் படிப்பில் இருப்பது நல்லதுதான். ஆனால் முடிவுக்குப் பின் அவள் மீது கோபம் கொள்வதோ, விரோதம் பாராட்டுவதோ ரொம்பத் தப்பும்மா. ஒவ்வொரு பள்ளித் தேர்வின் போதும், இரண்டொரு மார்க்குகளில் நீயே முதல் ராங்க் வாங்கிக் கொண்டே, வந்தாயே - அப்போதெல்லாம் அவளுக்கு எப்படியிருந்திருக்கும்....? அதற்காக அவள் எப்போதாவது உன் மீது பொறாமைப் பட்டிருக்கிறாளா? விரோதமாக நடந்து கொண்டிருக்கிறாளா?''

''அதற்காக நான் என்ன செய்ய முடியுமாம்? டீச்சர் தானே மார்ச் போடறாங்க.....?''

''அதையே இப்போது நானும் கேட்கிறேன். மெட்ரிக் தேர்வில் ஒவ்வொரு பேப்பரை-ஒவ்வொரு டீச்சர்கள் திருத்தியிருப்பார்கள். அவள் உன்னைவிட ரொம்ப நன்றாகப் படித்திருக்கலாம். நிறைய மார்க்குகள் பெற்றிருக்கலாம். அவள் போய் எந்த டீச்சரிடமாவது 'எனக்கு ரம்யாவைவிட நிறைய மார்க்குகள் போடுங்கள்' என்று கேட்டிருக்க முடியுமா? உன்னைப் போலத்தானே அவளும் பரீட்சை எழுதினாள். அவளுக்கு உன்னைவிடக் கையெழுத்து நன்றாக இருக்கும்... அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எப்படிப் பார்த்தாலும் அவள் மீது எந்தத் தப்பும் இடையாது.''

''சரி, சரி! நான் போய்த் தொலைகிறேன்....''

''இப்படி வேண்டா வெறுப்பாக நீ போய் வருவதைவிடப் போகாமலேயே இருந்துவிடலாம்.''- கோபமாகச் சொல்லி விட்டு வேலைகளைக் கவனிக்க உள்ளே போய்விட்டாள் அம்மா.

ஏதோ தானோ என்று உடையணிந்து கொண்டு புறப்பட்டாள் ரம்யா. பொறாமையால் அவளுள்ளம் வெந்து கொண்டிருந்தது.





★ பறவைகள் முழு நெல்லை அப்படியே விழுங்குகின்றன. அந்த நெல் வயிற்றுக்குள் எப்படிச் செரிமானம் ஆகிறது தெரியுமா? தங்கள் உணவுடன் சில கற்களையும் சேர்த்து விழுங்குகின்றன; கற்கள் தான் வயிற்றில் பற்களைப் போலப் பயன்பட்டு உணவை மாவாக அரைக்கும்!

- ஆர். சிவகுமார், நல்லாலம்.

''வா, ரம்யா! வா, வா!'' என்று ஆசையாக ஓடி வந்து ரம்யாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள் சுநீதா.

வந்திருந்த மற்ற தோழிகளும் ரம்யாவைச் சூழ்ந்து கொண்டார்கள். உள்ளேயிருந்து சுநீதாவின் அம்மா கைகளில் பலகாரத் தட்டுகளுடன் வந்தாள். அவளும் பரிவோடு ரம்யாவைப் பார்த்து ''வாம்மா ரம்யா! வா! எல்லோரும் வந்து உட்காருங்க...'' என்று கூறினாள்.

எல்லோரும் அந்த வட்டமேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

அவர்களுக்குப் பலகாரம் எடுத்து வைத்துக் கொண்டே சுநீதாவின் அம்மா சொன்னாள். ''இந்த வருடம் சுநீதாவுக்கு 'பர்த்டே' கொண்டாடவே விருப்பமில்லை. வேண்டாம்னு தான் சொன்னாள். நான்தான் வற்புறுத்தி எல்லோரையும் கூப்பிடச் சொன்னேன்.''

''ஏன் ஆன்ட்டி....?'' ஆச்சர்யமாகக் கேட்டாள் ரீனா.

''மாநிலத்திலேயே முதல் மாணவியாக வந்திருக்கா சுநீதா. இந்த வருடம் தான், ரொம்ப விமரிசையாகக் கொண்டாடுவீங்கன்னு நாங்க எதிர்பார்த்தோம்....'' என்றாள் அனுராதா.

''அதுதான் இயற்கை.... ஆனால்....''

இடைமறித்து ''பேசாமல் இரும்மா!'' என்றாள் சுநீதா.

''நீங்க சொல்லுங்க ஆன்ட்டி?'' என்று கெஞ்சினாள் ராதிகா.

''சுநீதாவுக்கு மெட்ரிக்கில் தான் முதல் மாணவியாக வந்ததில் கூடச் சந்தோஷமில்லை. ரம்யா முதல் மாணவியாக வராததுதான் ரொம்ப வருத்தம். ஏதோ - ரம்யாவின் பொருளைத்தான் அபகரித்துக் கொண்டு விட்டோமோ என்று மனது உறுத்தலாக இருக்காம்.''

''அப்படியா சுநீதா! அதிசயமான - அற்புதமான மனசும்மா உனக்கு,'' என்று பாராட்டினாள் பமீலா.

''இது மெட்ரிக் தானே? +2 வில் ரம்யாதான் மாநிலத்திலேயே முதல் மாணவியாக வரப்போகிறாள் பாருங்கள் -'' என்றபடி ஐஸ்க்ரீமை எடுத்து எல்லா மாணவிகளுக்கும் வழங்கினாள் சுநீதாவின் அம்மா.

''சரியான ஆரோக்கியமான போட்டி!'' என்று கூறிச் சிரித்தாள் ரீனா.

எல்லோரும் சிரித்தார்கள்.

ரம்யாவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

விருந்து முடிந்தது.

எல்லோரும் விடைபெற்றுச் சென்றார்கள்.

ரம்யா மட்டும் தனியாக இருந்தாள்.

சுநீதா அவளிடம் வந்து ''ரம்யா! எல்லோரையும் விட நீ வந்ததுதான் எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது'' என்று உள்ளம் நெகிழச் சொன்னாள்.

ரம்யா தன் சுடிதாரில் செருகிக் கொண்டிருந்த புத்தம் புதிய விலையுயர்ந்த பேனாவை எடுத்து சுநீதாவிடம் கொடுத்தாள்.

''சுநீதா! இது என் அப்பா எனக்குக் கொடுத்த ஊக்கப் பரிசு. இதை நான் உனக்கு என் அன்புப் பரிசாகக் கொடுக்கிறேன். நீ உன்னுடைய பழைய பேனாவை - ராசியான பேனாவை எனக்குக் கொடுப்பாயா?'' என்று தழதழத்த குரலில் கேட்டாள்.

''அது ரொம்ப சாதாரணமான பேனாதான் ரம்யா. இது ரொம்ப விலை உயர்ந்ததாக இருக்கும் போலிருக்கிறதே....!!'' என்றாள் சுநீதா தயக்கத்துடன்.

''சாதாரணமான பேனாவா? நான் அப்படி நினைக்கவில்லை. உன் பேனா அதிர்ஷ்டக்காரப் பேனா,'' என்று சொல்லி ரம்யா வாய்மூடவில்லை.

உள்ளே போய் தன் பேனாவை எடுத்து வந்து ரம்யாவிடம் கொடுத்தாள் சுநீதா.

அதை வாங்கிக் கொண்ட ரம்யா ஆசையோடு அதை முத்தமிட்டு விட்டுத் தன் சுடிதாரில் செருகிக் கொண்டாள்.

பிறகு விடை பெற்றுச் சென்றாள்.

அவளைப் புரிந்து கொள்ள முடியாமல் யோசனையோடு சிலையாக நின்று கொண்டிருந்தாள் சுநீதா.

வீட்டுக்கு வந்து அம்மாவிடம் விஷயத்தைச் சொன்னாள் ரம்யா.

''உன் பேனாவை அவளுக்குப் பரிசாகக் கொடுத்ததுடன் திரும்பி வந்திருந்தால் நான் பெருமைப்பட்டிருப்பேன் ரம்யா. அவளுடைய பேனாவைக் கேட்டு வாங்கிக் கொண்டுவந்தது எனக்குப் பிடிக்கவில்லை....'' என்றாள் அம்மா.

''அது அதிர்ஷ்டக்காரப் பேனாவாக்கும்...?'' என்றாள் ரம்யா.

''பேனா நன்றாக எழுதக்கூடியதாக வேண்டுமானால் இருக்கலாம். ரம்யா. அதிர்ஷ்டம் சும்மா வந்துவிடாது. கடுமையாக உழைத்தால்தான் முதல் மாணவியாக மார்க் வாங்க முடியுமே தவிர வெறும் பேனா மட்டும் அதிர்ஷ்டத்தைத் தந்துவிடாது. புரிந்து கொள்ளம்மா!''


''அப்படியானால் நான் நன்றாகப் படிக்கவில்லை என்கிறாயா?''

''அப்படிச் சொல்லவில்லை. திறமைதான் அதிர்ஷ்டத்தின் அடிப்படை என்று சொல்கிறேன். சரி, சரி! உடை மாற்றிக் கொண்டுவா'' என்றாள் அம்மா.

தாயைப் பின் தொடர்ந்து சென்றாள் ரம்யா. சுநீதாவின் மீது தனக்கு ஏற்பட்ட பொறாமை அர்த்த மற்றது என்பதை அவள் இப்பொழுது புரிந்து கொண்டாள்.



மியூசிகல் சேர் யாருக்குக் கிடைக்கும்?



ஆண்டவனின் குழந்தைகள்

அந்தக் கிராமத்தில் இந்துக்கள் அதிகம். அவர்கள் கிழக்குப் பகுதியில் வசித்து வந்தனர். மேற்குப் பகுதியில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்கள். பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகள் கொண்டாடும் போது கிறிஸ்துவர்களுக்கும் இனிப்புகள் பலகாரங்கள் கொடுக்கப்படும். அதே போல கிருஸ்துமஸ், நியூ இயர் கொண்டாடப்படும் போது இந்துக்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்று வாழ்த்துக்கள் சொல்லி இனிப்புகள் பெற்று வருவார்கள். மதத்தின் பெயரால் மதம் பிடித்து அலையாது அவரவர்கள் தங்கள் வேலைகளைச் செய்து வந்தனர்.

ஆனால்!....

அன்று ஆரம்பித்த சாதாரணச் சண்டை மதச்சண்டையாக மாறி விட்டது. எல்லாம் தண்ணீர் கஷ்டத்தினால் வந்த வினை. கிழக்குப் பகுதியில் வசிக்கும் பூவாத்தா,மேற்குப் பகுதியில் உள்ள கிணற்றுக்கு நீர் இறைக்க வந்தாள். அப்பொழுது கேணியில் நீர் இறைத்துக் கொண்டிருந்த கிளாரா, ''எங்களுக்கே தண்ணி கிடைக்கறது கஷ்டமா இருக்கு. நீ வேற வந்துப் புட்டே...? போ...! போ...! உங்க பக்கத்துக் கேணிக்கு'' என்று விரட்டாத குறையாகச் சொன்னாள்.

''எங்க வீட்டுக்கு உறவுக்காரங்க வந்திருக்காங்க. சோறாக்க தண்ணி அர்ஜெண்டா வேணும். எங்க பக்கத்து கேணியிலே தண்ணி ஊறினாத்தான் எடுக்க முடியும். அதுக்கு ரொம்ப நேரம் புடிக்கும்'' என்றாள் பூவாத்தா.

''இந்தக் கேணி மட்டும் என்ன வாழுது? நான் எறச்சுக்கிட்டு மிச்சம் இருந்தாதான் உனக்கு விடுவேன். இல்லாட்டி தண்ணி ஊற்று வர வரை காத்திட்டிரு. எனக்கு மட்டும் வூட்டுலே சோலி இல்லையா?'' என்று கிளாரா சொல்லிக் கொண்டே தண்ணீரை இறைக்கும்போது, கிணற்றின் கைப்பிடிச்சுவரின் மீது பூவாத்தா வைத்திருந்த குடத்தின் மீது கையும், கயிறும் படவே.... மறு வினாடி.. பூவாத்தாவின் குடம் நீச்சல் அடிப்பவனைப் போல கிணற்றின் அடிப்பகுதியை நோக்கிக் குதித்தது.


அவ்வளவுதான்! மறுவினாடி பூவாத்தா காளியாத்தாவாக மாறி விட்டாள்.

''எனக்கு தண்ணி வுடக்கூடாதுன்னுதானே வேண்டுமினே என் தோண்டிய கேணிக் குள்ளார தள்ளிபுட்டே. நீ நல்லா இருப்பியா?'' என்று கூச்சல் போட்டாள்.

பதிலுக்குக் கிளாரா, ''நான் ஒன்னும் வேணுமினே தள்ளி விடலே. கை தவறிப் பட்டுடுச்சு. உனக்கு கண்ணு என்ன தெரியலையா?'' என்று கூவினாள்.

அப்புறம் என்ன? இவர்கள் இருவரும் போட்ட சண்டையையும் கூச்சலையும் கேட்டு கிழக்குப் பகுதி மேற்குப் பகுதி மக்கள் 'திபுதிபு' என்று ஓடி வர இரு பக்கமும்.. சமாதான முயற்சி எடுக்கப்படாமல் வாய்ச் சண்டை கைச் சண்டையாக மாறும்

த.ஜானகி



அளவிற்கு வந்துவிட்டது. அது மட்டுமல்ல, அது மதச் சண்டையாகவும் விஸ்வரூபம் எடுத்துவிட்டது. கிழக்குப் பகுதியினர் மேற்குப் பகுதிக்கு வருவதில்லை. தங்கள் தங்கள் குழந்தைகளிடம் கூட அடுத்த பகுதி மக்களிடம் பேசக் கூடாது என்று கடுமையான உத்திரவும் போட்டனர்.

விஷ்ணுவர்த்தனும் டேவிட்டும் தங்கள் கிராமத்து நிலைமையை எண்ணி வருத்தப்பட்டனர். பெற்றோர்களின் கட்டுப்பாட்டிற்குப் பயந்து கொண்டு ஒருவர் வீட்டிற்கு மற்றவர் போவது கிடையாது. ஆனால், பள்ளியில் இருவரும் வழக்கம் போல ஒற்றுமையுடன் இருந்தனர். சண்டை சச்சரவின்றி மக்கள் அனைவரும் ஒற்றுமை என்ற அன்புச் சங்கிலியால் இணைந்து வாழ வேண்டும் என்று இருவரும் தங்கள் தங்கள் கடவுளிடம் வேண்டிக் கொண்டனர்.

வழக்கம் போல அவ்வருடம் மாரியம்மன் பூக்குழி விழா நடைபெற்றது. கரகாட்டம், பொய்க்கால் குதிரை, நையாண்டி மேளம், வாண வேடிக்கை என்று எல்லா அயிட்டங்களும் இருந்தன. ஆனால், கிறிஸ்துவர்கள் கலந்து கொள்ளவில்லை. வேடிக்கை பார்க்கக் கூட வரவில்லை. ஏன்? அவர்கள் அழைக்கப்படவும் இல்லை. ஆனால் பள்ளிக் கூடத்தில் விஷ்ணு கொண்டு வந்து கொடுத்த மாவிளக்கு, தேங்காய், வாழைப்பழம் போன்றவைகளை டேவிட், பால்ராஜ், ஜான், எலிஸா, எஸ்தர், ரோஸி போன்ற எல்லோரும் வழக்கம் போலச் சாப்பிட்டனர்.

மார்ச் மாதம், கிறிஸ்தவர்கள் வழக்கம் போல தேர்த் திருவிழா கொண்டாட ஆரம்பித்தனர். நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் ஆரோக்கிய மாதா குழந்தை ஏசுவைச் சுமந்தபடி அருள் பாலிக்கும் பார்வையோடு அமைக்கப்பட்டிருந்த சிலை வைக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட நேரத்தில் கிறிஸ்தவர்கள் தேரை இழுக்க ஆரம்பித்தனர். ஆனால்.. ஆனால்...

தேர் சிறிது தூரம் கூடச் சென்றிருக்காது. அதற்குள் முதல் நாள் இரவு

பெய்த பலத்த மழையினால் பள்ளத்தில் ஏற்பட்ட சகதியில் தேர்ச் சக்கரங்கள் நன்றாக மாட்டிக் கொண்டு விட்டன. பலம் கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தனர். ஊஹூம்.... தேர் சிறுதும் அசையவில்லை.

வருடா வருடம் இந்துக்களும் சேர்ந்து தேரை இழுப்பார்கள். அன்னைக்கு அளிக்கப்படும் காணிக்கைகள் தேர் இழுக்கும் ஏழைகளுக்கு மிகவும் மலிவு விலையில் கொடுக்கப்படும்.

ஆனால்... இன்றோ... கிழக்குப் பகுதி மக்கள் வேடிக்கை பார்த்தபடி இருந்தனர். கௌரவமோ... ஏதோ ஒரு காரணத்தினால் மேற்குப் பகுதியினர் வலுவில் சென்று கிழக்குப் பகுதியினரை உதவிக்குக் கூப்பிட விழைய வில்லை.

அன்று இரவிற்குள் தேர் அதன் இடத்திற்கு வந்து சேரவேண்டும். என்ன செய்யலாம்? தேர் இழுப்பவர்கள் யோசனையில் ஆழ்ந்தனர்.

அப்பொழுது.....


இ ந் த த் தண்ணிக்காகத்தானே சண்டை போட்டீங்கள்? இந்த கிராமத்துக் கிணறு, வாய்க்கால்களை எல்லாம் எப்படி நிரப்புகிறேன் பாருங்கள் என்று சொல்வது போல் வானம் மழையைத் திடீரென்று வேக வேகமாக அள்ளிக் கொட்ட ஆரம்பித்தது. அவ்வளவுதான்! தேரை அப்படியே விட்டுவிட்டு அனைவரும் அருகில் இருந்த இல்லங்களில் தஞ்சம் புகுந்தனர்.

சரியாக ஒரு மணி நேரம். மழை கொட்டிவிட்டு ஓய்வு எடுத்துக் கொள்ள ஆரம்பித்தது. நீர் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

அனைவரின் சிந்தனையிலும் ஒரே விதமான கேள்விக் குறி. எப்படித் தேரை இழுத்து நகர்த்துவது என்று.

மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்த விஷ்ணுவர்த்தனுக்கு நிலைமையின் அவசரத் தன்மை புரியலாயிற்று. ஏதோ யோசனையுடன் சாப்பிட்டு விட்டு தைரியமாக டேவிட் வீட்டுப் பக்கம் சென்றான். தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த டேவிட், விஷ்ணுவைப் பார்த்ததும் ஓடி அருகில் வந்தான்.

''டேவிட். இரண்டு பகுதியினரும் தங்கள் தங்கள் பிடிவாதத்திலேயே இருக்காங்க. நம்ப பள்ளிக்குப் போன வாரம் புதிதா வந்திருக்கிற தலைமையாசிரியரிடம் செய்தியைச் சொல்



வோம். நல்ல பண்பும், பரந்த உள்ளமும் கொண்ட அவர் நிச்சயம் நம் பள்ளி மாணவ மாணவிகளைத் தேர் இழுக்க அனுப்புவார். என்ன சொல்றே நீ?'' என்றான் விஷ்ணு.

டேவிட்டுக்கு இந்த யோசனை பிடித்திருந்தது. யாரிடமும் ஒன்றும் கூறவில்லை. ஒரே சைக்கிளில் இருவரும் பள்ளியை அடைந்து தலைமை ஆசிரியரிடம் உதவி வேண்டி நின்றனர்.

அடுத்த அரை மணி நேரத்தில் கிட்டத்தட்ட எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அங்கு குழுமினர். இரண்டு பிரிவாகப் பிரிந்து தேரின் வடத்தைப் பிடித்தனர். அந்த மாணவர்களில் இந்துக்கள் இருந்தனர், முஸ்லீம்கள் இருந்தனர், கிறிஸ்துவர்கள் இருந்தனர்... ஏழை வீட்டு மாணவர்களும் இருந்தனர். பணக்கார வீட்டு மாணவர்களும் இருந்தனர். வீட்டில் தெலுங்கு பேசுபவர்கள், உருது பேசுபவர்கள், மலையாளம் பேசுபவர்கள், கன்னடம் பேசுபவர்கள், தமிழ் பேசுபவர்கள் என்று பலரும் இருந்தனர்.

''மாணவச் செல்வங்களே! ஆண்டவரை வேண்டியபடி உங்கள் பலத்தை எல்லாம் ஒன்று சேர்த்துத் தேரை இழுங்கள்'' என்றார் தலைமை ஆசிரியர்.

எல்லோரும் தேரை இழுத்தனர். மறுவினாடி.... பள்ளத்தில் சிக்கியிருந்த தேரின் சக்கரங்கள் கம்பீரமாக மேட்டில் ஏறின, ஓடின! சந்தோஷமான ஆரவார மகிழ்ச்சியோடு தேர் இழுத்துச் செல்லப்பட்டது. நான்கு வீதிகளிலும் கம்பீரமாக பவனி வந்தது. வழக்கம் போல மரியன்னைக்குக் காணிக்கைகள் செலுத்தப்பட்டன. இரண்டு மணி நேரத்திற்குள் தேர் தன் நிலைக்கு வந்து நின்றது.

இது வரை வேடிக்கை பார்த்தவாறு நின்று கொண்டிருந்த இரண்டு பகுதியினரும் திகைப்பினால் மௌனமாகி நின்று கொண்டிருந்தனர். பேசக் கூட வாய் எழவில்லை.. எப்படிப்பட்ட ஒற்றுமை உணர்வோடு மாணவர்கள் எவ்வளவு அருமையாகத் தேரை இழுத்தனர்.

மாணவர்களின் செய்கை இரண்டு பகுதியிலும் உள்ள பெரியவர்களின் உள்ளத்தைத் தொட்டது. அனைவரின் குறுகிய மனக்கதவும் திறந்தது. இது வரை இருந்த அசுத்தமான, புழுக்கமான காற்று வெளியேறியது.

கிழக்குப் பகுதியின் தலைவர் கரு



★ ஜப்பானின் பழைய பெயர் நிப்பான்.

★ ஜப்பான் நாட்டு நாணயம் 'யென்' என்பது.

★ ஜப்பானின் தலைநகரம் டோக்கியோ. இது உலகிலேயே அதிக மக்கள் தொகை உள்ள நகரம் ஆகும்.

★ ஆசியாவிலேயே அழகான நகரம் ஜப்பானில் உள்ள கியோட்டோ.

★ ஜப்பானுக்கு 'உதய சூரியன் நாடு' என்ற பெயரும் உண்டு.

- மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

★ கிரிக்கெட் விளையாட்டில் ஹேட்-டிரிக் என்று சொல்லப்படுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படி என்றால் என்ன தெரியுமா? தொடர்ச்சியாக மூன்று பந்துகளில் மூன்று பேர் அவுட்டானால் 'ஹேட்-ட்ரிக்' இப்பெயர் எப்படி வந்தது என்றால் தொடக்கத்தில் கிரிக்கெட் விளையாடும் போது யாராவது ஒரு வீரர் மூன்று விக்கெட்டுகள் எடுத்தால் அவருக்கு வெள்ளை டாம் ஹேட் பரிசாகக் கொடுத்து கௌரவிப்பார்கள். இதையே ஹேட்-ட்ரிக் எனக் கூறுவார்கள். காலப்போக்கில் இதுவே பழக்கத்தில் வந்து விட்டது.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 14.



ணாகரன்தான் முதலில் பேசலானார்.

''எட்வர்டு ஸார்! உலகின் எல்லா உயிர்களிடமும் நான் இருக்கின்றேன். அதனால் பகைமைக்கு இடம் கொடாது... அன்போது பழகி உங்கள் கடமையைச் செய்யுங்கள், என்று பகவத் கீதையில் கண்ணன் சொல்லியதை இந்துக்களாகிய நாங்கள் கடைபிடிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு, அதை இந்த மாணவர்கள் செய்து காண்பிச்சுட்டாங்க. நடந்ததை எல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்து விடுவோம்'' என்றார்.


''ஆமாம் கருணாகரன் ஸார். 'உலகில் உள்ள அனைவரும் இறைவனின் குழந்தைகள். அனைவரையும் நேசியுங்கள். அவர்கள் உங்கள் சகோதரர்கள்' என்று ஆண்டவராகிய ஏசு சொல்லியிருக்கார். அதைக் கடைபிடிக்காம நாங்களும் சண்டை போட்டோம். தயவு செய்து அதை எல்லாம் மனசுலே வெச்சுக்காதீங்க'' என்றார் மேற்குப் பகுதித் தலைவர் எட்வர்ட்.

''நம்ப தலைமுறை இப்படியே வாழ்ந்துடுச்சுங்க. எல்லா மதங்களும் கடமை, கட்டுப்பாடு, ஒழுக்கம், சகோதரத்துவம், வாய்மை, அகிம்சை, அன்பு போன்ற நல்லவைகளைத்தான் போதிக்கின்றன - என்கிற உண்மையை இந்தத் தலைமுறை உணர ஆரம்பிச்சுருக்கு. இவங்களாவது ஜாதி, மத... மொழி வெறியில்லாத புதிய பாரதத்தை உருவாக்கட்டும். அதற்கு நாம தடைகற்களாக இல்லாம், நம்ப பகைமையை மறந்துவிட்டு வழிகாட்டியாக இருப்போம் என்ன சொல்றீங்க எட்வர்ட்?''

''நீங்க சொன்னதை மனப்பூர்வ மாக ஆமோதிக்கிறோம் கருணாகரன்'' என்று கூறினார் எட்வர்ட்.

அங்கு குழுமியிருந்த மாணவர்கள் குதூகலம் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

டேவிட்டும் விஷ்ணுவும் தலைமையாசிரியருக்கு தங்கள் நன்றியைக் கண்களாலேயே மகிழ்ச்சியோடு தெரிவித்தனர்.



அறிவுள்ள கோழி!

✱ ஒருநாள் முல்லா தம் வீட்டிலிருந்த கோழியை விற்பதற்காகச் சந்தைக்கு எடுத்துச் சென்றார். சந்தையில் அவர் இருந்த இடத்திற்கு அருகில் ஒருவன் ஒரு கிளியை விற்பதற்காகக் கொண்டு வந்திருந்தான். அதை விலை கேட்க வந்திருந்தவர்களிடம் 'கிளியின் விலை நூறு ரூபாய்' என்றான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த முல்லா தம்மிடம் கோழியின் விலையைக் கேட்டவர்களுக்கு, ''கோழியின் விலை இருநூறு ரூபாய்'' என்றார்.


''ஒரு கோழியின் விலை இருநூறு ரூபாயா?'' என்றான் வாங்க வந்தவர்களில் ஒருவன்.

''இதைவிடச் சிறிய பறவையாகிய ஒரு கிளியின் விலை நூறு ரூபாய்க்கு விற்கும் போது அதைவிடப் பல மடங்கு பெரிய பறவையான கோழிக்கு நீங்கள் ஏன் இருநூறு ரூபாய் தரக் கூடாது?'' என்றார் முல்லா.

''கிளி என்றால் சாதாரணமான பறவை என்று நினைத்துக் கொண்டீர்களா? அது நம்மைப் போல் பேசும். அதற்காகத்தான் அந்த விலை'' என்றான் வாங்க வந்தவன்.

''நேரம் காலம் இல்லாமல் எப்பொழுது பார்த்தாலும் வளவளவென்று பேசிக் கொண்டிருக்கும் கிளிக்கு நீங்கள் அதிகப் பணம் தரத் தயாராக இருக்கிறீர்கள். ஆனால் தே சமயம் தன்னிடம் எவ்வளவு அறிவு இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் அடக்கமாக இருக்கும் கோழிக்கு அதிக விலை தர மறுக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் சுத்த முட்டாள்கள்'' என்றார் முல்லா.

- ஆர். ஜெயலட்சுமி, திருநெல்வேலி.



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

✱ என். செந்தில், சூரியமாணிக்கம்.

? இனிப்பான பொருட்களைச் சாப்பிட்டால் எனக்குப் பல் வலிக்கிறது டாக்டர். இதற்கு என்ன காரணம்?

! உன் பல்லில் சொத்தை விழுந்திருக்கும் அல்லது பல் எனாமல் அரித்திருக்கும். இப்படிப்பட்ட சமயங்களில் மட்டுமே இனிப்புப் பொருட்களைச் சாப்பிட்டால் பல் வலிக்கும். எதற்கும் நீ பல் மருத்துவரைக் கலந்தாலோசித்து முறையான மருத்துவம் பெற்றுக் கொள்வது நல்லது.

✱ ப. கணேஷ், திருவெற்றியூர்.


? நீரிழிவு நோய்க்கான காரணமென்ன? அதன் அறிகுறிகள் எவை?

! இன்சுலின் (INSULIN) எனும் ஹார்மோன் நம் தேவைக்கும் குறைவாகச் சுரப்பதால் நீரிழிவு நோய் (DIABETES MELLTUS) வருகிறது. இந் நோயின் அறிகுறிகள் இவை : பகலில் அதிகமாக சிறுநீர் கழித்தல், இரவில் பலமுறை சிறுநீர் கழித்தல், அதிக தாகம், நாவறட்சி, உடல் அசதி, அதிகப் பசி, உடல் எடை குறைதல், தோலில் அரிப்பெடுத்தல், கை, கால்களில் மதமதப்பு, உடம்பில் புண் வந்தால் குணமாவதற்கு காலதாமதம் ஆவது போன்றவை.

✱ வி. விவேகானந்த், சாலிகிராமம்.

? டாக்டர், வெறிநாய்க்கடி நோய் என்பது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதா?

! ஆம், தம்பி. உலகில் மருந்தில்லை; மரணம் நிச்சயம் என்று உறுதியாகச் சொல்வதற்கு ஒரு நோய் உள்ளதென்றால், அது வெறிநாய்க்கடி நோய் (RABIES)தான். காரணம், இந் நோயை உண்டாக்கும் ரேப்டோ வைரஸ் கிருமிகள் வெறிநாய்க்கடித்தவருக்குப்



பரவி, மூளை செல்களை அழித்து விடும் தன்மை வாய்ந்தவை. அதனால் தான் உயிருக்கே ஆபத்து வருகிறது. இந்த மோசமான நோயைக் குணப் படுத்த இன்னமும் மருந்து கண்டுபிடிக் கப்படவில்லை. அதே சமயம் இந் நோய் வராமல் தவிர்ப்பதற்கு நவீன தடுப்பூசிகள் கிடைக்கின்றன. அவற் றைக் காலத்தோடு பயன்படுத்தி வெறி நாய்க்கடி நோயை வர விடாமல் பாது காத்துக் கொள்வதே சிறந்த வழி!

✱ என். சுரேஷ், சேலம் - 5.

? காப்பி, டீ போன்ற பானங் களைக் குடிப்பதினால் உடல்நலத்திற் குக் கெடுதல் என்று சிலரும், இல்லை என்று சிலரும் கூறுகின்றனர். ஒரே குழப் பமாக இருக்கிறது எனக்கு. தெளிவு படுத்துங்கள், ப்ளீஸ்!

! குழப்பம் வேண்டாம், சுரேஷ்! காப்பியில் இருக்கும் 'காஃபீன்' (caffeine) எனும் நச்சும், டீயில் இருக் கும் 'டானின்' (TANNIN) எனும் நச்சும் நம் உடம்பிலுள்ள நரம்பு மண்டலத் தையும், ஜீரண மண்டலத்தையும், இரத்த ஓட்ட மண்டலத்தையும் பாதிப் பதால் பல தொந்தரவுகள் வருவது உண்மை. எனவே, காப்பி, டீ போன்ற பானங்கள் வேண்டாம், சுரேஷ்!

✱ பி. அ. முஸ்தபா கமால், தக்கோலம்.


? குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழிக்கக் காரணம் என்ன, டாக்டர்?


! குழந்தைகளுக்கு ஏற்படும் பயம், பரபரப்பு, ஏமாற்றம், கோபம், பெற் றோர் பாசம் குறைதல், பிறரிடமிருந்து விலகி இருப்பதாக நினைத்தல், அதிகக் கட்டுப்பாடு, வீட்டில் சுதந்திரமின்மை போன்ற பல காரணங்களால் குழந் தைகள் படுக்கையில் சிறுநீர் கழித்து விடுகின்றன. குழந்தைகள் வளர வளர மேற்சொன்ன காரணங்கள் விலகும் போது, இக் குறைபாடு தானாகவே நீங்கி விடும்!


✱ ஆர். முரளி, சைதாப்பேட்டை.

? சளியுடன் இரத்தமும் கலந்து வந்தால், அதற்கு என்னென்ன காரணங் கள் இருக்க முடியும், டாக்டர்?

! சளியுடன் இரத்தம் கலந்து வரு வதற்கான மிக முக்கிய காரணங்கள் இவை : நுரையீரலில் ஏற்படும் காச நோய் (ஹுரு), பிராங்கியெக்டேசிஸ் எனும் மூச்சுக் கிளைக் குழல் விரிவ டைந்த நிலை, நிமோனியா, நுரையீரல் சீழ் கட்டி, நுரையீரல் புற்றுநோய், இருதய வியாதிகள், இரத்தம் உறையும் தன் மையில் கோளாறுகள், கக்குவான் இருமல், தொண்டையில் புண், மார் பில் அடிபடுதல் போன்ற காரணங் களால் சளியில் இரத்தம் கலந்து வர லாம். எதுவாயிருப்பினும் சளியில் இரத்தம் தோன்றினால் உடனே மருத் துவரிடம் காண்பித்து தக்க மருத்துவ முறைகளை மேற்கொண்டால் பின் னால் வரும் ஆபத்துக்களைத் தவிர்க் கலாம், தம்பி!







கேரம் ஒலிம்பிக்கில் இடம் பெறுமா?


உள்ளரங்கு விளையாட்டுகளில் எல்லோராலும் மிக அதிக அளவில் விரும்பி ஆடப்படும் விளையாட்டு கேரம். இது இந்தியாவில் நூறு ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகமாயியது. மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, கனடா, ஹாலந்து, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளிலும் கேரம் விரும்பி ஆடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஐம்பது ஆண்டுகளாக ஆடப்பட்டு வருகின்றது. மத்திய அரசின் கல்வி மற்றும் சமூக நல இலாகாவினால் அங்கீகரிக்கப் பட்ட அகில இந்திய கேரம் சங்கம், 1970 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

இதை ஆட, ஒரு தாங்கி (stand) ஆட்டப் பலகை (board), ஒன்பது வெள்ளை, ஒன்பது கறுப்பு மற்றும் ஒரு சிவப்பு ஆக மொத்தம் 19 காய்கள் மற்றும் ஸ்டிரைக்கர் (striker) ஆகிய உபகரணங்கள் தேவை. ஆட்டக்காரர்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கென்று தனியான ஒரு அடிப்பானைக் (ஸ்டிரைக்கரை) கொண்டு வர வேண்டும்.

ஆடும் பலகை, அதைத் தாங்கும் ஸ்டாண்டு, பலகையின் பரப்பளவு, கனம், வழுவழுப்பு, வெளிப்புற-உட்புறச் சட்டங்கள், காய்களின் அளவு, கனம், ஸ்ட்ரைக்கரின் அளவு, கனம், பைகளின் அளவு மைய வட்டம் போன்ற எல்லாவற்றிற்கும் அளவுகள் உண்டு.

விளையாடும் முறை தெரியுமா?

நாணயம் சுண்டி (Toss) அதில் வெல்பவர் முதலில் காய்களை அடிக்கவும் தனக்கு விருப்பமான சைடில் உட்காரவும் வாய்ப்பைப் பெறுகிறார். முதலில் அடிப்பவர்க்கு




காக்கையண்ணே...! மனிதங்க மாதிரி ஆற அமரக் குளிச்சா எப்படி? சீக்கிரம் காக்கைக் குளி குளிக்க முடி!



"ஆர்டர்.. ஆர்டர் வக்கீல் காக்கையாரே! நீங்க வாதாடறது பற்றி அக்கறையில்லை... கறுப்பு அங்கியோட வாதாடுங்க. கேட்கிறேன்."

"குள்ளமாயிருந்த பையனா இப்படி பனைமரமா வளர்ந்துட்டான்! இவன் பெயர் என்ன?"

"விலைவாசி!"



வெள்ளைக் காய்கள். எதிராளிக்குக் கறுப்புக் காய்கள். சிவப்புக்காய் இருவருக்கும் பொது. முதல் ஆட்டம் முடிந்த பிறகு அடுத்த பல ஆட்டங்களைத் துவங்குவது எதிராளிகள் இருவருக்குமிடையே மாறி மாறி வரும்.

யார் முதலில் தன்னுடைய எல்லாக் காய்களையும் போட்டு முடிக்கிறாரோ அவரே. அந்த ஆட்டத்தில் (போர்ட்டில்) வெற்றி பெற்றவர். அதற்கு முன் (அவர்) சிவப்புக்காயைப் போட்டிருக்க வேண்டும். சிவப்புக் காயைப் போட அதைத் தொடர்ந்து தன்னுடைய காயில் ஒன்றைத் தொடர்காயாகப் follow coin ஆகப் போட வேண்டும். ஆட்டம் முடிந்த பிறகு புள்ளிகள் தரப்படும் விதமானது யார் சிவப்புக் காயைப் போட்டார்கள் என்பதைப் பொறுத்தும், வெல்பவருடைய எதிராளியின் காய்கள் எத்தனை மீதமிருக்கிறது என்பதைப் பொறுத்தும் அமையும். இன்றுள்ள விதிமுறைப்படி சிவப்புக்கு மூன்று புள்ளிகள்.

இப்படி விளையாடி யார் முதலில் 25 புள்ளிகள் (முன்னர் இது 29 புள்ளிகள் என்றிருந்தது) பெறு கிறாரோ, அவரே அந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றவர்.

கேரம் ஆடும்பொழுது நிகழக் கூடிய சில கவையான கட்டங்கள்:

1) ஸ்டிரைக்கரை மட்டும் பைக்குள் போட்டால் ஏற்கெனவே அவர் போட்டிருந்த காய்களில் ஒன்றை மீண்டும் பலகையின் வட்டத்திற்குள் வைக்க வேண்டும். மறு ஆட்டம் கிடையாது.

2) ஸ்டிரைக்கரோடு சேர்த்துத் தன் காயையும் பைக்குள் போட்டால், எவ்வளவு காய்கள் பைக்குள் ஸ்டிரைக்கரோடு விழுந்ததோ அவ்வளவையும் அதற்கு மேல் ஒன்றையும் மறுபடி உள்வட்டத்திற்குள் வைக்க வேண்டும்.

அப்படிப் போட்டவருக்கே மீண்டும் ஆடும் வாய்ப்பு.

3) சிவப்புக் காயைப் போடு முன் தனது காய்களில் குறைந்து ஒன்றை யாவது அவர் போட்டிருக்க வேண்டும். இல்லையேல் அவர் போட்ட சிவப்புக் காயை மீண்டும் சிவப்பு வட்டத்தில் வைக்க வேண்டும்.

4) ஆட்டத் துவக்கத்தில் முதலில் அடிக்கும் (strike) போதே சிவப்புக் காயையும் தொடர்காயையும் ஒரே அடி யில் போட்டு விட்டால் போட்டவர் அடுத்த அடியில் தன்னுடைய மற் றொரு காயையும் போட வேண்டும். இல்லையேல் சிவப்புக் காய் மீண்டும் வட்டத்துக்குள் வந்து விடும்!

5) முதல் அடியிலேயே (strike) சிவப்புக் காயைத் தவிர ஒன்றுக்கு மேற் பட்ட தனது காய்களையும் போட்டு விட்டால் சிவப்புக் காய், போட்ட வருக்கே உரியது.

6) ஏற்கெனவே ஒரு காயாவது போட்டிருந்து, அடுத்து ஒரே அடியில் சிவப்பையும் கூடவே மற்றொரு காயும் போட்டுவிட்டால், சிவப்புக் காய் போட்டவருக்கே உரியது.

7) முதலில் அடிக்கும் (strike) போது சிவப்புக் காய் மட்டும் பையில் போடப்பட்டால் அது மீண்டும் எடுத்து வைக்கப்பட வேண்டும். மறு ஆட்டம் இல்லை. ஆடும் இருவருக்கும் ஒரே ஒரு காய் மட்டும் இருந்து, சிவப்புக் காயும் போடப்படாமல் இருந்தால் கவனமாக ஆட வேண்டும். இதில் அதிக சிக்கல்கள் உண்டு.

i) ஒருவர் சிவப்புக் காயையும் தன் காயையும் போட்டுவிட்டால் அவ ருக்கு 4 புள்ளிகள். ii) தன் காயையோ அல்லது எதிராளி காயையோ போட் டால் (சிவப்புக் காயைப் போடாமல்) எதிராளிக்கு 4 புள்ளிகள்; iii) மூன் றையும் போட்டால் போட்டவருக்கு

3 புள்ளிகள்; iv) சிவப்பைத் தவிர மற்ற இரண்டையும் போட்டு விட்டால் எதிராளிக்கு 3 புள்ளிகள்.

மற்ற விளையாட்டுகளில் இருப்பது போலவே கேரத்திலும் ஸ்டிரைக்கரை வைத்துக் காயை அடிக்கும் முறைக்கு ஸ்டிரெயிட் ஷாட், ஃபிரேம் ஷாட், கேனன் ஷாட், பேக்ஷாட், கட் ஷாட், டபுள் டச் என்று பல்வேறு பெயர்கள் உள்ளன.

தொடக்கத்தில் ஒரு பொழுது போக்கு விளையாட்டாக ஆடப்பட்ட கேரம், நாளடைவில் மிகவும் பிரபலமாகி இப்பொழுது மற்ற விளையாட்டுகளோடு சேர்ந்து உலக அளவில் ஒரு சிறந்த இடத்தைப் பெறும் நிலையில் உள்ளது.


தேசிய அளவில் முதல் இடத்தில் தமிழ்நாடுதான் சென்ற ஆண்டு வரை இருந்து வந்துள்ளது. ஒற்றையர் போட்டிகளில் முதல் இடம் வகிப்பவர் திரு. மரியா இருதயம். இவர்தான் உலக நெம்பர் ஒன் என்பதும் குறிப்பிடத்தக்கது; தமிழ்நாட்டினர் பெருமைப்படக் கூடியது. இவர் நேஷனில் இந்தியன் ஏர்லைன்சுக்காக ஆடுகிறார்.

சென்ற வருடம் இந்தியாவில் நடைபெற்ற முதலாவது உலகக் கோப்பைப் போட்டிகளில் ஆடவர் மற்றும் மகளிர் 'டீம்' போட்டிகளை இந்தியா வென்றுள்ளது.

சமீபத்தில் லண்டனில் முதன் முதலாக ஐரோப்பிய கேரம் சங்கம் துவங்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளில் கேரத்தை முதலில் ஒரு சோதனை (Demonstration) அளவில் பங்குபெறச் செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதற்கு மற்ற நாடுகளின் ஆதரவும் உள்ளது. எனவே, இது ஒலிம்பிக்கில் இடம் பெறும் நாள் அதிக தூரத்தில் இல்லை! இந்தியாவில் அறிமுகமான கேரம் விளையாட்டு உலகளவில் இன்று பிரபலமாகி வருவது இந்தியர்கள் அனைவருக்குமே பெருமையளிப்பதாகும்.

– நீ. சூர்யபிரகாஷ்


எது நீளமானது?




★ AB, CD – எது நீளமானது?
விடை : இரண்டும் ஒரே நீளம்தான்.
– கல்லிடை குமணன்

நமது பூமி

ஆழி





நெருப்புப் பிழம்பாக இருந்த பூமியானது நாளடைவில் குளிர்ந்து இறுகி இப்போதுள்ள பூமியாக ஆயிற்று என்று கருதப்படுகிறது.

பூமி, சுமார் 455 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள், இதை எப்படிக் கணக்கிட்டார்கள்? கதிர் இயக்கமுள்ள உலோகங்கள் சிதிலமாகி, வேறு உலோகமாக மாறுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் கால விகிதங்களைக் கொண்டு, பாறைப் படிவங்களைப் பயன்படுத்தி, விஞ்ஞான அடிப்படையில் கணக்கிடுகிறார்கள்.









கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, 'கோண்டுவானா லாந்து' என்ற பெருங் கண்டம் இப்படித்தான் இன்றைய தென் கண்டங்கள் சேர்ந்து அமைந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

'ஆல்பிரட் வெகினர்' என்ற ஆராய்ச்சியாளரின் கூற்றுப்படி, கண்டங்களின் அமைப்பு காலத்திற்குக் காலம் இப்படி மாறுபாடு அடைந்திருக்கிறது என்று கருதுகிறார்கள்.

பூமி, கோளவடிவமானது என்னும் கருத்தை முதன் முதலில் வெளிப்படுத்திய வர் கி.மு. 525-இல், சாமோசைச் சேர்ந்த பித்தகோரஸ் என்பவர்.





பூமியின் சுற்றளவை முதன் முதல் கண்டுபிடித்துச் சொன்னவர், கி.மு. 276 - ஆம் ஆண்டில் பிறந்த கிரேக்க ஞானி, விஞ்ஞானி, நில இயல் வல்லுநர் 'எராட்டஸ் தெனஸ்'. அவர் ஒரு ஸ்தூபியின் நிழலைக் கொண்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தார். அவர் சொன்னது 25000 மைல்கள். ஆனால், பிற்காலத்தில் கண்டுபிடித்தது 24902 மைல்கள். வித்தியாசம் 98 மைல்கள் தாம்!


கி.மு. 350-இல், கிரேக்கத் தத்துவஞானி அரிஸ்டாட்டில், பூமி உருண்டை வடிவமானது என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தார்.

பூமியின் மொத்தப் பரப்பு சுமார் 5040 லட்சம் சதுர கி.மீட்டர்கள். இதில் நீர்ப்பாகம் 3568 லட்சம் சதுர கி.மீ. அதாவது 70.8 சதவீதம். நிலப்பரப்பு சுமார் 1472 லட்சம் ச.கி.மீ. அதாவது 29.2 சதவீதம்.




பூமியின் குறுக்களவு பூமத்திய ரேகை வழியே 40076 கி.மீ. துருவங்களுக்குத் துருவம் 40008 கி.மீ.
பூமியின் எடை: 5883 மில்லியன், மில்லியன், மில்லியன் டன்கள்!

பூமிக்குள் என்ன இருக்கிறது?






பூமி தோன்றி, உலகில், முதல் உயிரான 'ஒரு செல்' உயிரினங்கள் தோன்றியது 400 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு.




உலகில், முதல் 'பல செல்' உயிரினம் 'கடல் பஞ்சு'தான்.



முதல் மனிதன் தோன்றியது சுமார் 1½ கோடி ஆண்டுகளுக்கு முன்புதான்! நினைக்கும் சக்தியுள்ள மனிதன் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினான்.



முதன் முதல் இந்த மாதிரி உலகப் படத்தை வரைந்தவர் 'டாலமி'. கி.பி. 150. உலகப் படத்தில் குறுக்கு, நெடுக்காக கோடுகள் வரைந்த முதலாமவர் டாலமிதான்!




பூமிக்குப் புவிஈர்ப்பு என்னும் காந்த சக்தி இருக்கிறது. எதனால் இந்த சக்தி இருக்கிறது? இதற்குப் பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. பூமியின் உள்ளே காந்தத் தன்மை அடையக்கூடிய இரும்பு போன்ற தாதுக்கள் இருக்கின்றன. பூமி மிகவும் கனமாக இருப்பதாலும், தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுவதாலும், பூமியின் உட் பகுதியில் இருக்கும் பாய்பொருள் ஓட்டத்தினாலும், ஒரு டைனமோ போல் இயங்கு வதால், எப்போதும் காந்த சக்தி நிலைத்து இருக்கிறது.

பூமியில், இதுவரை அதிகமான ஆழம் தோண்டியவர்கள் ரஷ்யர்கள். அவர்கள் 1983-இல் சுமார் 12 கி.மீ. ஆழம் தோண்டினார்கள்!



பூமி, தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றிவரும் தூரம் 109,42,40,000 கி. மீட்டர்கள். இதற்கு 365¼ நாட்கள் ஆகின்றன.

பூமியின் இந்த வேகம் பல்லாண்டுகளுக்குப் பின் குறைந்து கொண்டே வந்து, ஒரு காலத்தில் சுழற்சி நின்று விடக்கூடும் என்று கருதப் படுகிறது. இது எப்போது? சுமார் 50 கோடி ஆண்டுகளில்!







பூமி சுழலும் வேகம் விநாடிக்கு 29.6 கி.மீ. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவதால், இரவு பகல், பருவகாலங்கள் உண்டாகின்றன. ஆனால், பூமி சுழலும்போது, அதன் பக்கத்தில் வேறு கிரகங்களை நாம் பார்க்க முடியாததால், அதன் வேகம் நமக்குத் தெரியவில்லை. நமக்கு மிகவும் அருகில் உள்ள சந்திரனே 3,20,000 கி.மீ. தூரத்தில் இருக்கிறது!



உலகில், எல்லோருக்கும், இங்கிலாந்தில், கிரீன்விச் நகரில், பிரிட்டிஷ் வான ஆராய்ச்சி நிலையத்தில்தான் பொதுவான நேரம் ஆரம்பிக்கப் படுகிறது. புவியின் மேற்பரப்பு 24 'கால மண்டலங்க'ளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை இரு துருவங்களையும் இணைக்கும் வட்டத்திற்கு உட்பட்டிருக்கும். முழுக்கோணமான 360 டிகிரியை 24-ஆல் வகுத்தால் ஒவ்வொரு மண்டலத்திலும் 15 டிகிரி அடங்கியிருக்கும். ஒவ்வொரு 15 டிகிரிக்கும் 1 மணி நேரம் மாறும். மேற்கு நோக்கிப் பயணம் செய்யும் போது 15 டிகிரிக்கு 1 மணி நேரம் கழித்துக் கொள்ள வேண்டும். கிழக்கு நோக்கிப் பயணம் செய்யும்போது 15 டிகிரிக்கு 1 மணி நேரம் கூட்டிக் கொள்ள வேண்டும். இதனால், மேற்கில், பகல்நேரமாவது இரவு நேரமாவது அதிகமாகும். கிழக்கில் பகல்நேரமாவது இரவு நேரமாவது குறையும்.



ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20-ஆம் நாள், உலகெங்கும் 'பூமிதினம்' கொண்டாடப் படுகிறது. 1970, ஏப்ரல் 22-ஆம் நாள், அமெரிக்காவில் தொடங்கிய இந்த பூமி தினத்தின் நோக்கம்: பூமியில் வாழத்தகுந்த நிலையை, சுற்றுப்புறச் சூழலை மேன்மை படுத்துவது.



கோழிக் குஞ்சுகளின் துக்கம்!

முல்லாவுக்கு மக்கள் பொதுவாகக் கடைப்பிடிக்கும் மூட நம்பிக்கையுடன் கூடிய வழக்கங்கள் பிடிக்கவில்லை. அவ்வாறு செய்வதெல்லாம் வெளி வேஷம் என்று அவர் மக்களைக் குறை கூறுவார்.

வீட்டில் யாராவது இறந்து விட்டால் கறுப்பு உடையணிந்து துக்கம் கொண்டாடுவார்கள் அல்லவா? அந்த மாதிரியெல்லாம் செய்ய முல்லா விரும்பவில்லை. மகிழ்ச்சியாக இருந்தாலும் துக்கமாக இருந்தாலும் தத்தமது மனத்தோடுதான் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, மற்றவர்களுக்குத் தெரியும் விதத்திலே விளம்பரப்படுத்தக் கூடாது என்பது முல்லாவின் அபிப்பிராயமாக இருந்தது.



ஒரு நாள் முல்லாவினுடைய வயது முதிர்ந்த அன்னையார் இறந்து விட்டார்.

முல்லா கறுப்பு உடை அணிந்து துக்கம் கொண்டாடாமல், மற்றபடி முறையோடு தமது தாயாரின் இறுதிச் சடங்குகளைக் குறையில்லாமல் செய்து முடித்தார்.

இறுதிச் சடங்கிற்கு வந்திருந்த உறவினர்களும் மற்றவர்களும் தாயின் மரணத்துக்குக் கூட வழக்கப்படி முல்லா கறுப்பு உடை அணியாதது குறித்துக் கடுமையாகக் கண்டனம்



தெரிவித்தனர். இனி அம்மாதிரியெல்லாம் செய்யக் கூடாது, ஊர் உலகத்தை ஒட்டி செயற்பட வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

இனி அவ்வாறே செய்வதாக முல்லாவும் வாக்குறுதி அளித்தார்.

இரண்டொரு நாள்களுக்குப் பிறகு முல்லாவின் வீட்டுக் கோழிக் குஞ்சுகள் கழுத்திலே, கறுப்புப் பட்டை கட்டப் பட்டிருந்த நிலையில், அங்கு மிங்கும் அலைந்து இரை தேடிக் கொண்டிருந்தன.

அந்த விந்தைக் காட்சியைக் கண்டு தெருவில் சென்ற மக்கள் வியப்படைந்தனர். முல்லாவை அணுகி "என்ன குஞ்சுகளின் கழுத்திலே கறுப்புப் பட்டை கட்டப்பட்டிருக்கின்றதே! என்ன சமாச்சாரம்?" என வினவினர்.

"கோழிக் குஞ்சுகள் துக்கச் சின்னம் அணிந்து துக்கம் கொண்டாடுகின்றன" என்று கூறினார் முல்லா.

"என்னது! கோழிக் குஞ்சுகள் துக்கம் கொண்டாடுகிறதா!" என்று மக்கள் வியப்புடன் கேட்டனர்.

"ஆமாம். ஏன் அவைகளுக்கு மட்டும் துக்கம் இருக்காதா? இல்லை ஏற்படாதா?" என்று திருப்பிக் கேட்டார் முல்லா.

அவர் சரியான பதிலைத் தரவில்லை ஏதோ சுற்றி வளைக்கிறார் என்பது எல்லோருக்குமு புரிந்தது. அது என்ன என்பதை அறிய எல்லோருக் கும் ஆவல். ஆனால் எப்படிக் கேட் பது? யார் கேட்பது?

"உம்முடைய கோழிக் குஞ்சுகளுக்கு என்ன துக்கம் வந்து விட்டது?" என்று மக்கள் கேட்டனர்.

"இந்தக் கோழிக் குஞ்சுகளின் தாய்க் கோழியை என் மனைவி நேற்று இரவு அடித்துச் சமைத்து விட்டாள். ஆகவே இந்தக் கோழிகள் தாயை இழந்து விட்டன. தாயை இழந்த கோழிக் குஞ்சுகள், ஊர் முறைப்படி கறுப்புடை அணிந்து துக்கம் கொண்டாடியாக வேண்டுமல்லவா? அதற்காகத்தான் கோழிக் குஞ்சுகள் கறுப்புப் பட்டை அணிந்து நடமாடுகின்றன" என்று கூறினார் முல்லா!

– ந. நவமணி



★ பல்லிகள் தொகுப்பு அயரவைத்தது!
பி. குமார், சேலம் - 6.

★ அற்பமென்று எண்ணி வந்த அட்டையைப் பற்றி இத்தனையா!
ச.உ.மார்கான், மொரப்பூர்.

★ 'நற்'பணி செய்தேன்' பயனுள்ள செயல்களைச் செய்ய மற்றவர்களுக்கு வழிகாட்டி!
ரமேஷ், மதுக்கூர்.

தெனாலிராமனா!

★ மலைக்கோட்டை மர்மம், தொடக்க முதல் இறுதிவரை விறுவிறுப்புக் குறையாமல் இருந்தது!
பி.அ. முஸ்தாபா கமால், தக்கோலம்.

★ ஒவ்வொரு மாதமும் ஆவலுடன் எதிர் பார்க்க வைத்தது.
பு. பாலு, குண்டூர்.

★ நிறைந்தது என்பதைப் படித்ததும் என்னவோ போல் ஒரு ஏக்கம்!
ரவிராஜன், சென்னிமலை.

★ மணிமாறனை மறக்கவே முடியாது!
ரவி,மயில், சேலம்.

★ கதையும் சரி, செல்வத்தின் படங்களும் சரி, சூப்பர் சார்!
வ. சுந்தரம், கோவை - 2.

★ என்றுமே மறக்க முடியாத படைப்பு!
ரா.ராமநாதன், கோபி.

★ கேளுங்கள் பகுதிக்காகவே நாங்கள் கோகுலம் வாங்குகிறோம்!
ப.பானுமதி, சேலம் - 2.

★ 'சரவணவடிவின் சாதனை' பிரமிக்க வைத்தது. பெண் குலத்தின் சார்பில் பெருமைப்படுகிறோம்!
பி.என். புவனா, பி.என். ஸ்ரீதேவி, மீஞ்சூர்.

★ ஏகநாதர் படக்கதையில் கழுதைக்கும் கருணை காட்டியதைப் படித்தபோது கலங்கினோம்!
தா.ஷாகிலா, செஞ்சி.

★ போட்டி மேல் போட்டி வைத்து அசத்துதே கோகுலம்!
சர்மிளா தேவன், காங்கேயம் - 1.

★ சின்ன பாபு தெனாலி ராமனின் மறு பிறவியா! இப்படிச் சிரிக்கவைத்து வயிற்று வலி வரவழைக்கிறாரே!
ஆ. முருகன், சங்கராபுரம்.

★ 'ரஞ்சிக் கோப்பை' முழுமையான பல புதிய பயனுள்ள செய்திகளைத் தந்தது!
வை. ஸ்ரீராம், மணப்பாறை.

★ 'ஏழாவது பெண்' மிக நன்றாக இருந்தது.
கு. ஆசைத்தம்பி, குடந்தை.

★ பாலை வன நண்பன்! பல புதிய தகவல்களைத் தந்தது!
ஆர்.சத்தியன், அகரக்கம்பனூர்.

★ குறைந்த விலையில், நிறைந்த பயனுள்ள செய்திகளைத் தருவது கோகுலம்!
தா. சிந்துகுமார், திருவட்டார்.

★ 'அட்டைக்கு இருதயம் உண்டா!' வில் 'ஹிருடின், ஹருடின்' என்று வருகிறதே. எது சரி?
சிவா, போரூர்.

'ஹிருடின்' தான் சரியானது! (ஆ.ர்)

★ வட்ட வட்ட வெண்ணிலாவின் கற்பனை, சந்தங்கள் சொக்க வைக்கின்றன!
து. சிவராமன், தூத்துக்குடி.

பூதன் அச்சகத்தில் பூதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : வி. ராஜேந்திரன்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624;
சர்குலேஷன் மனேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-

GET OFF TO A FLYING START *with*




LION
PREMIER® HB PENCILS

Supersmooth for effortless writing. Micronized lead for unbreakable points. Grace the desks of executives and others with style.




LION
PINKY® PENCILS

Perfect classmates. Pretty & Practical. Colourful designs, strongly bonded lead for unbreakable points, give it an edge over the competition







LION *Gee-flo*® BALLPENS

035 carbine 050 carborite

Tungsten carbide tips.
Made with Swiss technology
Unbeatable points. Sharp. Smooth. Non-smudging. Race across the page. Choice of red, black and blue refills. Mini-marvels at a marvellous price.



LION PENCILS LTD.
95, Parijat Marine Drive, Bombay 400 002.

BENSON & HEDGES WORLD CUP 1992

OFFICIAL LICENSEE OF THE WORLD CUP

National-766

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

Now he's cushioned down under.



Walking companions from Action.
For those whose sole passion lies in hiking, strolling, walking, trekking .... adequate ankle support. Comfortable arch design — Superior footwear technology that makes you float while you walk.

Get yourself a quiet walking companion — today.



action®